


கலைஞர் மு.கருணாநிதி

# சக்கரவர்த்தியின் திருமகன்



தில்லை. கதிரவன் (அ). இளவாணன்
மாவட்ட துணை அமைப்பாளர் இலக்கிய அணி.
சென்னை கிழக்கு

மு.க. அறக்கட்டளை
அறிவாலயம்

தி.மு.க. செயல் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களது 65வது பிறந்த நாளையொட்டி அவர் விடுத்த வேண்டுகோளை ஏற்று அவருக்கு அளித்து வரும் புத்தகங்களில் சில புத்தகங்கள் தங்கள் நூலகத்திற்கு வழங்கப்படுகிறது.

**தி.மு.க. தலைமைக் கழகம்,**
அண்ணா அறிவாலயம்,
சென்னை

பேராசிரியர்
நூல்
நிலையம்
சென்னை-18
அறிவாலயம்

# சக்கரவர்த்தியின் திருமகன்

**கலைஞர் மு.கருணாநிதி**

**திராவிடர் கழக (இயக்க) வெளியீடு**
பெரியார் திடல், 84/1 (50), ஈ.வெ.கி. சம்பத் சாலை,
வேப்பேரி, சென்னை - 600 007.

## நூல் குறிப்பு

40482

உ 294.5922

கருணா

| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | சக்கரவர்த்தியின் திருமகன் |
| ஆசிரியர் | : | கலைஞர் மு.கருணாநிதி |
| பதிப்பு | : | முதல்பதிப்பு மே 1956 (வேலூர் திராவிடன் பதிப்பகம்)<br>மறு பதிப்பு - 2018 |
| நூல் அளவு | : | டெம்மி (140 mm x 220 mm) |
| அச்சு எழுத்து அளவு | : | 12 points |
| பக்கங்கள் | : | 80 |
| கட்டமைப்பு | : | இயல்பு (சாதாரணம்) |
| நன்கொடை<br>(குறைந்த அளவு) | : | ரூ. 50/- |
| வெளியீடு மற்றும்<br>உரிமை | : | **திராவிடர் கழக (இயக்க) வெளியீடு**<br>சென்னை - 600 007. ☎: 044 - 2661 8161 |
| அச்சுக் கோப்பு | : | பெரியார் கணினி ஆய்வுக் கல்வியகம்,<br>சென்னை - 600 007. |
| அச்சிட்டோர் | : | 'விடுதலை' ஆஃப்செட் பிரிண்டர்ஸ்,<br>சென்னை - 600 007. |
| கிடைக்குமிடங்கள் | : | பெரியார் புத்தக நிலையம்<br>• பெரியார் திடல், 84/1 (50), ஈ.வெ.கி. சம்பத் சாலை,<br>வேப்பேரி, சென்னை - 600 007. ☎: 044-26618163<br>• பெரியார் மாளிகை, புத்தூர், திருச்சி-620 017 ☎: 0431-2771815 |

www.dravidianbookhouse.com

பெரியார் ஆவணக் காப்பக வெளியீடு-23

த.க. அறக்கட்டளை
பேராசிரியர்
க. அன்பழகன்
நூலகம்
சென்னை-18
சென்னை அறிவாலயம்

# களம் புகுமுன்...!

## (முதல் பதிப்பிற்கான பதிப்புரை)

"வேலூர் என்றால் உமது பதிப்பகம், உமது பதிப்பகமென்றால் வேலூர் நகரக் கழகமும்தான் எங்கள் மனதிலே தோன்றி மறையும். திராவிடர் கழகம் தோன்றுவதற்கு முன்னரே நமது இலட்சியம் பாடும் அறிவு நூல்களை வெளியிட்டு நம்மவர் உள்ளங்களிலே நல்லதோர் இடத்தைப் பெற்றிருக்கிறது உமது பதிப்பகம்" என்று இயக்கத் தலைவர்களும், செயல் வீரர்களும் அவ்வப்போது சொல்லக்கேட்டு நாம் அகமகிழ்ந்திருக்கிறோம்.

நேற்றும் சரி, இன்றும் சரி, இயக்கக் கருத்துக்களுக்கு மாசு கற்பிக்கும் எந்த நூல்களையும் நமது பதிப்பகம் வெளியிட்டதில்லை. நமது கொள்கையைப் பிரதானமாக மனதிலே வைத்து மிகக் குறைந்த விலையில் பல நூல்களை வெளியிட்டு நமது தோழர்களுடைய மனதிலே என்றென்றும் நிலையான ஓர் இடத்தைப் பிடித்துக் கொண்டுள்ளோம் என்பதைப் பெருமையோடு சொல்லிக் கொள்கிறோம்.

இப்போதும் அந்த இலட்சிய தாகத்தில் தான் புதிய தெம்போடு நம் தலைவர்களுடைய சிந்தனைக்கருவூலங்களை வெளியிட முன் வந்துள்ளோம். இந்நூலிலிருந்து பதிப்பகம் புதுவேகம் பெற்று அக்கறையோடு பணியாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் திராவிடத்தின் எழுத்து மன்னர்! சிறுகதைச்சிற்பி! விடுதலை வீரர், புரட்சிக் கலைஞர், மு.கருணாநிதி அவர்கள் தீட்டிய **"சக்கரவர்த்தியின் திருமகனை"** நூல் வடிவாக்கித் தந்திருக்கிறோம்.

கலைஞர் மு.க. அவர்களைப்பற்றி உங்களுக்கு சொல்ல வேண்டியதில்லை. என்றாலும், 'திராவிடன்' பதிப்பகம் - என்கிறபோது அவரைப்பற்றி சொல்லாமலிருக்க முடியாது.

கலைஞர் மு. க. அவர்கள் நமது பதிப்பகத்திலே நீங்காத பற்றுக் கொண்டவர்கள். கேட்கும் போதெல்லாம் கேடயம் போன்ற நூல்களைக் கொடுத்து ஆதரித்து வருபவர்! அவருடைய புதுமை இலக்கியங்களில் பெரும்பாலானவை நமது பதிப்பகம் வழியாக வெளிவந்திருப்பதை நினைக்கும்போதெல்லாம் நாம் மிகவும் மகிழ்ச்சியடைவதுண்டு!

சாகாவரம் பெற்ற அந்தக்கீர்த்திக்கு மென் மேலும் ஒளிதரும் வகையில் இன்னொரு புத்தகத்தை கலைஞர் நமக்குத் தந்துதவியிருக்கிறார்! தென்புலத்தின் மாண்பை அழித்திட ஆச்சாரியார் செய்த இலக்கிய புரட்டை அம்பலமாக்கும் கலைஞரின் "சக்கரவர்த்தியின் திருமகனு"க்கு திராவிடத்திலே நல்ல வரவேற்பு கிடைக்குமென்றே திடமான நம்பிக்கை எமக்குண்டு!

தங்களது புதிய புத்தகம் வெளியிட விருப்பப்பட்டுள்ளோம் என்று தெரிவித்த போது "முரசொலி" தொகுப்பைப் பார்த்து தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள் என்று கலைஞர் அவர்கள் அன்புடனும் உரிமையுடனும் சொன்னதை நாம் என்றென்றும் மறக்க முடியாது.

அவரது "முரசொலி" இதழில் தொடர்ந்து எழுதி வந்த "சக்கரவர்த்தியின் திருமகன்", "குறளோவியம்" ஆகிய இரண்டு நூல்களையும் தேர்ந்தெடுத்து அவரிடம் காண்பித்தோம். மிகுந்த மகிழ்ச்சி! வெளியிட்டுக் கொள்ளுங்கள் என்றார் கலைஞர்!

இவையிரண்டும் தாயகத்தின் புகழ் சொல்லும் ஒளி முத்துக்கள் - தசைமிகு பொன்மணிகள் - சொற்சுவை நிறைந்த அவரது பொருட் புதையல் எங்கள் பதிப்பகம் வாயிலாக வெளிவருவதை நினைத்து பெரிதும் மகிழ்ச்சியடைகிறோம்.

இதுகாறும் பதிப்பகத்தை ஊக்குவித்தது போல் இன்றும் நல்ல நூல்களைக் கொடுத்து நல்லாதரவு தந்த கலைஞர் மு.க. அவர்களுக்கு, நாம் என்றென்றும் கடமைப்பட்டிருக்கிறோம்.

இந்த நூல் வெளிவர பெரிதும் துணைபுரிந்த முரசொலி திரு. மாறன் எம்.ஏ. அவர்கட்கும், தோழர் முல்லை - சத்தி அவர்கட்கும் மற்றுமுள்ள தோழர்கட்கும் எங்களது அன்பு நிறைந்த நன்றியறிதலை தெரிவித்துக் கொள்கிறோம்,

பதிப்பகம் ஆரம்பமுதல் இதுவரையிலும் எங்களோடு ஒத்துழைத்து வரும் நமது சகோதரர் ஓவியர் திரு. எம்.சாமுவேல் அவர்கட்கும் எங்களது மனமுவந்த வணக்கத்தைத் தெரியப்படுத்திக் கொண்டு உங்கள் அனைவரையும் இராம காதை ஆராய்ச்சிக் களத்திற்கு அனுப்பி வைக்கிறோம்.

**என்றும் உங்கள்**

**கோ.கிருட்டிணன்**

**உரிமையாளன், 'திராவிடன்' பதிப்பகம்**

ஜ★ஜ

# பொருளடக்கம்


பக்கம்

1. சக்கரவர்த்தியின் திருமகன் ..... 7
2. தேகமும் உணர்வும் ..... 14
3. சதி நிரூபிக்கப்படுகிறது ..... 20
4. காமராஜன் ஆட்கொண்ட தசரதராஜன்! ..... 24
5. பரத்துவாஜர் ஆஸ்ரமமா - பாரீஸ் நகரத்து 'பாரா'? ..... 28
6. இராமன் காடேகியது ஏன்? ரிஷியின் சாபமா? கைகேயி கோபமா? ..... 36
7. விபீஷணருக்கு விடை யளிப்போம்! ..... 41
8. நாடாண்ட மன்னன் நாதியற்று செத்தான் ..... 48
9. தந்தை மகனும் தருமம் தவறியவர்கள்! ..... 53
10. விஷ்ணு அவதாரம் எனப்படும் ராமனிடம்! ..... 59
11. நடப்பதெல்லாம் நாராயணன் செயலா? ..... 63
12. மாரீசனைத் துரத்திச் சென்ற ராமனிடம் ..... 69
13. துரோகிகள் சந்திப்பு! ..... 72
14. காரியமாகும் வரையில் காலைப் பிடி! ..... 77

# 1 சக்கரவர்த்தியின் திருமகன்

'சக்கரவர்த்தி திருமகன்' என்ற தலைப்பில் ஆச்சாரியார் அவர்கள் 'கல்கி' இதழில் தொடர்ந்து எழுதி வருவது வாசகர்கள் அறிந்ததே. இதுவரை பத்து கட்டுரைகள் வந்துள்ளன. திருமாலின் பத்து முரண்பட்ட அவதாரங்களைப் போலவே - ஆச்சாரியாரின் பத்து கட்டுரைகளும் ஒன்றுக்கொன்று முரண்பட்டு நிற்கின்றன. அந்த தசாவதார கட்டுரைகளைப்பற்றி மொத்தமான விமர்சனத்தை மட்டும் இந்த இதழில் கூறிவிட்டு - அடுத்து வாரந்தோறும், ஆச்சாரியாரின் -அதாவது சக்கரவர்த்தியாரின், **திருமகனைப்பற்றி** - ஆச்சாரியாரைப் பின்தொடர்ந்து - அவர் எப்படி யெப்படி வளைவான பாதைகளில் போகிறார், தம் இனத்தை வாழ்விக்க - என்பதைக் கண்டு, அப்படிக் கண்டதை அவ்வப்போது உங்களுக்கு "முரசொலி" அறிவிக்கும்.

சகல சிறப்போடும் நடைபெற்று முடிவுற்றது தசரதன் செய்த அஸ்வமேதயாகம். அப்போது தசரதன் மனைவியர் அருந்துமாறு தேவபாயசம் அருளப்பட்டது. தசரதன் துணைவியர் மூவரும் தேவபாயசத்தை பங்கு போட்டு அருந்திக்கருவுற்றனர். அதை விவரிக்கிறார் ஆச்சாரியார் : படியுங்கள்!

"பாயசத்தில் அருந்திய பங்கின் விகிதாசாரப்படி இந்த நான்கு குமாரர்களுக்கும் விஷ்ணு அம்சம் சொல்லப்படுகிறது. முறையே ராமன் விஷ்ணுவில் பாதியென்றும், லக்ஷ்மணன் விஷ்ணுவில் கால்பகுதி என்றும், பரதனும் சத்ருக்கனனும் ஒவ்வொருவர் அரைக்கால் பங்காகவும் சொல்லப்படுகிறது."

1954 - ஜூன் 6ஆம் நாள் 'கல்கி' இதழில் சக்கரவர்த்தித்திருமகன் கட்டுரையில் ஆச்சாரியார் எழுதிய வாசகங்கள் மேலே இருப்பவை, ஜூன் 6-ஆம் தேதி கட்டுரைக்கு அதே ஆச்சாரியார் மே மாதம் 23ஆம் தேதி பதில் சொல்லியிருக்கிறார், இராமன் விஷ்ணுவின் அவதாரம் என்று ஜூன் 6இல் கூறுகிறார். 15 நாள் முன்னதாக ராமன் அவதாரமா என்ற வினாவுக்கு விடையளித்திருக்கிறார், படியுங்கள் அதையும்.

"வால்மீகி ராமாயணத்தில் காணப்படும் ராமன் ஒரு சிறந்த ராஜகுமாரன், வீரபுருஷன், அபூர்வமான குணங்கள் பெற்றவன். அம்மட்டே; கடவுள் அல்ல."

"வால்மீகி ரிஷியின் காவியத்தில் இராமன் ஒரு மகா புருஷன், ஈஸ்வர அவதாரமாக வைத்து எழுதவில்லை."

**(மே. 23, 'கல்கி'யில் ஆச்சாரியார்.)**

'சக்கரவர்த்தித்திருமகன்' ஒரே தொடர் கட்டுரை. ஒருவரே எழுதுகிறார் - அவரும் ஒரு சக்ரவர்த்தி - அவரே மே 23க்கும் ஜூன் 6க்குமிடையே இந்த அளவுக்கு முரண்படுகிறார், ஜூலை 18ஆம் நாள் 'கல்கி'யில் அவரது கட்டுரையில் குறிப்பிடுவதாவது:-

"தமிழர்களுக்கு, "நீங்கள்தான் புராணத்தில் அரக்கர், என்று சொல்லப்பட்டவர்கள்" என்கிற புதுப்பட்டம் அளிப்பதற்குப் பழைய தமிழ் நூல்களில் ஆதாரம் எங்கும் இல்லை. அவர்களைத் தமிழர்கள் என்றும் - தம் முன்னோர்கள் என்றும், சிலர் இக்காலத்தில் அறிவீனமாக எண்ணியும் பேசியும் வருவது பரிதாபம்."

அரக்கர் எனக் கூறப்பட்டவர் தம் முன்னோரே என்று எண்ணியும் பேசியும் வருவது அறிவீனமாம்! அறிவீனமாம் தோழர்களே அறிவீனமாம்! அறிவுக் கடல் எனத் தன்னை எண்ணியிருக்கும் அகந்தை நிறை ஆச்சாரியார் கூறுகிறார்: அறிவீனமென்று! அவருக்கு பண்டித நேருவின் மொழிகளையே பதிலாகத் தர விரும்புகிறேன்.

"உண்மையை உரைக்குமிடத்து, ராமாயணக் கதையானது ஆரியர்கள் தென்னாட்டின்மீது படை எடுத்துச் சென்ற போது அவர்களுக்கும் திராவிடர்களுக்கும் நடந்த சண்டையைப் பற்றிக்

கூறுகிறதென்று சொல்லலாம். மகாபாரதம் ஆரியர்களுக்கும் திராவிடர்களுக்கும் நடந்த சண்டையைப் பற்றிச் சொல்லவில்லை, ஆரியர்களுக்கும் ஆரியர்களுக்கும் நடந்த சண்டையைப் பற்றித்தான் அது சொல்கிறது. "தென்னிந்தியாவில் இன்றைக்கும் திராவிடர்களே வசித்து வருகின்றனர்."

1928ஆம் ஆண்டு பண்டித நேரு, இமாலயத்தில் மசூரியில் இருந்த தனது மகள் இந்திராவுக்கு எழுதிய கடிதத்தில் மேற்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார். "ஜவஹர்லால் நேருவின் கடிதங்கள்" என்ற புத்தகத்தில் இந்த உண்மைகளைக் காண முடியும். ஆச்சாரியார் என்ன சொல்லுகிறார் - ஆசியஜோதியாம் - அவரது தலைவராம் - நேரு பண்டிதரும் அறிவீனத்தின் பாற்பட்டவரே என்று கூற முன் வருவாரா? - அல்லது தான் விரிக்கும் பொய்மை வலையை தானே அறுத்து விடுவாரா?

இன்னும் கவனியுங்கள் ஆச்சாரியார் முரண்படும் விதங்களை!

"முற்றிலும் வால்மீகியே கொடுத்த பாத்திரம் ராமனும் ராவணனும்! ராவணனைப்பற்றி வேறு கதையோ சரித்திரமோ இருந்ததா? இல்லை. வால்மீகிக்கும் முன்னதாக யாரேனும் ஒரு புராணமோ, பாட்டோ, சரித்திரமோ, அல்லது கல் சாசனமோ எழுதியிருந்து அதில் விஷயங்கள் வேறு விதமாக எழுதியிருப்பதைக் காண்கிறோமா? இல்லை;"

இது ஜூலை 18ஆம் நாள் ஆச்சாரியாரின் எழுத்து. இதே ஆச்சாரியார், மே 23ஆம் தேதி எழுதுவதையும் கூர்ந்து கவனியுங்கள்.

"வால்மீகி ரிஷியானவர், ராமாயணம் பாடுவதற்கு முன்னமேயே அதாவது புராதன காலந்தொட்டே - சீதாராம சரித்திரம் மக்களிடையே எழுத்து வடிவம் பெறாமலே, பல நூற்றூண்டுகள் வாய் வழிக்கதையாக வழங்கி வந்திருப்பதாகத் தோன்றுகிறது. கர்ண பரம்பரையாக முன்னமே இருந்த ராம சரித்திரத்தை எடுத்துக்கொண்டு, அதற்கு வால்மீகி பகவான் நூல் வடிவம் கொடுத்தாற்போல் தோன்றுகிறது."

மே 23ஆம் தேதி மேற்கண்டவாறு எழுதிய ஆச்சாரியார், ஜூலை 18ஆம் தேதி அதே 'கல்கி'யில்,

“ராம காதையைப் பற்றிய விஷயங்களைப் பெற்றது வால்மீகி நூல் வழியேதான்; வேறு எங்கிருந்தும் அல்ல!” என்று உறுதியாகக் கூறுகிறார்! - இன்னும் பாருங்கள் சக்கரவர்த்தியாரின் முரண்பாட்டை!

“வால்மீகிக்கு முன்னதாக, யாரேனும் ஒரு புராணமோ பாட்டோ - சரித்திரமோ - அல்லது கல்சாசனமோ எழுதியிருந்து அதில் விஷயங்கள் வேறு விதமாக எழுதி வைத்திருப்பதைக் காண்கிறோமோ? அப்படி ஏதேனும் இருந்திருக்கும் பட்சத்தில் வால்மீகி முனிவரானவர், ராமனுக்கும் தேவர்களுக்கும் பட்சபாதமாக மாற்றியும் விஷயங்களை மூடியும் மறைத்தும் சொல்லி சமாதானங்களைக்காட்டி நம்மை ஏமாற்றுகிறார் என்று ஒரு வேளை வாதாடலாம்.

முதலிலே ஒரு கதையிலிருந்து அதை மூடி மறைத்து மழுப்பிச் சொன்னால் அதை “ஏமாற்றுதல்” என்று கூறலாம் என்பதாக ஜூலை 18ஆம் தேதிய இதழில் குறிப்பிடுகிறார். ராமர் கதையை முதலில் எழுதியது வால்மீகி. வால்மீகி, ராமனை பெரிய வீரனாக சித்தரித்தார். அந்த வீரனை அவதார புருஷனாக மாற்றினார் கம்பர். இதை தனது முதல் கட்டுரையில் ஆச்சாரியார் அவர்களே, குறிப்பிட்டிருக்கிறார். இதை “ஏமாற்றுதல்” என்று ஆச்சாரியார் ஒப்புக்கொள்ளுவாரா? மாட்டாரா? இப்போது! - அது மட்டுமல்ல; வால்மீகிதான் ராமாயணத்தின் கர்த்தா - அந்த வால்மீகி சிருஷ்டித்த அகல்யா என்ற பாத்திரத்தை கம்பர் மாற்றி திருத்திவிட்டார். இதை தனது பாஷைப்படி - கம்பர் நம்மை ஏமாற்றுகிறார்” என்று ஆச்சாரியார் உரைத்திட முன் வருவாரா? அகல்யாவைப் பற்றி ஆச்சாரியாரே தீட்டுகிறார் கவனியுங்கள்!

**குடிசை நுழைந்த பூமான்!**

“ஒரு நாள் இந்திரன், சமயம் பார்த்து, ஆசிரமத்தில் முனிவர் இல்லாத காலத்தில் கவுதமருடைய உருவத்தையும் முனி வேஷத்தையும் தரித்துக்கொண்டு ஆசிரமத்துக்குள் புகுந்தான். அகலிகையின் உலக பிரசித்தமான அழகை நினைத்து அவளை அடையும் கெட்ட எண்ணத்துடன் வந்தான்; இவ்வாறு திருட்டுத்தனமாக வந்த தேவராசன் அகல்யா தேவியைப் பார்த்து, ‘அழகியே எனக்கு ஆசை மேலிட்டிருக்கிறது. இந்த நிலையில் காலப்பொருத்தம் பார்க்கலாகாது. நாம் கூடுவோம்’ என்று முனிவர் சொல்லுவதுபோல் சொன்னான்.

ரிஷியின் மனைவி உடனே விஷயத்தைத் தெரிந்து கொண்டு விட்டாள். இவன் தன் புருஷன் அல்ல. இந்திரன் என்பது தனக்குத் தெரிந்துவிட்டது. ஆயினும் தேவராஜனே தன்னைத் தேடிவந்தான் என்று தன் அழகைப்பற்றி கர்வப்பட்டு மனநிலையிழந்துவிட்டாள். தேவராசனுடைய விருப்பத்திற்கு உடன் பட்டுவிட்டாள்.

பிறகு "தேவராஜனே, சீக்கிரம் அப்புறப்பட்டுப்போ பெரும் அபாயத்திலிருந்து எப்படியாவது காப்பாற்றிக்கொள் என்று எச்சரித்தாள்."

ஜூலை 18ஆம் தேதி இதழில் அகல்யாவைப்பற்றி ஆச்சாரியார் எழுதியுள்ளதுதான் மேலேயிருப்பது.

"இது வால்மீகி ராமாயணத்திலுள்ள அகலிகைக் கதை, மற்ற புராணங்களிலும் கதைகளிலும் சில விஷயங்கள் பேதப்பட்டு வழங்கி வருகின்றன. அதனால் குழப்பம் வேண்டியதில்லை" என்றும் ஆச்சாரியார் போதிக்கிறார், மூலக் கதையிலேயுள்ள உண்மை பேதப்படுமேயானால் அப்படி பேதமுண்டாக்கி எழுதியவர் நம்மை ஏமாற்ற எண்ணுகிறவர் என்று வாதிடலாம் எனச் சொல்லிய ஆச்சாரியாரே - அதனால் குழப்பம் வேண்டியதில்லை யென்றும் கூறுவதுதான் விந்தை! தலைவலி ஏற்படுகிற அளவுக்கு குழப்பத்தை உண்டாக்கிவிட்டு, குழப்பம் வேண்டியதில்லை என்றும் அறிவுரை பகருகிறார்.

"மொத்தத்தில் தேவர்கள் நல்ல சுபாவம் கொண்டவர்கள் அவர்களிலும் சிலர் தீயகாரியங்களைச் செய்து அதனால் கஷ்டமும் படுவார்கள்.

ராட்சசர் என்பவர் அதர்மத்துக்கு கொஞ்சமும் பயப்படாத துஷ்டர்கள், குலம், ராட்சதர்களிலும் கூட ஒரு சிலர் அறிவாளிகளும் நல்லவர்களும் இருந்தார்கள்."

ஜூலை 18 இதழில் ஆச்சாரியார் எழுதுகிறார் இப்படி! அதே இதழில்தான் தேவர்களின் தலைவன் இந்திரனும், தேவரிஷியின் மனைவி அகலிகையும் கள்ள இன்பத்தில் ஈடுபட்ட கதையையும் அவர் வரைந்திருக்கிறார், வால்மீகி ராமாயணத்தில் ராமன் கதாநாயகனாம்

ராவணன் வில்லனாம்! கதாநாயகன் ராமன், கற்பிழந்த அகலிகை சாபவிமோசனம் பெற்றதும் அவள் காலில் விழுந்து வணங்குகிறான், அதையும் ஆச்சாரியார் எழுத தவறவில்லை, பலாத்காரத்தினால் கற்பிழந்த பாவையரையே சமுதாயம் தீண்ட மறுக்கிறது. அந்தச் சமுதாயத்தைக் கண்டிக்க வக்கற்ற சக்கரவர்த்தியார், "பெரிய மனுஷனே கை பிடித்திழுக்கும்போது எப்படி மறுப்பது" என எண்ணி கற்பைப் பறிகொடுத்த அகலிகையை ராமனை விட்டே வணங்கச் சொல்லுகிறார், வெட்கக் கேடு! வெட்கக் கேடு! தேவர்கள் நல்லவர்களாம் - சிலர் தான் கெட்டவர்களாம். தேவராஜனாம் இந்திரனின் நடத்தையே இப்படியிருக்கும்போது அவன் குடிபடைகள் எப்படியிருப்பார்கள் என்று கூறவும் வேண்டுமா? -இராவணன் தீய குணத்தானாம் - தேவர்கள் நல்லவர்களாம் - காமச் சேட்டையோடு மட்டும் முடியவில்லையே, அந்தக் கயவர்களின் கதை! ஆச்சாரியாரே அவரையுமறியாமல் எழுதுகிறார் படியுங்கள்!

**குதிரை திருடிய கோமான்!...**

"அம்சுமான் என்ற ராஜ குமாரன் மிகவும் குணசாலி. சீலமும் அறிவும் பொருந்தியவன். சகரனுடைய அசுவமேத யாகத்துக்கான குதிரையை அம்சுமான் ராஜகுமாரன் காத்து வந்தான். ஆனால் இந்திரன் ராட்சத வேடம் பூண்டு வந்து அந்தக் குதிரையைக் கொண்டுபோய், மகாவிஷ்ணுவாகிய கபிலர் பக்கம் மறைத்து விட்டான், குதிரையைத் தேடிப் போன சகரபுத்திரர்கள் அறுபதினாயிரம் பேரும், கபிலர் தான் குதிரையை திருடியது என சந்தேகப்பட்டு பாய்ந்தார்கள். கபிலர் அந்த அறுபதினாயிரம் பேரையும் சாம்பலாக்கி விட்டார்."

ஜூலை 4ஆம் தேதி இதழிலே ஆச்சாரியார் தந்த கதை இது! நல்லவனிடம் இருந்த குதிரையை இந்திரன் திருடிப்போய் கபிலரிடம் ஒளித்த காரணத்தால் அறுபதாயிரம் பேர் ஏக காலத்தில் அணுகுண்டு பட்டதுபோல சாம்பலாகியிருக்கிறார்கள். இந்த தேவர்கள் நல்லவர்களாம்; ஆச்சாரியார் முரண்பட்டு, முரண்பட்டு, முணகுகிறார்! சக்ரவர்த்தித்திருமகன் மூலம் சாய்ந்து வரும் ஆரியத்துக்கு சப்பைக்கட்டு போடுகிறார் - பாவம்.

யாகங்களை அழிக்கும் அரக்கரை அழிக்கவே விஸ்வாமித்திரன் ராம இலக்குமணர் இருவரையும் அழைத்து வந்தான் எனக் கூறும் ஆச்சாரியார், ஜூலை 4ஆம் தேதி இதழில் ஒரு உண்மையை உளருகிறார் பாருங்கள் - தேவர்கள் நல்லவர்கள் - ஒரு சிலர் கேடு செய்யலாம் என்று ஓர் இதழில் எழுதிய அவர் - இதோ தேவர்கள் அனைவரையுமே தீயவராக்குகிறார் 'கல்கி'யில்!

"அசுவமேதயாகங்களைத் தடை செய்வது தேவர்களுடைய வழக்கம்."

இப்படி முன்னுக்குப் பின் உதைக்கிற நிலைமையிலே, ஆச்சாரியாரின் - ஆம் - சக்கரவர்த்தியாரின் செல்வத் திருமகன் -வளர்ந்துகொண்டு போகிறான், சரிந்து போய்க் கொண்டிருக்கும் ஆரிய சாம்ராஜ்யத்தைத் தூக்கி நிறுத்தலாம் என்ற அவரது கனவு பலிக்காது - நிச்சயம் பலிக்காது - என்பதற்கு அவரது முரண்பட்ட கட்டுரைகளே சான்று பகருகின்றன. பார்ப்போம்; இன்னும் "திருமகன்" எந்தெந்தத் திக்கில் நடை போடுகிறான் என்று!

ஐ✶ஒ

# தேகமும் உணர்வும் 2

"ஆனந்தமாக - ஆண்டுகள் பன்னிரெண்டு ராமனும் சீதையும் அயோத்தியில் சுகம் அனுபவித்தார்கள். இனி, உலகில் மக்கள் படும் இடையூறுகள், துயரங்கள், கோபதாபங்கள் - எல்லாவற்றையுமே பகவானும் ஈஸ்வரியும் நேராக ஊனுடலில் அனுபவிக்கப் போகிறார்கள்."

புரிகிறதா நண்பர்களே! புரோகிதர் தலைவரின் பொருள் பொதிந்த போக்கு! ராமாயணத்தில் வரும் கதாபாத்திரம் ராமன் இனி வரும் கட்டங்களில் எல்லாம் செய்யப்போகும் தவறுகளுக்கு இப்போதே திரை போட்டுக்கொள்ள விரும்புகிறார் ஆச்சாரியார். சென்ற இதழில் (ஆகஸ்டு 154) ராமன், சீதை முதலியவர்களை கதாபாத்திரங்களெனக் கூறியதோடு நிற்காமல் சீதையின் அழகு, தேவலோகத்து சீதேவியின் அழகு போன்றது என இருவரையும் வேறுபடுத்திப் பிரித்துக் காட்டி, சீதையை மானிடப் பெண் என்றே எடுத்துக் காட்டிய மேதை ஆச்சாரியார் - ராமன் ராஜகுமாரனே தவிர - கடவுள் அல்ல என்று திட்டவட்டமாக எழுதத் துவங்கிய சக்கரவர்த்தியார் - இப்போது கூறுகிறார்; பகவானும் ஈஸ்வரியும், மக்கள் படும் இடையூறுகள் - துயரங்கள் - கோபதாபங்கள் எல்லாவற்றையும் நேராக ஊனுடலில் அனுபவிக்கப் போகிறார்கள் என்பதாக! பகவான், தன் பத்தினியைக் காட்டுக்கு விரட்டலாமா? பகவான் மறைந்திருந்து ஒரு வீரனைக் கொல்லலாமா? இப்படியெல்லாம் இனிமேல் கேள்விகள் எழும் எனப் பயந்துதான் - ஆச்சாரியார் பகவானை மனித குணத்துக்கு அடிமையாக்க முயலுகிறார். அப்படி அவர் சொல்லும்போதும் ஏற்படுகிற வேடிக்கையான முரண்பாட்டைப் பாருங்கள். நன்றாக கவனிக்க வேண்டும் நண்பர்களே, நன்றாகக் கவனிக்கவேண்டும்.

"பன்னிரண்டு ஆண்டுகள் ஆனந்தமாக ராமனும் சீதையும் அயோத்தியில் சுகம் அனுபவித்தார்கள்."

ஆச்சாரியார்தான் எழுதியிருக்கிறார், ராஜகுலத்தில் உதித்த அந்த இன்ப ஜோடிகள் எப்படி யெப்படி தங்கள் காதல் கீதத்தைப் பாடியிருப்பார்கள் என்று நாமும் ஒரு முறை வர்ணிக்க வேண்டுமா என்ன? நான் சொல்ல வந்த விஷயம் அதுவல்ல! பகவானும் ஈஸ்வரியும் மனித குணங்களுக்கு உட்பட்ட, இடையூறு, கோபதாபம், எல்லாவற்றையும் அனுபவிக்கப் போகிறார்கள் என்று ஆச்சாரியார் கூறுவது எந்தக் காலத்திலிருந்து தெரியுமா? மீண்டும் படியுங்கள் தயவுசெய்து! "பன்னிரெண்டு ஆண்டுகள் ஆனந்தமாக ராமனும் சீதையும் அயோத்தியில் சுகம் அனுபவித்தார்கள். இனி, உலகில் மக்கள் படும் இடையூறுகள், துயரங்கள், கோபதாபங்கள், எல்லாவற்றையுமே பகவானும் ஈஸ்வரியும் ஊனுடலில் அனுபவிக்கப் போகிறார்கள்."

இதில் வருகிற "இனி" என்ற வார்த்தையைக் கவனிக்க வேண்டும். பன்னிரெண்டு ஆண்டுகள் இன்பமாக இருந்த இருவரும் இனிமேல் தான் உலக மக்கள் உணர்ச்சிகள் எல்லாவற்றையுமே ஊனுடலில் அனுபவிக்கப் போகிறார்களாம்.

அப்படியானால் சீதா கல்யாணம் ஆன பிறகு இருந்த அந்த பன்னிரண்டு ஆண்டுகளிலும் சரி, அதற்கு முன்பு ராமனின் பால்யப் பருவத்திலும் சரி அவர்கட்கு ஊனுடலில் ஏற்படும் உணர்ச்சிகள் ஏற்பட்டதில்லையா? - கோபம் கொண்டதில்லையா? - தாடகையைக் கொல்ல கோதண்டத்தை வளைத்தது கோபத்தால் அல்லவா? - மனைவி சீதையுடன் பன்னிரெண்டு வருடம் ஆனந்தம் அனுபவித்தது, தாபம் ஏற்படாமல் என்று யாராவது கூற முடியுமா? ராமன்தான் கூறுவானா? தையல் சீதை தான் சொல்லுவாளா எனக்குத் தாபம் ஏற்படவில்லை யென்று!

பிறகு ஏன் - பிராமணஜோதி ஆச்சாரியார், கோப தாபங்கள் போன்ற மனித உணர்ச்சிகளை இனி பகவானும் ஈஸ்வரியும் ஊனுடலில் அனுபவிக்கப் போகிறார்கள் என்று கூறவேண்டும்? அப்படியானால் இதுவரையில் ராமனும் சீதையும் அனுபவித்த உணர்ச்சிகள் தேவ உடலில் அனுபவித்தவைகளா? விளக்கம் தேவை - வேதியப் பெருந்தகையாரே, விளக்கம் தேவை!

"எந்த அவதாரம் எடுக்கிறேனோ அந்த அவதாரத்திற்குரிய தேகமும் உணர்வுமாகத்தான் என் திருவிளையாடல் நடைபெற்று வரும் - என்பது பகவானே சொல்லிய விளக்கம்."

ஆகஸ்டு 8ஆம் நாள் இதழிலே ஆச்சாரியார் இப்படி எழுதியிருக்கிறார், "பகவான் வாமனாவதாரம் எடுத்தார். அந்த உருவத்தைப் பற்றிய வர்ணனைகளையும், படத்தையும் கூட நாம் பார்த்திருக்கிறோம். மிக மிகக் குள்ளமான உருவம், சிறிய உருவம், மனித இலக்கணத்துக்கும் கீழான தேகம் படைத்த அவ்வளவு சிறிய உருவம் வாமனாவதாரம் என்று படித்திருக்கிறோம். என்ன செய்தது தெரியுமா? மாபலிச்சக்கரவர்த்தியின் வலிமையைக் கெடுப்பதற்காக - மூன்றடி மண் கேட்டு, உலகத்தையே இரண்டு அடிகளாக அளந்துவிட்டது என்பது கதை! பகவான் எந்த அவதாரம் எடுத்தாலும் அந்த அவதாரத்திற்குரிய தேகமும், உணர்வுமாகத்தான் திருவிளையாடல் நடத்துவார் என்று ஆச்சாரியார் கூறுகிறார். கவனியுங்கள் இதையும்!

தேகம்,உணர்வு இரண்டும் எடுத்த அவதாரத்திற்குத் தக்கதாய்த்தானிருக்குமாம், பகவான் கூறிய விளக்கமாம். பார்ப்பனகுல மகிபரும் பகருகிறார், சரி! ஒப்புவோம்! "அப்படியானால் வாமனாவதாரம் என்ற சிறிய தேகத்தின் பாதங்கள் எவ்வளவு சிறியதாய் இருந்திருக்க வேண்டும்? அந்தச்சிறிய பாதங்களால் ஜெகத்தை எப்படி அளந்தது வாமனாவதாரம்?" என்று அறிவுள்ளவர்கள் கேட்கமாட்டார்களா? ஆச்சாரிய மேதை அதற்குப் பதில் சொல்லவேண்டாமா?

அவதாரத்திற்குத் தகுந்த தேகமும், உணர்வும் பெறுவாராம் பகவான். வராகவதாரம் எடுத்தார் - பூமியைத் தூக்கிக்கொண்டு வந்தார், பன்றியைப் போன்ற தேகம் பெற்றார் - சரி! ஆனால் அந்தப் பன்றி பூமாதேவியுடன் இன்பம் அனுபவிக்கிற அளவுக்கு உணர்வு பெற்றது என்று புராணம் எழுதப்பட்டிருக்கிறதே அதுதான் அவதாரத்திற்குத் தகுந்த உணர்வா? என்று ஆச்சாரியாரை வினயத்தோடு கேட்க ஆசைப்படுகிறோம்.

**பட்டாபிஷேகம்**

ராமனுக்குப் பட்டாபிஷேகம் நடத்த ஏற்றதொரு நாள் குறிக்க வேண்டுமென்று தசரதன் சபையில் அறிவிக்கிறான். பிறகு ஏதோ

ஒரு யோசனை வந்து, மறு நாளே புஷ்ய நட்சத்திரத்தில் ராமனின் பட்டாபிஷேகத்தை வைத்துக் கொள்வதென்று முடிவுசெய்து அதை ராமனிடமும் தசரதன் கூறுகிறான். அவ்வளவு அவசரமாக தசரதன் நாள் வைத்தமைக்குக் காரணம் என்னவென்று ஆச்சாரியார் விளக்குகிறார் பாருங்கள்.

“கைகேயியை விவாகம் செய்துகொண்ட காலத்தில் தசரதன் கேகயனுக்கு (கைகேயின் தந்தை) கொடுத்த வாக்கு அவன் நினைவுக்கு வந்து, அது அவனை மனத்தில் தொந்தரவு செய்ததுபோல் தோன்றுகிறது. பரதன் மிக நல்லவன், அண்ணனிடம் அவன் மிக்க அன்பும் பக்தியும் வைத்தவன், ஆனபடியால் கைகேயி விவாக நிபந்தனையை அவன் பொருட்படுத்தமாட்டான். ஆயினும் மனிதனுடைய மனத்தை நம்பக் கூடாது. நல்லவருடைய புத்தியும் சில சமயம் மாறிப்போகும் என்று தசரதன் பயந்தான்.”

புரிகிறதா தோழர்களே! பரதனுக்குப் பட்டம் கட்டுவதாக தசரதன் வாக்களித்திருப்பது - யுத்தத்தில் உதவி செய்த தன் மனைவி கைகேயி என்பவளை தான் மணந்திட விரும்பியபோது அவள் தகப்பன் கேகய மன்னன் விதித்த நிபந்தனை அது! உனக்கு மூத்த மனைவியிருப்பதால் அவள் மகன் பட்டத்திற்கு வர நேரும்; என் மகள் கைகேயியின் மகனுக்குப் பட்டம் தருவதாக வாக்களித்தால் அவளைத் திருமணம் செய்து கொள்ளலாம் என்று கேகய மன்னன் நிபந்தனை விதித்தான். அதை ஒத்துக்கொண்ட தசரத ராஜன்தான் இப்போது, பரதன் ஊரில் இல்லாத சமயம் அவசர அவசரமாக மூத்தவன் ராமனுக்கு பட்டாபிஷேகம் செய்ய ஏற்பாடு துவங்குகிறான்.

“பரதன் ஊரில் இல்லை, அவனுக்கு இப்போது சொல்லி அனுப்பி வரவழைக்க சவகாசமில்லை. அவன் வருவதற்காக காரியத்தை நிறுத்திவைப்பது உசிதமல்ல.”

தசரதன், ராமனிடம் கூறுகிறான் இப்படி ஆச்சாரியார் எழுதியிருக்கிறார். தோழர்களே! சூழ்ச்சி எங்கே முதலில் உருவாகிறது பாருங்கள். கைகேயி இடத்தில் அல்ல; தசரதன் இடத்தில்தான் சூழ்ச்சி உருவாகிறது என்பதை ஆச்சாரியார் தன்னையறியாமலே ஒத்துக் கொள்ள நேரிடுகிறது.

"ராஜ்யாதிகாரம் உடனே வகிக்க வேண்டுமென்று ராமனுக்கு ஆசை இருக்கவில்லை. அதை கடமையாகவே பாவித்தான். அரசன் ஒப்புக்கொள்ளும்படி சொன்னால் சரி, இல்லாவிட்டால் வேண்டியதில்லை என்பது அவன் கருத்து."

இப்படிப்பட்ட ராமன் - அருங்குணவான் - தகப்பனுடன் சேர்ந்து சூழ்ச்சியில் எப்படி ஈடுபடுகிறான் பாருங்கள். ஆச்சாரியாரே எழுதுகிறார்; படியுங்கள்.

"பரதன், அண்ணனைக் குருவாகக் கருதுகிறவன் தர்மாத்மா, சுத்தமான உள்ளமும் ஆசைகளை அடக்கும் சக்தியும் பெற்றவன். ஆயினும் மனுஷ்யனுடைய சித்தம் எப்போதும் ஒரே விதமாக இருக்காது என்று தசரதன் ராமனிடம் சொல்லி... பரதன் வருவதற்காக காக்கவேண்டாம் என்று வசிஷ்டருக்கும் தெரிவித்துவிட்டான்.

பட்டாபிஷேக வைபவம் அதில் சகோதரன் பரதன் இல்லாமல் - தான் பட்டம் கட்டிக்கொள்ள ராமனும் சம்மதித்து விட்டான். பரதன் வந்துவிட்டால் தசரதன் தன் அன்னையைத்திருமணம் புரியும்போது தன் தாத்தா கேகய மன்னனிடம் கொடுத்த வாக்கை நினைவுபடுத்தி பட்டாபிஷேகத்தைத் தடுத்துவிடுவானாம் - அதற்காக பயந்து ராமனுக்குப்பட்டம் கட்டும் சதியில் - வசிஷ்ட முனிவர், தசரத சக்கரவர்த்தி யென்னும் தர்மப்பிரபு, பகவான் ராமச்சந்திரமூர்த்தி -ஆகிய இத்தனைபேரும் கலந்து கொள்கிறார்கள்.

"ஏதாவது இடையூறு நேருமோ" என்று தசரதனுக்கு திகில் இருந்ததாம்! இருக்காதா திகில்? இருக்கும்! நிபந்தனையை மறந்து, பரதன் ஊரில் இருந்து வருவதற்குள் ராமனுக்குப் பட்டம் கட்டவேண்டுமென்று சதி செய்த தசரதனுக்கு திகில் இருக்காதா? இத்தகைய தசரதனின் திருமகனாகப் போய் மகாவிஷ்ணு பிறந்தாரே; அதில் அல்லவா இருக்கிறது ஆச்சரியம்! விஷ்ணுவைப் பங்குபோடப் பிறந்த பிள்ளைகள் நால்வரும்! அந்த நால்வருக்குள்ளாகவே சதி! அதுவும் அதிகப் பங்கில் அவதரித்த ஸ்ரீராமன், தந்தையின் சதிக்கு உடந்தையாக இருக்கிறான், பட்டாபிஷேகத்திற்கான சகல முன்னேற்பாடுகளையும் அவனும் கவனிக்கிறான் தன் மனைவியுடன்!

இந்த இதழில் ஆச்சாரியார் எழுதிய கட்டுரை, அவரையும் அறியாமல் ஓர் உண்மையை உணர்த்தி விட்டது.

தசரதன், கேகய மன்னனுக்கு வாக்களித்து, கைகேயியை மணந்தான். இப்போது அந்த வாக்குறுதியை காற்றில் பறக்கவிட்டு, ராமனுடன் சேர்ந்து சதி செய்து அவனையே பட்டத்திற்குரியவனாக்க திட்டமிட்டுவிட்டான். அதற்கு ராமனும் உடந்தை, என்கிற உண்மைதான் அது!

௵★௸

# சதி நிரூபிக்கப்படுகிறது

# 3

சென்ற இதழில் தசரதன், வசிஷ்டன், ராமன் மூவருமே சதியில் ஈடுபட்டு பரதனுக்கு, நிபந்தனைப்படி நியாயமாக சேர வேண்டிய ராஜ்ய பாரத்தை ராமன் தலையில் கட்டி விட முடிவு செய்தார்கள் என்ற உண்மையை ஆச்சாரியார் வெளிப்படுத்தியிருக்கிறார் என்பதாக முடித்திருந்தேன். பரதனுக்குப் பட்டம் கட்டுவதாக தசரதன் கேகய மன்னனிடம் கொடுத்த வாக்கை மீறுகிறான் என்றும் குறிப்பிட்டிருந்தேன். இதோ இந்த இதழில் அதே கருத்தை யொட்டி ஆச்சாரியார் எழுதுகிறார் கவனியுங்கள்.

"புத்திர பாக்கியம் பெறாமலிருந்த காலத்தில் கைகேயியைத் தசரதன், ராஜகுல வழக்கத்தை அனுசரித்து விவாகம் செய்து கொண்டான். இந்தச் சமயம் கைகேயினுடைய தந்தை கேகய ராஜன் தசரதனிடம் வாக்குறுதி பெற்றான்; இவள் வயிற்றில் பிறக்கும் மகனுக்குப் பட்டமென்று. இப்படி அப்போது சொன்னதில் ஒன்றும் வியப்போ வித்தியாசமோ இருந்திருக்க இடமில்லை. அப்போது யாருக்குமே குழந்தைகள் இல்லை. மற்ற மனைவிகளுக்குப் புத்திரப்பேறுக்கு உண்டாகவில்லை. புத்திரப்பேறுக்கு ஆசைப்பட்டே மூன்றாவது மனைவியைக் கொண்டது. அந்த ஆசையும் நிறைவேறவில்லை. வெகு நாட்கள் கழித்து யாகம் செய்து மூன்று மனைவிகளும் குழந்தைகள் பெற்றார்கள். பட்ட மகிஷியின் மகனான ராமன், நான்கு புத்திரர்களுக்குள் மூத்தவனாகவும், சகல உத்தம குணங்களையுடையவனாகவும், ராஜ்ய பாரம் வகிக்கும் தகுதியைக் கொண்டவனாகவும், மந்திரிமார்கள், நகரத்தார், கிராமவாசிகள், சிற்றரசர்கள் அனைவரும் யுவராஜப் பதவிக்குத் தகுந்தவன் என்று அவர்களுடைய அன்பைச் சம்பாதித்தவனாகவும்

இருக்க, எப்படி அவனுடைய உரிமையையும் ராஜகுல முறையையும் புறக்கணித்து பரதனுக்குப் பட்டாபிஷேகம் செய்வது நியாயமாகும்?"

தசரதன் வாக்களித்ததையும் ஒத்துக்கொண்டு, அப்படிக் கொடுத்த வாக்கு மீறி - பரதனைப் புறக்கணித்தது தவறு அல்ல என்றும் வாதாடுகிறார் ஆச்சாரியார் - அதற்கு அவர் கூறும் காரணங்கள் என்ன? ராமன் நால்வரிலும் மூத்தவனாம், யாகத்தில் கிடைத்த தேவ பாயசத்தை மூன்று மனைவிமாரும் ஏக காலத்தில்தான் சாப்பிட்டார்கள் - ஆனாலும் ராமன் மூத்தவன் என்கிறார் ஆச்சாரியார். ஒருவேளை மூத்தாளின் மகன் என்பதால் மூத்தவன் என்கிறார் போலும் அவர். அப்படியானால் மூத்தாளின் கடைசி மகனும் மூத்தவன்தானோ? ராமன் சகல உத்தம குணங்களும் உடையவன் எனவும் கூறுகிறார். அப்படியானால் என்ன அர்த்தம் - அண்ணன் புத்திசாலி என்றால் தம்பி கொஞ்சம் முட்டாள் என்று தானே அர்த்தம் - நான்கு பிள்ளைகளுக்கும் விஷ்ணு அம்சம் சொல்லப்படுகிறது என்று தனது முந்திய கட்டுரைகளில் எழுதிய ஆச்சாரியார், இப்போது நால்வரில் ராமன் சகல உத்தம குணங்களும் பெற்றிருந்தான் என்று கூறுவதால், விஷ்ணு அம்சத்தின் பிரிவுகளான மற்ற மூவரையும் குறை சொல்லுகிறார் என்றுதானே அர்த்தம்! ஒருவேளை, முன் கட்டுரையில் அவர் எழுதியதுபோல ராமன், விஷ்ணு அம்சத்தின் பாதி - லட்சுமணன் கால்பங்கு - பரதசத்ருக்கனர் ஒவ்வொருவரும் அரைக்கால் பங்கு - அதனால் ராமன், சகல குணங்களும் பொருந்தியிருந்தான் என்று கூறுகிறாரே - அய்யோ அதுவும் பொருந்தாதே - ஏனெனில் அவரே - அதே கட்டுரையின் கீழே, கடவுள் அம்சத்தில் பங்கு கணக்கென்ன வேண்டியிருக்கிறது; எல்லாப்பங்குமே பூரணத்துவம் பெற்றதுதான் என்ற கருத்தையும் தீட்டியிருக்கிறார். ஆகவே நான்கு குமாரர்களும் பூரணமேதான் - ஆச்சாரியார் வாதம், ஆச்சாரியாராலேயே தோற்கடிக்கப்படுகிறதா இல்லையா என்பதை சிந்தியுங்கள்.

ராமன்தான் ராஜ்யபாரம் வகிக்க தகுதியுடையவனாம் - கூறுகிறார் இப்படி! பரதனுக்குத் தகுதி கிடையாதா? ராமன் கானகம் சென்ற பிறகு துணைக்கு லட்சுமணனும், ஆறுதலுக்குத் தந்தையும் இல்லாத பரதன், சத்ருக்கனனோடு சேர்ந்து பதினான்கு ஆண்டு ராஜ்யத்தை நடத்தி வந்தானே - அப்போது என்ன அயோத்தியில் குழப்பமா ஏற்பட்டது?

எதிரிகள் படையெடுத்தா வந்தார்கள்? அராஜகம் நடந்துவிட்டதா? அடக்குமுறை தேவைப்பட்டதா? அமைதியாகத்தானே பரதன் அரசு புரிந்திருக்கிறான். பதினான்கு வருடம் கழித்த பிறகு, ராமன் பட்டத்திற்கு வந்த பிறகு வேண்டுமானால் கலகம் நடந்திருக்கிறது - அதுவும் உள்நாட்டு யுத்தம் - தகப்பனுக்கும் மக்கள் எனக் கூறப்படும், லவ, குசன் ஆகியோருக்கும் அஸ்வமேத யாகத்தை அடிப்படையாகக் கொண்ட போராட்டம் நடைபெற்றிருக்கிறது. அமைதியோடு பதினான்கு ஆண்டு ஆட்சி புரிந்த பரதனுக்கு ராஜ்யபாரம் வகிக்க தகுதியில்லையாம் - காடாண்டபோதும் போராட்டம் நடத்திய ராமனே தகுந்தவனாம். ஆச்சாரியார் வாதிடுகிறார்.

ராமன் சகல உத்தம குணங்களும் பொருந்தியவனாம் அதனால் பட்டம் கட்டலாமாம். பரதன் என்ற அருமைச் சகோதரன் இல்லாத சமயம் முடிசூடிக் கொள்ள ஆசைப்பட்ட ராமனா உத்தம குணம் கொண்டவன்? வனமேகினான் அண்ணன், எனக் கேள்விப்பட்டதும் வாடிச் சோர்ந்த பரதனைவிட ராமன் எந்த விதத்தில் உத்தம குணம் வாய்ந்தவனோ தெரியவில்லை.

தசரதன் முதலில் கொடுத்த வாக்கை மீறி பரதனுக்குத் தெரியாமல் - ரகசியமாக ராமனுக்கு முடிசூட்ட முயற்சித்தது சரிதான். நியாயமானதுதான் - என்று வாதிக்கிறார் ஆச்சாரியார்.

கொல்லைப்புறமாக மந்திரி சபைக்கு வந்தவரல்லவா ஆச்சாரியார்! அதனால் அவர் தசரதனுக்காகப் பரிந்து பேசுவதில் ஆச்சர்யமில்லைதான்.

இன்னும் பாருங்கள் - ஆச்சாரியார் முரண்படும் கட்டம் வந்துவிட்டது.

தவிர - பரதனும் கைகேயியும் - முடியைப்பற்றி ஏதொரு ஆசை, அல்லது எண்ணம்கூட வைத்தது கிடையாது. அதைப் பற்றிப் பேச்சே கிடையாது. ஆனபடியால் முறைப்படி ராமனை யுவராஜ்யப் பதவியில் அமர்த்துவதில் ஒரு சிக்கலும் ஏற்படாது என்று அரசன் எண்ணினான். அவ்வாறே கைகேயியின் உள்ளத்திலும் ஏதொரு கல்மஷமும் இருக்கவில்லை. இது கைகேயியின் நடவடிக்கைகளினால் வியக்தமாகத் தெரிகிறது. பரதன் உள்ளத்தைப் பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை.”

இப்படி இந்த இதழில் எழுதியிருக்கிறார். சென்ற இதழில் எப்படி முடித்திருந்தார் தெரியுமா? முறைப்படி ராமனை யுவராஜ்யப் பதவியில் அமர்த்துவதில் ஒருவித சிக்கலும் ஏற்படாது என இந்த வாரக் கல்கி இதழில் எண்ணுகிற தசரத ராஜன், சென்ற வாரம் - பரதன் வந்துவிடுவானே எனப்பயந்து, ராமனை அவசர அவசரமாக இரண்டாவது முறை கூப்பிட்டு வரச்சொல்லி, அவனிடமும் நிலையை விளக்கி - மறுநாளே யுவராஜ்யப் பட்டாபிஷேக ஏற்பாடுகளை கவனிக்கிறான்.

தெருவெல்லாம் தண்ணீர் தெளித்து அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. ஜனங்கள் தங்கள் வீடுகளின் மேல் பலவித அழகிய கொடிகள் பறக்கவிட்டிருந்தார்கள். ஆடை அணிகள் பூண்டு சந்தனம் பூசி, புஷ்பம் அணிந்து எங்கே பார்த்தாலும் கூட்டம் கூட்டமாக ஜனங்கள் ஏதோ பேசிக் கொண்டிருந்தார்கள். கோயில்களில் வாத்யகோஷம்."

அயோத்தி இப்படி ஆனந்தமாக இருக்கிறது - ஆனால் இந்த சம்பவங்கள் எதுவும் கைகேயி சொந்தக்காரியும் - தோழியும், அந்தரங்க வேலைக்காரியுமான மந்தரை என்பவளுக்கு ஒன்றுமே தெரியாது. பக்கத்தில் உள்ள ஒரு தோழியிடம் கேட்டு, அந்தக் கொண்டாட்டமெல்லாம், ராமன் பட்டம் சூட்டும் விழாவிற்கு என்று தெரிந்து கொள்கிறாள். மந்தரை மட்டுமல்ல; மகாராணிகளில் ஒருத்தியாகிய கைகேயிக்குக்கூட இந்தச்செய்தி மந்தரை மூலமாகத்தான் கிடைக்கிறது. இந்த விபரங்களையெல்லாம் ஆச்சாரியார் (ஆகஸ்ட் 15, 1954 கல்கி) இதழில் எழுதியிருக்கிறார்.

சாதாரண ஜனங்கள் ராமன் முடிசூட்டு விழா செய்தி கேட்டு கொடி கட்டி கொண்டாடுகிறார்களாம் கூட்டம் கூட்டமாக. ஆனால் அந்தச் செய்தி "கல்மஷ" மனமில்லாத கைகேயிக்கும் தெரியாதாம் -அவள் அந்தரங்க வேலைக்காரி மந்தரைக்கும் தெரியாதாம்!

அப்படி என்றால் என்ன பொருள்? பரதனையும் கைகேயியையும் ஏமாற்ற "சதி" நடந்திருக்கிறது என்றுதானே நாம் முடிவுகட்ட வேண்டியிருக்கிறது - நாமென்ன; மூளையுள்ளவர் அனைவருமே அப்படித் தான் முடிவு கட்டுவார்கள்.

༺✶༻

# 4

# காமராஜன் ஆட்கொண்ட தசரதராஜன்!

தந்தையினிடம் விடை பெற்றுக் கொண்டு ராமன், உடனே கவுசல்யா தேவியின் அந்தப்புரத்துக்குச் சென்றான். பெற்ற தாய்க்கு விஷயத்தைச் சொல்லி ஆசி பெறுவதற்காகச் சென்றான். அதற்கு முன்னதாகவே கவுசல்யைக்கு சமாச்சாரம் எட்டியிருந்தது. நகரம் மகிழ்ச்சிக் கடலில் மிதந்து கொண்டிருந்தது. பெண்களுக்கு அடங்காத உற்சாகம் ஆண், பெண், குழந்தைகள் எல்லாரும் எல்லை கடந்த குதூகலத்தில் இருந்தார்கள். சுற்றுப் பக்கத்துப் பிரதேசவாசிகள் எல்லாம் அயோத்திக்குப் பட்டாபிஷேக மகோற்சவத்தைப் பார்க்க வந்து சேர ஆரம்பித்து விட்டார்கள்.

ராமனும் சீதையும் தங்களுடைய மனையில் நாராயணனைத் தியானித்து மறுநாள் பட்டாபிஷேகத்திற்கான சடங்குகளை மேற்கொண்டு தரையில் புல் பரப்பி, அன்றிரவு படுத்தார்கள்.

மேலே காணப்படும் இவ்வளவும் ஆகஸ்டு 8-54ஆம் தேதி இதழிலே ஆச்சாரியார் குறிப்பிட்டிருக்கும் விஷயங்கள்.

அடுத்த ஊரார் அயோத்திக்கு வந்துவிட்டனர் பட்டாபிஷேக சேதி கேட்டு, ஆனால் கைகேயிக்கு மட்டும் அந்தச்செய்தி தெரிவிக்கப்படவில்லை. மந்தரை மூலமாக கைகேயி செய்தி கேள்விப்பட்டு மகிழ்ச்சியடைகிறாள். பிறகு, மந்தரை – தசரதன், கேகேயனுக்குத்தந்துள்ள வாக்குறுதியை நினைவூட்டி, பரதனுக்குப் பட்டம் கட்ட யோசனை சொல்லித் தருகிறாள்.

பரதன் வருவதற்குள் தசரதன் ராமனிடமே கூறி, இருவரும் அதற்கான ஏற்பாடுகளைத் துவங்கியதும், கைகேயிக்கு அறிவிக்கப்படாததும்,

சதித்திட்டத்தின் எதிரொலிகளே என்று ஆச்சாரியார் எழுத்து மூலமாகவே எடுத்துக் காட்டியிருந்தோம்.

மந்தரையால் மனம் திருப்பப்பட்ட கைகேயியின் மனைக்கு இப்போதுதான் தசரதன் வருகிறான். அதை இந்த முறை ஆச்சாரியார் வர்ணித்திருக்கிறார், ஆகஸ்டு 22-54ஆம் நாள் இதழில்!

"சபையில் காரியங்களையெல்லாம் முடித்துவிட்டு, பட்டாபிஷேக மகோற்சவத்துக்காக செய்யவேண்டியதை யெல்லாம் பூர்த்தியாக உத்தரவிட்டு ஒரு கவலையும் இனி இல்லை என்று சந்தோஷமடைந்து, தசரதன் - தன் காதல் மனைவி கைகேயி தேவியினுடைய அந்தப் புரத்தை நோக்கிச் சென்றான்.

பொழுது விடிந்ததும் உற்சவம், அதுவரையில் ஆசை தீரப் போகத்தில் மூழ்கலாம் என்கிற எண்ணத்தோடு வெள்ளை மனத்துத் தசரதன் அந்தப்புரத்தில் புகுந்தான்".

வெள்ளை மனத்துத் தசரதன், ஆசை தீரப் போகத்தில் மூழ்குவதற்கு அதுவும் பொழுது விடியும் வரையில் மூழ்குவதற்கு கைகேயி அரண்மனைக்கு வருகிறானாம் - அவன் எத்தகையோன்? வெள்ளை மனத்தவனாம் - அது மட்டுமல்ல; அவன் எத்தகைய நிலையில் உள்ளவன் என்பதை அவன் வாயாலேயே ஆச்சாரியார் சொல்ல வைத்திருக்கிறார் படியுங்கள்.

"இப்போது என் உடல் மூப்பின் காரணம், தளர்ந்து போயிருக்கிறது. என் முன்னோர்களின் வழியைப் பின்பற்றி நானும் மிகுதியுள்ள என் வாழ்நாளை வனத்தில் கழிக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறேன்."

இந்தக் காரணத்தால்தான் தசரதன், ராமனுக்கு முடிசூட்டப் போவதாகச் சொல்கிறான் என்பதாக; ஆகஸ்டு 8-54ஆம் தேதி ஆச்சாரியார் எழுதியிருக்கிறார்.

உடல் மூப்பு - தளர்ச்சி - வாழ்நாளை வனத்தில் கழிக்க வேண்டிய வயது - இவ்வளவும் கொண்ட தசரதன்தான் "பொழுது விடியும் வரையில் ஆசை தீரப் போகத்தில் முழுகலாம்" என்ற வெறியுடன் கைகேயி அந்தப்புரத்தில் நுழைகிறானாம், நாமல்ல; ஆச்சாரியக் கிழவரே கூறுகிறார் இப்படி! - தசரதக் கிழவனின் வேகம் அதிகரித்த விந்தையை இன்னும் கூறுகிறார் ஆச்சாரியார் கேளுங்கள்!

"அரண்மனையில் வாசனைத் திரவியங்கள், பான விசேஷங்கள் வழக்கம்போல் எல்லாம் அந்த அந்த இடத்தில் வைக்கப்பட்டிருந்தன. அவனுடைய பிரகிருதி வேகம் அதிகரித்தது."

என்னென்ன பான விசேஷங்கள் இருந்தனவோ? எப்படி பிரகிருதி வேகம் அதிகரித்ததோ - ஆச்சாரியாரே அறிவார் போலும்!

"இன்பத்துக்கென்றே தனியாக அமைக்கப் பெற்ற மனைவியாவாள் கைகேயி, அவளுடைய அந்தப்புரம் நுழைந்ததுமே அரசன் உள்ளம் முழுதும் காதல் வேகம் பொங்கும்."

மூப்பு - தளர்ச்சி - வனவாசப் பருவம் - அனைத்தும் கொண்ட ராஜ கிழவரின் யோக்கியதாம்சத்தை மாஜியாகிவிட்ட மந்திரிக் கிழவர் எப்படி சிறப்பித்திருக்கிறார் பார்த்தீர்களா? அந்தப் புரத்தில் நுழைந்தாலே காதல் வேகம் பொங்குமாம்! அடடா கிழவர்களே! கிழவர்களே!!

உள்ளே நுழைந்துவிட்டான்; பிறகு -

"கைகேயி அரசனை கண்ணெடுத்தும் பார்க்கவில்லை. அப்பாவி அரசனுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. எவ்வாறு விளங்கும்? கல்மஷம் என்பது கொஞ்சமும் அவன் உள்ளத்தில் இல்லை," வெள்ளை மனது - அப்பாவி - கல்மஷ மற்றவன் தசரதனின் ஓவியத்தை இப்படித் தீட்டுகிறார் ஆச்சாரியார்.

இளம் வயதிலே உள்ள உன் பெண்ணை மணந்து அவளுக்கு துரோகம் செய்ய மாட்டேன் - அவளுக்குப் பிறக்கும் மகனுக்கே பட்டம் கட்டுகிறேன் என்று கேகேய மன்னனிடம் ஆணையிட்டு விட்டு, அதை மீறி தந்திரமாக ராமனுக்கு முடிசூட்டும் சூழ்ச்சியில் ஈடுபட்ட இந்த தசரதன் கல்மஷமற்ற, வெள்ளை மனதுடைய அப்பாவியாம்! ஆச்சாரியார் கூறுகிறார்! அப்பாவிதான் ஆச்சாரியாரே. அப்பாவிதான்! கேகேய மன்னன் சொல்லவேண்டும்; "அப்-பாவி" என்று! அரிச்சந்திரனின் வாக்கு மீறாத தன்மையை, சத்தியத்தை வையகத்திற்கு எடுத்துரைக்கும் புராணக் கூட்டத்தின் தலைவர், வாக்கு மீறிய வஞ்சக அரசனை வாயாரப் புகழுகிறார், வர்ணிக்கிறார், வெட்கம் - வெட்கம் - வேதனை கலந்த வெட்கம்!

இந்த நல்ல அரசனைப்பற்றி ஆச்சாரியார் தீட்டியுள்ள சித்திரத்தின் முரண்பாட்டை இன்னும் பாருங்கள்!

ராஜ்யத்தை சோம்பலின்றி பெற்ற குழந்தையைப் போல ஆண்டு வந்தானாம் தசரதன். அத்தகைய தசரதன்? கைகேயியின் கோபத்தைக்கண்டு பேசும் வார்த்தைகளை ஆச்சாரியார் மூலமாகவே கேளுங்கள்.

"கைகேயி! உனக்கு என்ன வேண்டுமானாலும் கேள்! யாரைத் தண்டிக்கவேண்டும் - தண்டிப்பேன், யாரை தண்டனையிலிருந்து விடுவிக்கவேண்டும்? உடனே கொலையாளியாக இருந்தாலும் விட்டு விடுவேன்!

எனக்கு உள்ள சர்வாதிகாரம் உனக்குத் தெரியாதா? யாருக்கு என்ன கொடுக்கவேண்டும்? எந்த தேசத்தில் யாரை என்ன செய்யவேண்டும்? சொல்! உடனே செய்து விடுவேன். இப்படி யெல்லாம் காம மோகத்தில் ஈடுபட்டுக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டான்!"

ஆகஸ்டு 22ஆம் தேதி இதழில் ஆச்சாரியார் இவ்வாறு எழுதியுள்ளார். இவன்தான் நல்லவனாம் - வெள்ளைமனம் படைத்தவனாம் - கல்மஷ மற்றவனாம் - ராஜ்யத்து மக்களை குழந்தைகள்போல பாவித்து, ராஜ்யத்துக்காக சோம்பலின்றி உழைத்தவனாம்! ஆகஸ்டு 8ஆம் நாள் எழுதியிருக்கிறார்.

இதுபோன்ற தசரதக் கிழவர்களைப் பாராட்டும் கிழவர்கள் ஆட்சி பீடத்திற்கு வந்தால் - ஆட்சி பீடத்தில் நிலைபெற்று இருந்திருந்தால் - நாடு என்ன ஆகியிருக்கும் என்பதை நினைக்கவே பயமாயிருக்கிறது! காமராஜனின் சக்திதான் என்னே! கிழ ராஜனை எப்படி எப்படி யெல்லாம் உளர வைத்திருக்கிறான் பாவம்!

ல ✶ ஜ

# பரத்துவாஜர் ஆஸ்ரமமா - பாரீஸ் நகரத்து 'பாரா'?

# 5

ஆஸ்ரமம் - அங்கே அப்சரஸுகளா?

முனிவர் கூடாரம் - அங்கே மோகக்களியாட்டமா? -

முத்திக்கு வழிதேடும் முகாம் - அங்கே

முத்தத்தால் வீங்கிய முகங்களா? -

துக்கமான கட்டம் - அங்கே தொடர்ச்சி கெடாத

இன்பலோக யாத்திரையா?

தொல்லை நிறைந்த வேளை - அப்போது

எல்லை மீறிய இன்பமா?

பாட்டன் வீட்டிலிருந்து பரதன் வந்தான். தந்தையின் சாவு தமையனின் ஆரண்யவாசம் - இவைகளைக் கேள்விப்பட்டான். தான் பட்டம் கட்டிக்கொள்ள மறுத்து அழுதான், அண்ணன் பிரிவும் அரண்மனை நிகழ்ச்சிகளும் அவனை அனலிடைப் புழுவாக ஆக்கின. தன் பரிவாரங்களுடன் ராமனை அழைத்து வருவதற்காகப் புறப்படுகிறான், வழியிலே குகனை சந்திக்கிறான், பெருந்துக்கத்தில் மூழ்கியிருக்கும் பரதனின் சகோதர பாசத்தைக்கண்டு குகன் வியக்கிறான்.

**பரதன் நிலையை ஆச்சாரியார் விளக்குகிறார் பாருங்கள்.**

"குகனைச் சந்தித்த பிறகு, பரதனுக்குத் துக்கம் முன்னிருந்ததைவிட, அதிகரித்தது. பரிசுத்த சுபாவத்தை ஜென்ம சம்பத்தாகப் பெற்றவன் பரதன். இப்படியாயிற்றே - என்று அவன் இராமனை நினைந்து

பெருமூச்சுவிட்டு உடம்பெல்லாம் வேர்த்துத் தூக்கம் வராமல் புரண்டு கொண்டிருந்தான்."

இப்படி வேதனையின் சிகரமாகிவிட்ட பரதன், குகனைப் பார்த்து - ராமன் என்ன சாப்பிட்டான்? எங்கு உட்கார்ந்தான்? என்றெல்லாம் கேட்டு அழுதானாம் - லக்ஷ்மணன் எங்கே தூங்கினான் என்றும் கேட்டானாம்.

"ராமனும் ஜனகன் மகளும், தரையில் அங்கே படுத்திருப்பதைப் பார்த்து எனக்குத் தூக்கமும் வருமா என்று கண்ணீர் சொரிந்து, அழுது, இரவு முழுதும் வில்லும் கையுமாக என்னைப் போலவே படுக்காமல் நின்று காத்து வந்தான்."

என்று குகன் சொன்னபோதும் துயரம் தாங்க முடியாமல் பரதன் துடித்துப்போனானாம்!

"காலையில் எழுந்தவர்கள் தலைமயிரைச் சடையாகத் திரித்துக்கொண்டு, காலால் நடந்து போனார்கள்."

இத்தனை சோகச் செய்திகளையும், குகன் பரதனிடம் கூறுகிறான். அரண்மனையிலேயே, அழுது புரண்டு, ஆரண்யத்திலும் வேதனைச் செய்திகள் தாக்கியதால் துடித்துத் துவண்டு, வருந்துகிறானாம் பரதன்.

"பரதனும், குகனும் கங்கைக் கரையில் சந்தித்து துயரத்தைப் பங்கிட்டுக் கொண்டது ஆழ்வார்களும், பக்தர்களும் மிகவும் அனுபவிக்கும் கட்டம்."

என்று ஆச்சாரியாரே எழுதியிருக்கிறார். அவ்வளவு சோகப் பெருவெள்ளம் அது! ராமாயணத்தின் நயங்களை வால்மீகி மூலமும், கம்பர் மூலமும் காணுகிற ஆச்சாரியார், இந்தச்சோகக்கட்டத்திலே கம்பனின் கவிதா வேகம் எவ்வளவு உச்சக் கட்டத்திற்குப் போயிருக்கிறது என்பதை ஏனோ விளக்கவில்லை.

'சக்கரவர்த்தித்திருமகன்' கட்டுரையில் பல இடங்களில், கம்ப ராமாயணப் பாடல்கள் எடுத்தாளப்படுகின்றன. அதுபோலவே, பரதன், ராமனைத் தேடிக் செல்லும்போது கம்பர் தரும் காட்சியையும் மக்களுக்கு எடுத்துச் சொல்ல ஆச்சாரியார் ஏன் தயங்கவேண்டும்? கண்ணீர் மல்கும் நிலையிலே பரிவாரங்களோடு பரதன் போகிறான்,

குகனுடைய முயற்சியால் கங்கையைக் கடக்கப் பெரியதோர் படகு வரிசை ஏற்பாடு செய்யப்படுகிறது. அதில் பரதனும், வசிஷ்டரும், மற்றும் ஆண்களும் பெண்களும் அமர்ந்து ராமனைக்காணும் ஆவலுடன் போகிறார்கள்.

இந்தத் துயரமான கட்டத்தை ஆச்சாரியாரின் அன்புக்குரிய கம்பர் எவ்வளவு அழகாக வர்ணித்திருக்கிறார் பாருங்கள்.

படகைச் செலுத்தும் துடுப்புகளின் அசைவிலே, கங்கையாற்றின் நீர்த்திவலைகள் மேலெழும்பி, படகில் உள்ள மங்கையரின் ஆடை நனைந்து, அந்த நனைந்த பாகத்தின் வழியாக அவர் தம் மறைவிடத்தை வெளியே தெரியும்படி செய்ததாம் - அந்தக் காட்சியை படகில் உள்ள ஆடவர் ரசித்தார்களாம்.

அதற்கு இதோ பாடல் -

அயோத்தியா காண்டம் குகைப்படலம் 56ஆவது செய்யுள்:

"இயல்வுறு செல்வினாவா
யிருக்கையு மெயினர் தூண்டத்
துயல்வன் துடுப்பு வீசுந் துவலை
கண்மகளிர் மென்றூ
சுயல்வுரு பரவை யல்கு
லொளி புறத்தளிப்ப வுள்ளத்
தயற்வுறு மதுகை மாந்தர்க்
களா வுயிர்ப் பளித்த தம்மா!"

அரண்மனைப் பெண்களும். ராணிகளும் செல்கிறார்கள் படகில்! கட்டமோ சோகக் கட்டம்! கம்பரின் கண்களோ, எந்தக் காட்சியையோ படம் பிடிக்கின்றன!

நீர்த்துளிப்பட்டு நனைந்து வெளியே ஒளிகாட்டும் பாகங்களை மறைத்துக்கொள்ள எண்ணாத மாதர்கள்!

அப்படி மறைக்கப்படாதவைகளை பார்த்து ஆனந்தப்படும் பரிவாரங்கள்!

அயோத்தியின் நாகரிகமே நாகரிகம்! - கம்பன் பக்தியை பிரதானமாக வைத்து ராமாயணம் எழுதினான் என்று கூறியிருக்கிற ஆச்சாரியாரின் மேதா விலாசத்துக்கு ஈடு இணை இந்த உலகத்தில் ஏது?

சரி, சேனை முழுதும் நதியைத் தாண்டியாயிற்று - அக்கரையில் உள்ள பரத்துவாஜ ஆசிரமத்துக்கு பரதன் சென்றான். பரத்துவாஜ முனிவர் "பரதன் ஒருவேளை ராமன்மீது படையெடுத்து வந்து விட்டானோ" என்று சந்தேகப்பட்ட குகனைப் போலவே சந்தேகப்பட்டாராம் பரதன்மீது! குகன்; சாதாரண மானிடன். அதனால் பரதன் மீது சந்தேகப்பட்டான். பரத்துவாஜர், முனிவர் - அவர் சந்தேகப்படலாமா? என்று யாராவது கேட்டு விடுவார்களே எனப் பயந்த ஆச்சாரியார், அதற்கும் சமாதானம் எழுதியிருக்கிறார். அது, இதோ!

"நான் சக்கரவர்த்தித் திருமகன் எழுதுவது வால்மீகி ராமாயணத்தின்படி! குகன் எப்படி பரதனுடைய பரிவாரத்தைக் கண்டு சந்தேகித்தானோ, அப்படியே பரத்துவாஜ ரிஷியும் சந்தேகித்தார் என்று. வால்மீகி பாடியிருக்கிறார். துளசி ராமாயணத்தில் இப்படி இல்லை. துளசி ராமாயணம் முற்றிலும் பக்தி மயம். ரிஷிகளுக்குத் தெரியாத ஒரு விஷயமில்லை. ஆனபடியால் துளசி ராமாயணத்தில் பரதனைப் பற்றிப் பரத்துவாஜருக்கு, சந்தேகம் எப்படி இருக்க முடியும்? ஆனால் கம்பர் பாடியிருப்பது, வால்மீகியைப் பற்றித்தான் ஆச்சாரியாருக்கு எவ்வளவு பெரிய குழப்பம் ஏற்பட்டு, மக்களையும் குழப்புகிறார் என்று கவனியுங்கள்.

வால்மீகி, ராமனை - ஒரு வீர புருஷனாக சித்தரிக்கிறார் -துளசிதாஸ் பக்திக் கண்ணோடு ராமனைக் காணுகிறார் - கம்பர் கடவுளாகவே பார்க்கிறார் - என்றெல்லாம் கூறுகிற ஆச்சாரியார், இப்படி எல்லோரும் ஆளுக்கு ஒருவிதமாகக் காணுகிற கதம்ப ராமனைத் தூக்கிக்கொண்டு காலட்சேபம் நடத்துவானேன்?

பரத்துவாஜருக்கு பரதனைப் பற்றி அறியும் ஞானமில்லை என்கிறார் வால்மீகி! ஞானமிருந்தது என்கிறார் துளசிதாஸ்! ரிஷிக்கு ஞானமில்லாமல் இருக்குமா? என்று கேட்கிறார் ஆச்சாரியார். ஆனாலும் அவர் எழுதுவது வால்மீகி ராமாயணந்தானாம்!

இதுவரை 36 கட்டுரைகள் எழுதியிருக்கிறார் ராமாயணத்தைப் பற்றி. 36 கட்டுரைகளிலும் 36 முரண்பாடுகள் காணப்படுகின்றன. முதல் இதழில், ராமன் கடவுள் அவதாரமல்ல என்று எழுதினார் - அதன் பின்னர் எழுதிய கட்டுரைகளில் ராமன் விஷ்ணு அவதாரம் என்று மொழிந்தார்.

இந்த 36ஆவது கட்டுரையில் என்ன கூறுகிறார் தெரியுமா?

"ராமன், சாட்சாத் பகவானுடைய திரு அவதாரமாயினும் வால்மீகி ராமாயணத்தில் ஒரு வீர புருஷனாகவே சித்தரிக்கப்படுகிறான்."

எத்தனை முரண்பாடுகளும், மழுப்பல் வேலைகளும் பாருங்கள்!

உண்மையை மறைப்பதற்கு யார் முயன்றாலும் அவர்கள் எவ்வளவு பெரிய திறமைசாலிகளாயிருந்தாலும் - இப்படித்தான் சேற்றில் மாட்டிக்கொண்டு திண்டாடுவார்கள்! அதற்கு ஆச்சாரியார் ஒரு நல்ல உதாரணம் - பின்னர், பரத்துவாஜர் - பரதனுக்கும் அவன் பரிவாரங்களுக்கும் ஆஸ்ரமத்தில் ஒரு விருந்து நடத்தினார்.

ஆஸ்ரமத்திலே நடைபெறும் விருந்து எப்படியிருக்குமென்று கருதுகிறீர்கள்? கனி வகைகள், காய் கறிகள், ஆவின் பால், இதுபோல இருக்கும் என்று எண்ணுவீர்கள்; அதுவும், பரதன் கோஷ்டியார் சோக ரசத்தில் மூழ்கி, அழுத கண்ணோடு இருக்கிறார்கள். அந்தக் கட்டத்தில், விருந்து இன்னும் சாதாரணமாகத்தானேயிருக்கும் - போடுகிறவன் போட்டாலும், சாப்பிடுகிறவனுக்கு வயிறோ, மனமோ இடங்கொடுக்காத நேரமல்லவா அது! - ஆனால், பரத்துவாஜர் அளித்த விருந்தைப் பாருங்கள்.

யமன், வருணன், அக்னி, குபேரன் ஆகிய தேவர்களை வரவழைத்து, (ஆரியபவன் ஹோட்டலிலே, டின்னர் பார்ட்டிக்கு ஆர்டர் கொடுப்பது போல) பரத்துவாஜர் விருந்துக்கு உத்தரவு கொடுத்தார். அவர்களும் கட்டளையை கச்சிதமாக நிறைவேற்றினார்கள். விருந்தைப் பற்றி ஆச்சாரியாரே எழுதுகிறார், படியுங்கள். ஆனால் படிக்கும்போது, பரதன் கூட்டத்தார் எவ்வளவு சோகமான கட்டத்தில் இருக்கிறார்கள் என்ற கதையை மறந்து விடாதீர்கள்.

"எல்லோருக்கும் தகுந்த விடுதிகள், ஸ்னானாதி விஷயங்களுக்குச் சவுகரியங்கள். சந்தனம், புஷ்பம், அன்னபானாதிகள், பணியார வகைகள், அப்சரஸுகளின் நிருத்தியம், கந்தர்வ சங்கீதம், எல்லாம் நினைக்க முடியாத தெய்வீக ரீதியில் ஏற்பாடு செய்யப்பட்டு எல்லோரும் மெய்மறந்து அனுபவித்தார்கள். பரதனுடைய சேனையிலுள்ள படை வீரர்கள், மகிழ்ச்சி மயக்கத்தில் 'இனி நாம் தண்டகாரண்யம் போக வேண்டியதில்லே - அயோத்திக்கும் திரும்பப் போவதில்லை. இங்கேயே இருந்து விடுவோம்' என்று எண்ணினார்கள்.

எல்லையில்லாத சம்பத்தை அடைந்த ஒரு மகாராஜா, மற்றொரு மகாராஜாவுக்கும், அவன் பரிவாரத்துக்கும் தன் ராஜதானியில் நடத்தும் ஒரு பெரிய விருந்தைப்போல் பரத்துவாஜர் வசித்த ஆசிரம வனத்தில் விடுதிகள், வாகனங்கள், பணியாட்கள் உட்பட, எல்லாம் ஒரு கணத்தில் உண்டாக்கி, அனைவரும் எல்லை மீறி அனுபவித்து, மெய் மறந்து தூங்கிவிட்டார்கள்."

எப்படி ஆஸ்ரமத்து விருந்து! அதுவும் துக்ககரமான நேரத்திலே நடைபெற்ற விருந்து!

ஆச்சாரியார் எழுதியதைத்தான் அப்படியே காட்டியிருக்கிறேன் - விருந்து எவ்வளவு சுவையாக இருக்கிறது பார்த்தீர்களா? - அதுவும் முற்றும் துறந்த முனிவர்கள் ஆஸ்ரமத்தில்! அமெரிக்க அரசாங்கம்கூட நடத்த முடியாத அவ்வளவு பெரிய விருந்து! - கொத்தலவாலை கொலுமண்டபத்தில் கூட நடத்த முடியாத அவ்வளவு அற்புதமான நடனம்! ஆகா! ஆகா! ஆகா! ஆச்சாரியார் எழுதியுள்ளதை மீண்டும் படியுங்கள்.

(1) அப்சரஸுகள் - (தேவமாதர்களான ரம்பை ஊர்வசி முதலியோர்)

(2) அன்னபானாதிகள் -

(3) எல்லைமீறி அனுபவித்து -

(4) மெய்மறந்து -

இந்த வார்த்தைகளையெல்லாம் இணைத்துப் பாருங்கள் -முனிவர் நடத்திய விருந்தை எண்ணும்போது! "அய்யோ! நாமும் பரதனாக இல்லேயே!" என்கிற எண்ணம் சில வாலிபர்களுக்கு வருமா? வராதா?

– ஆச்சாரியார், இந்த இடத்தில் வால்மீகி, கம்பர் வர்ணனைகள் முழுதும் எழுதவில்லை – அவைகளையும் எழுதினால் ஒவ்வொரு எழுத்தும் போதையாக இருக்கும் – விருந்து முடிந்தது.

வயிற்றுக்கு உணவுபெற்ற அயோத்தி வீரர்களும் –அண்ணனைத் தேடவந்த அருமைத் தம்பி பரதனும் உணர்ச்சிக்கு உணவுபெற்ற விதத்தை கம்பர் விளக்குகிறார் பாருங்கள்.

அஞ்சடுத்த வமளி யலந்தகப்
பஞ்சடுத்த பரிபுரந் பல்லவ
நஞ்சடுத்த நயனியர் நல்வியிற்
றுஞ்ச வந்தனை மைந்தருந் துஞ்சினர்.

அதாவது அய்ந்துவகை மென்மையான பொருள்களால் ஆகிய பஞ்சு மெத்தையிலே, செம்பஞ்சு ஊட்டப்பெற்ற, சிலம்பு அணிந்த தளிர்போன்ற பாதங்களையும், விஷம் போன்ற விழிகளையுமுடைய தேவ மகளிர் பெண்மான்களைப்போல அருகில் படுத்து உறங்க, அத்தனை மைந்தரும் உறங்கினார்களாம்.

இடமோ ஆரண்யம்; நேரமோ அர்த்தசாமம்; காமக் காட்சிகளை வர்ணிப்பதோ கம்பன்; ஆச்சாரியார் கூட நிலைதவறிப் போயிருப்பார்.

தான் பெற்ற இன்பத்தை ‘கல்கி’ வாசகர்களும் பெறக்கூடாது என்கிற கெட்ட நினைப்புதானோ என்னவோ, அந்த வேதியப் பெருங்கிழவர், கம்பனது வர்ணனை விநோதங்களுக்கு விளக்கம் தராமல் ஒதுக்கி விட்டார்.

அப்படிப்பட்ட விருந்தின் மேன்மைபற்றி – ஆச்சாரியார் எழுதுகிறார் – இனிக்கிறது பக்தர்களுக்கு! ஆஸ்ரமத்து யோக்யதையைப் பாருங்கள் என்று நாம், இதே விருந்து விளக்கத்தைத் தந்தோம் – அப்போது பக்தர்கள் சீறிப் பாய்ந்தார்கள்!

இப்போது இனிப்பது, அப்போது கசப்பாகத் தெரிவானேன்? பதில் கூறுவார்களா, பக்தர்கள்? அல்லது, பரத்துவாஜர் விருந்தை விமர்சிக்கும் பார்ப்பன குலமகிபர் ஆச்சாரியார்தான் பதில் கூறுவாரா?

ஆஸ்ரமம் - அங்கே அப்சரஸுகளா?
முனிவர் கூடாரம் - அங்கே
மோகக் களியாட்டமா?
முத்திக்கு வழிதேடும் முகாம் -
அங்கே முத்தத்தால் வீங்கிய
முகங்களா? -
துக்கமான கட்டம் - அங்கே
தொடர்ச்சி கெடாத இன்ப
லோக யாத்திரையா?
தொல்லை நிறைந்த வேளை - அப்
போது எல்லை மீறிய இன்பமா?

✶

# இராமன் காடேகியது ஏன்? ரிஷியின் சாபமா? கைகேயி கோபமா?

6

பரதன் நாடாள வேண்டும் - ராமன் காடு செல்லவேண்டும் என்று உறுதியாகக் கூறுகிறாள் கைகேயி.

கேகய மன்னனுக்கு தசரதன் அளித்த வாக்குறுதியை நினைவுறுத்தித்தான் கைகேயி அத்தகைய வாசகத்தை வீசுகிறாள், கேகயனுக்குத் தந்த வாக்குப்படி பரதன் நாடு பெற வேண்டியது நியாயம் தான்.

ஆனால், ராமன் காடு செல்ல வேண்டுமென்பது அநியாயமல்லவா என்று கேட்கத் தோன்றும். கைகேயின் பக்கமும் நின்று வாதிட்டுப் பார்த்தால் அவள் நிபந்தனையிலும் நியாயமிருப்பது நன்றாகத் தெரியும். பரதனைப் பாட்டன் வீட்டுக்கு அனுப்பிவிட்டு யாருக்கும் தெரியாமல் சதிசெய்து முடிசூட்டிக் கொள்ள ராமன் தயாராயிருந்தான் என்று கேள்விப்படும்போது கைகேயிக்கு ஆத்திரம் பொங்காதா? கைகேயி ராமனிடம் ஆரம்ப முதல் பொறாமை உள்ளவள் அல்ல! அன்புடன் அவனை நேசிப்பவள். ஆச்சாரியாரும் அதை எழுதியிருக்கிறார், அப்படிப்பட்ட கைகேயி ராமன்மீது கோபங்கொண்டு காடேகச் சொன்ன காரணம் என்ன? தன் மகனை வஞ்சிக்க ராமனும் உடன்பட்டான் என்ற செய்தி எந்தத் தாயாரைத்தான் கொதிப்படையச் செய்யாது! நாம், கைகேயி நல்லவள் என்று நிரூபிப்பதற்காக இந்த ஆதாரங்களை கண்டுபிடிக்கவில்லை. ராமாயணக் கதையில் அமைக்கப்பட்டுள்ள கைகேயி பாத்திரம், முன்னுக்குப்பின் முரண்படுவானேன் - மூளி அலங்காரி பட்டியலிலே சேர்க்கப்படுவானேன் - என்பதற்காகத்தான் இதைக் குறிப்பிடுகிறோம். ராமனிடத்திலே கைகேயி எது பற்றி பேசியிருக்கவேண்டும்?

ராமன் கடவுள் அவதாரமல்ல - பெரிய வீரன் மட்டுமே - என்று எழுதியிருக்கிறாரே ஆச்சாரியார். அத்தகைய ராமனைப் பாத்திரமாகக் கொண்ட ராமாயணக் கதையில் வரும் கைகேயி பாத்திரம், ராமனிடத்திலே எப்படிப்பேசியிருக்கவேண்டும் ? அப்படிப் பேச வைத்தார்களா - வால்மீகியோ? அல்லது கம்பரோ? - அல்லது இந்த பிராமணவம்பரோ? இல்லை!

"ராமனே! உன் தந்தை என் தந்தைக்குத் தந்த வாக்குறுதி என் மகனுக்குப் பட்டம் தருவது என்பது! அதை இப்போது மீறுகிறார் -மீறுவது மட்டுமல்ல; சூழ்ச்சியாக என் மகனைப்பாட்டன் வீட்டுக்கு அனுப்பி விட்டு, அவனுக்குத் தெரியாமலே உனக்குப் பட்டம் கட்ட முனைகிறார்! இது நியாயமா? நியாயமென்று கருதித் தானே, நீயும் இந்த சூழ்ச்சிக்கு உடன் பட்டாய்? என் தந்தை கேகயராசருக்கு கொடுத்த சத்தியத்தை தசரதர் மீறுகிறார். ஆகவே தசரதர் எனக்கு கொடுத்த இரண்டு வரன்களைப் பயன்படுத்தி, இப்போது என் காரியத்தை வெற்றிகரமாக சாதித்துக் கொள்கிறேன்! - சூழ்ச்சி வெல்லாது என்பதை எடுத்துக் காட்டுகிறேன்!".

இப்படித்தானே கைகேயி ராமனிடம் பேசியிருக்க வேண்டும்! இது போலத்தானே கதையிலே கைகேயி பாத்திரம் அமைக்கப்பட்டிருக்கிறது. தசரதன் கேகயனுக்கு தந்த வாக்கையும் குறிப்பிட்டு, பரதனை தந்திரமாகப் பாட்டன் வீட்டுக்கு அனுப்பியதையும் குறிப்பிட்டு, அவன் அறியாமலே ராஜ்யாபிஷேகம் ராமனுக்கு செய்துவிட முயற்சித்ததையும் குறிப்பிட்டு, கடைசியில் கைகேயியின் சம்பாஷணையை மட்டும் வேறு கோணத்திற்குத் திருப்பிக்கொண்டு போவானேன்? தசரதனை நல்லவன் என்று காட்டவா? அல்லது, கைகேயி கொடியவள் என்று சொல்லவா? அல்லது அது மூலக்கதை ஆசிரியருக்கு பாத்திரம் அமைக்கும் திறமை கிடையாது என்பதை ஆச்சாரியார் ஒத்துக் கொள்கிறாரா?

ராமன் காடேகத் தீர்மானிக்கிறான். இந்தச்சோகக் கட்டத்தின் சிறப்புகளை ஆச்சாரியார் அள்ளி இறைக்கிறார், இறைக்கும் வேகத்தில் ராமாயணத்தின் பெருமையையும் சுருக்கமாகக்குறிப்பிடுகிறார்;

"எந்த இடத்திலும் எங்கேயேனும் ராமாயணக் கதையை யாரேனும் சொன்னால் அவ்விடம் "பாஸ்பவாரி பரிபூரண லோசனத்துடன்

கண்களிலிருந்து நீர் பெருக ஆஞ்சநேயர் கைகூப்பி நின்று கேட்டுக் கொண்டிருப்பார் என்று பெரியோர்கள் சொல்வதின் கருத்து இதுவே.

ஆச்சாரியார் எழுதுகிறார் இப்படி - அது என்னவோ உண்மைதான்! மறைந்திருந்து ஆஞ்சனேயர் கேட்கிறாரோ என்னவோ; நிஜ ஆஞ்சனேயர்கள் பலர் - இனத்தை எதிரியிடம் காட்டிக் கொடுக்கும் ஆஞ்சனேயர்கள் பலர் ஆச்சாரியார் போன்றவர்கள் - ராமாயணக் கதை சொல்லும்போது, கண்ணீர் பெருக கை கூப்பி நின்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது!

சூழ்ச்சியால் நாடு கவர எண்ணினார்கள் தந்தையும் மகனும்! அதை எதிர்த்து ஒரு பெண்மணி போரிட்டாள் - தன் மகனுக்கு பட்டம் கிடைக்குமென்ற ஒரே நம்பிக்கையிலே தான் வயதான கிழராஜனையும் மணந்து கொள்ள சம்மதித்தாள் - தன் எழில் மிகுந்த பருவத்தையே கிழவனின் பலிபீடத்திலே வைக்கத் தயாரான அந்தப் பெண்மணி - எதற்காக அந்த இளமைத்தியாகத்தை ஏற்றுக் கொண்டாளோ அது நிறைவேறவில்லை என்கிற போது, ஆத்திரமடைவதிலே என்ன தவறு? அந்த ஆத்திரத்திலேதான் அயோத்தி பரதனுக்கு - ஆரண்யம் ராமனுக்கு - என்று ஆணையிட்டாள் - இது சோகக் கட்டமாக நமக்குத் தெரியவில்லை -சூதர்கள் வீழ்ந்துபோன மகிழ்ச்சிக் கட்டமாகவே தெரிகிறது.

காடேகும் ராமன் தாயிடமும் சீதையிடமும் விடை பெற்றுக் கொள்கிறான். லட்சுமணனும் அவன் கூடப் புறப்படுகிறான். சீதையும் ராமனுடன் கிளம்புகிறாள்.

"உம்மைவிட்டு எப்படிப் பிரிந்திருப்பேன்?" என்று அழுகிறாள். சீதை ராமனிடத்திலே மிகுந்த அன்பு கொண்டவள். ஆகவே அழுதாள் என்று நாம் விட்டு விட்டுப் போக முடியவில்லை. சீதையின் அன்பிலும் களங்கம் காணக் கிடக்கிறது. படியுங்கள் அதை! ஆச்சாரியாரே எழுதியிருக்கிறார் - செப்டம்பர் 19 நாள் இதழில்!

ராமப்ரபூ! உம்மோடு வனத்தில் வாழ்வதே எனக்கு இன்பம் -அதுவே எனக்கு வாழ்வு -

என்றெல்லாம் சீதை சொல்லுகிறாள் - சொல்லட்டும் - ஆனால் அவள் கணவனிடம் கடைசியாகச் சொன்னதை நினைத்தாலே சிரிப்பு வருகிறது.

"நான் மிதிலையில் இருந்த காலத்தில் பிராமணர்களும், ஜோதிஷர்களும், இவளுக்கு வனவாசப் பிராப்தி என்று என்னைக் குறித்து என் தாயிடம் சொல்லியிருக்கிறார்கள். நான் தனியாக வனவாசம் செய்ய முடியுமா? உம்முடன் சேர்ந்து வனவாசம் செய்துவிட்டு, எப்படியும் நடக்கவேண்டிய அந்த நிகழ்ச்சியை சுகமாக முடித்து விடுவதற்கு இதுவே சமயம்."

சீதை சொன்னாளாம் இது போல! - எப்படியும் நடந்து தீரவேண்டிய பிராப்த விஷயத்தை இச்சமயத்தில் உன்னோடு சேர்ந்து அனுபவித்து விடுகிறேன் என்று மனைவி கூறுகிறாள் என்றால், அவளுக்கு சுயநலத்தை தவிர வேறென்ன தலைதூக்கியிருக்கிறது என்பதை ஆச்சாரியார்தான் கூறவேண்டும்.

சீதையின் சுயநலம் ஒருபுறம் இருக்கட்டும்; ராமன் வனவாசம் போவதற்கு கைகேயி காரணமல்ல சீதையின் ஜாதக விசேஷம் தான் காரணம் என்பதாவது ஆச்சாரியாரால் ஒத்துக்கொள்ளப்படுமா? ரிஷியின் சாபம் ஒன்றால், தசரதனுக்கு புத்ரப்பிரிவு ஏற்பட்டதாக ஆச்சாரியார் கூறியிருக்கிறார். ஆகவே - ராமன் காடு சென்றது; சீதையின் ஜாதகத்தாலா? ரிஷியின் சாபத்தாலா? கைகேயியின் கோபத்தாலா? அல்லது விதியின் வலிமையாலா?

விதியின் வலிமை என்றால், கைகேயியை திட்டுவது நேர்மையாகாது - நாணயமாகாது!

சீதை லட்சுமியின் அவதாரம் என்கிறார் ஆச்சாரியார் ஓரிடத்தில்!

லட்சுமி அடியெடுத்து வைத்த அயோத்தியிலே அனர்த்தங்கள் அமோகமாக விளைகின்றன.

மணமகள், வீட்டுக்கு வந்து ஏதாவது துன்பம் ஏற்பட்டால் 'மூதேவி அடி எடுத்து வைத்த நேரம் அப்படி!" என்று முணுமுணுக்கிறார்கள் ஆச்சாரியார் உட்பட - அனைவருமே!

ஆனால் இந்த சீதை அடி எடுத்து வைத்த அரண்மனையில் அறுபதாயிரம் வருஷம் வாழ்ந்த தசரதன் சாக நேரிடுகிறது - ராமன் காடேக நேருகிறது - அயோத்தியே சோகக் காடாகிப் போகிறது - மகாலட்சுமி அவதாரமாம் அவள்! மூதேவிதான் இவளும் என்று கூறினால் முட்ட வருகிறார்கள்.

சக்கரவர்த்தித்திருமகன் மூலம் பழமைக்கு சப்பைக் கட்டு போடும் ஆச்சாரியார் விடும் சரடுகள் ஒருபுறமிருந்தாலும் - அவர் எழுத்து அழகு இருக்கிறதே! அடடா - அந்த அனுமாருக்குத்தான் வெளிச்சம்!

இதோ ஒரு உதாரணம் பாருங்கள் - செப். 19 கல்கியில் எழுதுகிறார்,

“ஜனங்கள் கூட்டம் கூட்டமாக நின்று, ராமனும், சீதையும், லட்சுமணனும் காலால் நடந்து போவதைக் கண்டார்கள்.”

நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்! அப்போதெல்லாம் மக்கள் தலையாலும், கையாலும் நடந்து போவார்கள். அந்தப்பாவி கைகேயி, ராம லட்சுமணரை காலால் நடந்து போகக் கட்டளையிட்டுவிட்டாள் என்றுதானே! காலால் நடந்து போனார்களாம்! காலால்! ஆச்சாரிய மேதை எழுதுகிறார் இப்படி! - அதையும் பக்தியோடு படிக்க ஆஞ்சநேய கும்பல் காத்திருக்கிறது! - வக்காலத்து வாங்கி வாழ்த்துப்பாட, சுதேசமித்திரன் போன்ற ஆரியக்காவல் படைகள் காத்துக் கிடக்கின்றன. காகபட்டர் எதையும் எழுதுவார் - எதையும் பேசுவார் - இதெல்லாம் மேதையின் இலக்கியமய்யா இலக்கியம்!

ஐ✶ஐ

# 7

# விபீஷணருக்கு விடை யளிப்போம்!

சமீபகாலமாக ராமாயணப் பிரச்சினை நாட்டிலே தலை தூக்கி நிற்கிறது. ராமாயண கதா காலட்சேபங்களும் நாடக, சினிமாக்களும் கடந்து முடிந்து மறந்துபோய் இருந்த நேரத்திலே மீண்டும் புதிய முறுக்குடன் ராமாயணப் பிரச்சாரத்தைத் துவக்கியிருக்கிறார்கள். இப்படி துடிப்போடு துவக்கப்பட்டிருக்கிற இந்தக் காலத்தை நாம் ஓரளவுக்கு வரையறுத்துக் கூறிவிட முடியும், ஆச்சாரியார் அமைச்சர் பதவியிலிருந்து விரட்டப்பட்ட நேரத்திலிருந்து - என்பதாகக் கணக்கிட்டுக் கொள்ளலாம்.

ஆட்சியின் மூலமாக தன் இனத்திற்கும், தன் இனத்தைப் பாதுகாக்கும் பாரத ராமாயண புராணக் கருவிகளுக்கும் ஆக்கம் தேட முயன்று திராவிட இனத்தின் அடி பீடத்தையே இருந்த இடம் தெரியாமல் அழித்து விட முடிவு கட்டி முப்புரியை உருவிப் புறப்பட்ட சூதின் உருவம் - சூழ்ச்சியின் எல்லைக்கோடு - ஆச்சாரியார் அவர்கள், நினைத்தது பரிபூரணமாக நடக்காது எனத் தெரிந்த காரணத்தால், புதிய முயற்சியில் ஈடுபட்டு இருக்கிறார், அந்தப் புது முயற்சியின் விளைவுதான் அந்த சதித் திட்டத்தின் எதிரொலிதான் - ராமாயணத்திற்கு ஏற்பட்டிருக்கும் புதிய பொலிவு!

பழமை - மூடநம்பிக்கை - கண்ட கண்ட கடவுள் கொள்கை -கலாச்சாரத்திற்கு முரண்பட்ட பண்பாடு - இவைகளையெல்லாம் தரை மட்டமாக்கி, பகுத்தறிவு ஒளி பரப்பும் புதிய சமுதாயத்தை உருவாக்க ஏங்கி நிற்கும் அறிவுலகம் - அந்த அறிவுலகத்தின் படை வீரர்கள் -அந்த வீரர்கட்கு அனுதாபம் தெரிவிப்போர் -

அனைவருமே எச்சரிக்கையாகயிருந்து பணியாற்ற வேண்டிய நேரமிது வென்போம் வீழ்த்திக்கொல்ல வேல் கிடைக்காத காரணத்தால் - **கோல்கொண்டாவது கண்ணைக் குத்தி குருடாக்கி விடலாம் என்று எண்ணிக் கிளம்பும் இழிதகையோனுக்கும், அதிகாரம் கை தவறிய காரணத்தால் இதிகாசத்தைக் கொண்டாவது திராவிட இனத்தாரைக் கபோதிகளாக்கி விடலாம் என்று கனவு காணும் ஆச்சாரியாருக்கும் அதிக வேறுபாடில்லை! நிச்சயமாக இல்லை!** அதனால்தான் ஈளைகட்டி இருமல் முற்றி, பாடை கட்டிப் பயணம் நடத்த வேண்டிய பக்குவத்தை அடைந்துவிட்ட பாரத ராமாயணங்களுக்கு "கர்ண பூஷணம்" "பூணூல் தரிக்கும் புனித விழா" "கல்யாண வைபவம்" எல்லாம் நடத்திக் களித்திடக் குதிக்கிறது காகப்பட்டர் பரம்பரை! அந்தப் பரம்பரைக்கு ஏற்படும் ஆசையிலும் - ஆர்வத்திலும் அர்த்தமிருக்கிறது - ஒத்துக் கொள்கிறோம்.

தன் இனம், தன் சமுதாயம், அந்த சமுதாயத்தின் பரம்பரை பாத்தியமான உழைப்பில்லா பெருவாழ்வு, அத்தனையும் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வாழ வேண்டுமென்பதிலே அந்தப் பரம்பரை அக்கரை காட்டுகிறது! நரி; புதரிலே பதுங்கி நிற்கிறது நாக்கை நீட்டிக் கொண்டு! ஏன்? தான் வாழ! கொக்கு கரையிலே காத்திருக்கிறது - ஏன்? தன் வயிற்றை நிரப்ப! நரியும் கொக்கும் தீனி தேடக் காத்திருக்கின்றன - அது அவைகளின் பசியைப் பொறுத்த விஷயம் - நரிக்கும் கொக்கும், முறையே ஒரு மானும், மீனும் நண்பர்களாகி தம் இனத்தவரை அவைகளுக்கு இரையாக்கிக் கொண்டிருந்தால் - மான் மீதும் மற்றதுகள் ஆத்திரப்படாமலிருக்க முடியுமா? மன்னிக்க வேண்டும் நண்பர்களே! - மானிடத்திலும், மீன் இனத்திலும் அத்தகைய துரோகிகள் கற்பனைக்குக் கூட கிடைக்கமாட்டா! **உதாரணத்திற்காகச் சொன்னேன்; அவ்வளவுதான்! மனித இனத்திலேதான் அவர்களைக் காண முடியும். இராவணன் காலத்து விபீஷணன் முதல் இராஜாஜி காலத்து சிவஞானங்கள் வரையிலே அத்தகையோரை மனித சமுதாயத்திலே தான் காண முடியும்!**

அப்படித் தொன்று தொட்டு விபீஷணர்கள் தொகை வளர்ந்து வருவதாலேதான் இந்த இனம், இன்னும் தன் உரிமையை, தனக்குள்ள அரசு பாத்யதையைப் பெற முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறது!

சிவஞானங்களை விபீஷணர்கள் என்பதால் சீறிப் பாய்வோரும் இருப்பர்! உண்மைதான்; விபீஷணர் பெரிய ஆழ்வார் - ராமபக்தர் அறநெறி தெரிந்தவர் - என்றெல்லாம் பாராட்டிப் பாடல் புனைவோருக்கு, விபீஷணர் என்று தன்னை அழைப்பதால் கோபம் ஏற்பட நியாயமில்லை அல்லவா? அதனால் சொல்லுகிறோம்; ஆனந்தமாகவே ஏற்றுக்கொள்வார்கள் விபீஷணப்பட்டத்தை! சீற மாட்டார்கள்! சிந்தை குளிர்வார்கள்! அப்படி அவர்கள் ஆத்திரப்படுவார்களேயானால் - விபீஷணன் என்ற பெயர் களங்கமுடையது என்பதை ஒத்துக்கொண்டவர்களே யாவார்கள்! ஆகையால் நாம் தாராளமாக ராமபக்தர்களை - ராமாயணம் தூக்கிகளை விபீஷணர் என்று அழைக்கலாம் - தகுதியான பெயர் எனத் தலையசைத்து ஆமோதிப்பர், வால்மீகி கம்பர், வாலேந்திகள்!

கடைந்தெடுத்த விபீஷணத் தன்மையின் முழு உருவமும் வெளிப்படும் வகையிலேயே தோழர் சிவஞானம் அவர்கள் ஒரு கட்டுரை தீட்டியிருக்கிறார் - ராமாயணத்திற்கும், ராமனுக்கும் கம்பனுக்கும், வால்மீகி முனிவருக்கும் வக்காலத்து வாங்கிக்கொண்டு! அதைப் படிக்கப் படிக்கப் பரிதாபம் மேலிடுகிறது.

அரசன் எவ்வழியோ குடிகளும் அவ்வழியே - என்று சொல்லக் கேட்டிருக்கிறோம்; ஆனால் ஆச்சாரியார் எவ்வழியோ அவர் வழியே தொண்டர் படைகளும் முரண்பாடான செயலில் இறங்குவதெனக் கிளம்பியிருக்கும் காட்சியிருக்கிறதே; அது நினைக்க நினைக்க சிரிப்பூட்டுகிறது!

'சக்கரவர்த்தித்திருமகன்' எழுத ஆரம்பித்த ஆச்சாரியார், 'ராமன் கடவுள் அல்ல - அவதாரம் அல்ல!' என்று உறுதியாக குறிப்பிட்டு, பிறகு போகப் போக, அவனும் அவதார புருஷனே என்று முரண்பாடுடைய கட்டுரைகள் எழுதினார் - எழுதியும் வருகிறார். மகாவிஷ்ணுவின் அவதாரமான ராமன் - கடவுளின் பிறப்பான ராமன் என்றும் அடிக்கடி குறிப்பிடுகிறார். கடைசியாக அக்டோபர் 3ஆம் நாள் "கல்கி" இதழில் கூட, " ராமாவதாரத்தில் மானுஷ சுபாவத்தின் போக்கும், அதனுடன் சாதாரண தருமத்தின் விளக்கமும் சேர்ந்துவரும்" என்று "அவதார"த்திற்கு அஸ்திவாரம் அமைத்துக் காட்டியிருக்கிறார்.

ஆனால், பெரியார் ராமசாமியைத் தாக்குவதற்குப் புறப்பட்ட தோழர் சிவஞானம் தன் கட்டுரையில் குறிப்பிட்டிருப்பது -அவரது குருவாம் ஆச்சாரியாரை எந்த வகையில் எதிர்த்து நிற்கிறது என்பதைக் கீழே படியுங்கள்.

"கடவுள் மனித உடல் தாங்கி, மண்ணுலகில் பிறப்பதில்லை என்பது மதவாதிகளும் அறிந்த உண்மை தான்."

சீடர் சிவஞானம், குருநாத ஆச்சாரியாரின் முரண்பட்ட வாதத்திற்கு மற்றுமொரு முரண்பாட்டை இவ்வண்ணம் தருகிறார், "ராமன் வாழ்வாங்கு வாழ்ந்த மனிதன் - அவனை விண்ணுறையும் தெய்வமாகப் போற்றினர்" என்றும் சிவஞானம் வாதிடுகிறார் - ஆச்சாரியாருக்குப் பலம் தேட முனைந்தவர், ஆச்சாரியாரின் ஆரம்பப் பாதையிலே போய், அவரை அறியாமலே தடுமாறுகிறார் -பாவம்!

"அயோத்தி வேந்தன் தசரதன், அறுபதினாயிரம் மனைவியரை மணந்து வாழ்ந்ததாக ராமாயணம் கூறுகிறதே; இது அடுக்குமா? பெண்ணுலகம் அங்கீகரிக்குமா? என்றெல்லாம் கேள்வி கேட்டு அங்கலாய்த்துக் கொள்கிறார் ஈ.வெ.ரா! ராமாயணம் இயற்றப்படும் காலம் வரை இல்வாழ்க்கையில் ஒருத்திக்கு ஒருத்தன் என்ற கொள்கை கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. அது போல ஒருத்தனுக்கு ஒருத்தி என்ற கொள்கை ஏற்றுக் கொள்ளப்படவில்லை. ஆம், பெண் கற்பு வற்புறுத்தப்பட்டதேயன்றி ஆண் கற்பு வற்புறுத்தப்படவில்லை. இந்தக் கொடுமைக்கு எதிராக ஆண் கற்பை போதிக்கிறது ராமாயணம்.

"தந்தை தசரதன் அறுபதாயிரம் மனைவியரை மணந்தவன் - மைந்தன் ராமனோ ஏகபத்தினி விரதன். இல்வாழ்க்கைப் பண்பில் எத்தகைய புரட்சிகரமான மாற்றம்!"

மேற்கண்ட இவ்வளவும் எழுதியிருப்பது தோழர் சிவஞானம் தான்! ராமனும் சீதையும் வாழ்ந்த வாழ்க்கைதான் இல்வாழ்க்கைப் பண்பாம்! புரட்சிகரமான மாற்றமாம்!

எவனோ, ஏதோ சொன்னான் என்று, மனைவியை கர்ப்பத்தோடு காட்டிலே கொண்டு போய்விட்டு விட்டு, நாட்டை ஆண்டு கொண்டிருந்தானே ராமன் அவன் இல்வாழ்க்கைப் பண்பின்

இலக்கணமாம்! காட்டிலே லவன் என்ற மகனைப் பெற்று, பிறகு குசன் என்ற மகனையும் ரிஷி அருளால் பெற்று கணவனிடம் சென்று வாழ நினைக்காமல் காட்டிலேயே காலங் கழித்தவள் - மாதர் வாழ்வில் புரட்சிகரமான மாற்றத்தைச் செய்த புனிதவதியாம்! புலம்புகிறார் சிவஞானம்; விபூஷண போதை தலைக்கேறிவிட்ட காரணத்தால்!

தம்பி இலக்குமணன், அழகு மனைவி ஊர்மிளாவை அரண்மனையிலே விட்டுவிட்டு, கல்யாணம் பண்ணியும் பிரமச்சாரியாக காட்டிலே வாழ்ந்து அண்ணன் அண்ணி படுத்திருக்கும்போது காவலும் காத்து நின்றானாம்! அதைப் பற்றி ராமனோ சீதையோ கவலைப்பட்டிருந்தால் இலக்குவன் காத்திருக்க, அவர்கள் களிப்பில் ஆடவும், கண் அயரவும் மனம் வந்திருக்குமா? இல்வாழ்வின் பண்பாம் இது? இளித்தவாயனும் ஏற்க முடியாத இலக்கணம்! பாதகப் பண்பு சிவஞானத்தின் வாதம் சரிதானா என்று ஆச்சாரியாரையே கேட்போம்!

"ஏகபத்தினி விரதத்தை போதிக்கவே ராமாயணம் எழுதப்பட்டது என்று சிவஞானம் கூறுகிறாரே, அப்படியானால் ஆச்சாரியாரே! ராமனை விஷ்ணு அவதார மென்கிறீர்கள். நீங்கள் அந்த விஷ்ணு உலகத்திற்கு ஏக பத்தினி விரதத்தை போதிக்கப் புறப்பட்டது உண்மை என்றால், அதற்காகவே ராமவதாரம் எடுத்தார் என்பது சரி என்றால், அதே விஷ்ணு, பூதேவி, ஸ்ரீதேவி என்ற இருவரைத் தழுவுவானேன்? அந்த விஷ்ணு எடுத்த கிருஷ்ணாவதாரத்திலே அளவில்லா கோபிகைகளுடன், குலவுவானேன்? பாமா, ருக்மணி, ராதா முதலியோரின் ஆசைநாயகனாக இருப்பானேன்?" இப்படி யெல்லாம் ஆச்சாரியாரை நோக்கி கேள்விகள் எழுவதற்குத் தான் சிவஞானத்தின் கட்டுரை பயன்படும்.

ராமாயணத்தின் மூலம், கற்பு சமமாக்கப்பட்டு ஏகபத்தினி விரதம் பாதுகாக்கப்படுகிறது என்று வாதாடுகிற சிவஞானம், பாரதத்தின் மூலம் - அய்வருக்கும் தேவியாக இருந்தவளின் வரலாறு மூலம் - என்ன பாடம் உலகுக்கு போதிக்கப்படுகிறது என்று கூறுவாரோ, யார் கண்டது? இருதார மணம் புரிந்துகொண்ட குமரக் கடவுளின் கதை மூலம் என்ன பாடம் கிடைக்குமென்று கூறுவாரோ தெரியவில்லையே! இந்திரன் என்று தெரிந்தும் அவனோடு கூடி நின்றாள் அகலிகை என்று ஆச்சாரியார் எழுதியிருக்கிறார் -வால்மீகியும் எழுதியிருக்கிறார்.

அந்தத் தவறுடைய தவ முனிவன் பத்தினியை சாப விமோசனம் செய்து வணங்கி நின்றான் ராமன் -என்கிறதே ராமாயணம்; அந்த ராமாயணமா கற்பு நிலையைப் பாதிக்கும் ராமனைக் கதாநாயகனாக கொண்டது என்று கூறுகிறார் சிவஞானம்!

**அந்தோ! அந்தோ! வெட்கம் வெட்கம்!**

"ராமன் வட நாட்டான்; ஆகவே தமிழ் நாட்டார் அவனை வழிபடக் கூடாது என்று வம்பு பேசுவது நிறவெறிப் பேயாட்டமே யன்றி அறிவு வழிப்போராட்டமன்று."

இந்தப் பொன்னான(?) கருத்தையும் வீசியிருப்பவர் தோழர் சிவஞானம் தான்! மனிதன் தெய்வீக சக்தி பெற்று வழிபடுதற்குரியவனாகிறான் - அப்படி ஆனவன் ராமன் - அவன் வடநாட்டானாயிருந்தால் என்ன? வணங்குவதில் என்ன தவறு?

இப்படிக் கேட்கிறார் சிவஞானம், பொட்டி ஸ்ரீராமுலு தெலுங்கு நாட்டவர் என்பதற்காக அவர் தியாகத்திற்குத் தரவேண்டிய மதிப்பைத் தர மறுக்கும் சிவஞானம், நம்மைப் பார்த்து "நிற வெறிப் பேயாட்டம்" ஆடுகிறோம் என்கிறார்! நல்லவேளை, இதன் மூலமாகவாவது, வேறு வேறு "நிறங்கள்" என்ற உண்மையை ஒத்துக் கொள்கிறாரே!

வடநாட்டு ராமனை வணங்கினால் என்ன என்று கோபத்தோடு கேட்கும் சிவஞானம், தெய்வமாகப் போற்றப்படும் கண்ணகியை வணங்கும் வடநாட்டார் யாருமில்லை என்பதை வெட்கத்தோடு ஒத்துக் கொள்வாரா? கண்ணகியின் புகழ் தமிழகத்திலேயே சரியாகப் பரவ முடியாதபடி - ஆரிய சீதை அடியெடுத்து வைத்து விட்டாள் என்பதை சிவஞானங்கள் மறுக்க முடியுமா?

வடநாட்டு ராமனை வணங்க மறுப்பது நிறவெறி என்கிற சிவஞானம், மேல்நாட்டு அப்போலா, அர்குலிஸ் போன்ற தேவதைகளை நிறவெறியின்றி வணங்கத் தயார்தானா?

கடைசியாக, சிவஞானம், ராமனைக் கடவுளாக்கியது கம்பரல்ல - முதலில் சிலப்பதிகாரம் எழுதிய இளங்கோவடிகள் கூட ராமனைக் கடவுளெனக் குறித்திருக்கிறார் என்கிறார்.

யார் முதலில் சொன்னால் என்ன; ராமன் கடவுள் அல்ல; ராமாயணம் பண்புள்ள காவியம் அல்ல - அதை நம்பி மக்கள் தங்கள் மதியை இழக்கக் கூடாது என்பது தான் அறிவுடையோர் வாதம்!

இதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும் சிவஞானங்கள்! இளங்கோவடிகள் ராமனைப் பற்றி குறிப்பிடும் முறையும், கம்பர் குறிப்பிடும் முறையும் வேறு வேறானவை !

கம்பர், தானே ஆழ்வாராக மாறி ராமக்கடவுளைத் தொழுது பாடுகிறார். இளங்கோவடிகளோ, அந்தக் காலத்து மக்கள் உள்ளத்தை, வாழ்க்கை நிலையை நம்பிக்கைகளை, ஆச்சியர் பாடும் குரவைப் பாட்டு மூலமாகச் சொல்லுகிறார். இளங்கோவடிகள் சிலப்பதிகாரம் பாடுவதற்கு முன்பே ராமகாதை இருந்திருக்கிறது - ஆனால் அவர் கம்பரைப்போல ராமாயணம் எழுத எண்ணவில்லை; கண்ணகி என்ற தமிழச்சியின் மாண்புக்கோர் நூல் யாத்திருக்கிறார். கம்பரோ, தமிழகத்து சரித்திரக் காதை எதுவும் கிடைக்காதவர்போல வடமொழி வால்மீகி நூலுக்கு தமிழ் மெருகு கொடுத்துப் பழி தேடிக் கொண்டிருக்கிறார், ராமனைக் கடவுளாக்கித் தொழுததின்மூலம்!

தமிழகத்து வரலாறு எதையும் எழுத வால்மீகி ஆசைப்பட்டாரில்லை! ஆனால் கம்பரோ வடநாட்டு சரிதை எழுதியிருக்கிறார்!

"ஏகபத்தினி விரதம்" என்ற கொள்கை வலியுறுத்தப்பட கற்பு இலக்கணம் சொல்லப்பட, சிலப்பதிகாரத்தைவிட ராமாயணம் தகுதி வாய்ந்தது என்று சிவஞானங்கள் கருதுகிறார்கள். இது வடநாட்டுக்கு காவடி தூக்கும் பரம்பரைப் பழக்கத்தின் பாற்பட்ட கருத்து! இராவணன் காலத்திலே கிளம்பிய விபீஷணக் கொள்கை! இந்தக் கொள்கை என்று ஒழியுமோ? எப்போது நாடு நலம் பெறுமோ?

ராமபக்தர்கள் தெளிவு பெறுவது வெறுங்கனவு தானோ? காலந்தான் பதில் கூறவேண்டும்!

๑★๘

# நாடாண்ட மன்னன் நாதியற்று செத்தான்

# 8

ராமர்,லக்குமணர், சீதை மூவரும் கானகத்தில் தங்கள் வாழ்க்கையைத் துவங்கிவிட்டனர். இங்கே அயோத்தியில், தசரதன் புத்திர சோகத்தில் புழுவாய்த் துடிக்கிறான். அந்தச்சமயத்தில் அவனருகே இருப்பது கவுசல்யை என்றும் ஆச்சாரியார் குறிப்பிடுகிறார்.

"அரசன் இன்னது செய்வது என்று தெரியாமல் தத்தளித்து அரை ஜீவனாக இருக்கும் சமயத்தில் கவுசல்யை தனக்குத் தோன்றிய நியாயத்தை யெல்லாம் சொல்லித் தசரதனுடைய குற்றத்தை வெகு கடுமையான முறையில் குத்திக் குத்திக் காட்டிப் பேசினாள்."

கவுசல்யாவின் பதிபக்தி எத்தன்மைத் தூய்மை யுடையதாயிருக்கிறது பாருங்கள். உயிருக்கே மன்றாடி, அரை ஜீவனாகக் கிடக்கிறானாம் மன்னன். வெகு கடுமையாக குத்திப் பேசினாளாம் கவுசல்யாதேவி! ராமனின் தாயார். அது மட்டுமா? - மகனைக் காட்டுக்கு அனுப்பி விட்டு மணாளனையும் மரணப் படுக்கையிலே காணும் அந்தக் கற்புக்கரசி(?) கணவனிடம் என்ன சொல்லிப் புலம்புகிறாள்; ஆச்சாரியாரே எழுதியிருக்கிறார் படியுங்கள்.

"எனக்கு யார் கதி? ஸ்த்ரீக்குப் புருஷன்தான் கதி. நான் பெற்ற புருஷனோ வேறு மனைவியுடன் சேர்ந்து கொண்டு என்னைக் கைவிட்டுவிட்டான். என் மகனோ காட்டுக்குப் போய்விட்டான். என் பிறந்தகத்துப் பந்துக்கள் தூர தேசத்தில் இருக்கிறார்கள். புருஷன் உயிரோடிருக்க அங்கேபோய் நான் எப்படிப் பந்துக்களை அண்டிப் பிழைக்க முடியும்? நிர்க்கதியாக நிற்கிறேன். உமக்கு இதைப்பற்றி யெல்லாம் என்ன கவலை?"

தன்னைப் பற்றியே கவலைப்பட்டுக் கொள்ளும் தர்ம பத்தினி கவுசல்யா தேவி, கைகேயியைவிட எந்த விதத்தில் உயர்ந்தவள் என்று ராமாயணக் கதையையே ஆதாரமாக வைத்துக் கேட்கிறேன். பந்துக்கள் வீட்டில் போய் அண்டிப் பிழைக்கலாமென்றால், அதற்கும் கணவன் உயிரோடிருந்து தொலைகிறானே என்று ஒரு ராஜ பத்தினி புலம்புகிறாள் என்றால், அவளது பண்பின் அளவு எத்தகையது என்பதை இயம்பவும் வேண்டுமோ?

தசரதனோ, புத்திர சோகத்தால் தான் வருந்துவதற்குக் காரணம் இளம் வயதில் தனக்குக் கிடைத்த சாபமே என உறுதியாக எண்ணுகிறான்.

ஓசை கேட்டு அம்பு எய்வதிலே அவன் வல்லவனாம் வாலிப வயதில் ஒருநாள் வனாந்திரப் பகுதியில் ஒருவன் குடத்தில் தண்ணீர் முகப்பதை யானை நீர் குடிக்கும் ஓசையெனக் கருதி அம்பு பூட்டினான். அந்த அம்பு மனிதனைக் கொல்லவே அந்த மனிதனின் பெற்றோர் அம்பெய்திய தசரதனும் புத்திர சோகத்தால் வருந்துக எனச்சாபமிட்டுச் செத்தனராம். ஆகவே தசரதனது, வாட்டத்திற்குக் காரணம் கைகேயி அல்ல; இளமையிற் பெற்ற சாபமே - என்பதும் தெளிவாகி விட்டது. ஓசையைக் கேட்டு அம்பெய்து வெல்லக்கூடிய அத்துணை சிறப்புடைய வீரன் தசரதனுக்குத்தான், ஒரு போர்க்களத்திலே கைகேயியின் துணை அத்யாவசியமாகப் போய்விட்டது! பாவம்; அவனால் ஓசையைத்தான் கேட்க முடியுமே தவிர; அந்த ஓசை யானையின் ஓசையா? - தண்ணீர் முகக்கும் பானையின் ஓசையா? -என்று கண்டுபிடிக்கத் தெரியாதுபோலும்! பால்யத்தில் தான் பெற்ற சாபத்தின் சாயலே இந்த சங்கடம் என்ற கதையை கவுசல்யாவிடத்திலே அவன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே.

“மார்பு அடைக்கிறது! இனி ஏதும் மிச்சமில்லலே கவுசல்யே! நீ என் கண்களுக்குத் தெரியவில்லை. மரணம் நெருங்குகிறது - அருகில் வா! விளக்கில் எண்ணெய் வற்றிப் போயிற்று - கவுசல்யே! சுமித்திரே!” எனக் கூறினான். வர வர பேச்சு அடங்கிப்போய் அன்றிரவே உயிர் நீத்தான் அரசன்.

இதையும் ஆச்சாரியார் விபரமாக எழுதியிருக்கிறார். இன்னும் ஒரு வேதனையான வேடிக்கையையும் எழுதியிருக்கிறார் பாருங்கள்.

உயிர்நீத்த விஷயம் பக்கத்திலிருந்த கவுசல்யை சுமித்திரைக்குக்கூடத் தெரியவில்லை.

காரணம் என்னவாம்? கூறுகிறார், படியுங்கள்.

"சோகத்தாலும், கண் விழித்த களைப்பாலும், அந்தப்புரத்தில் ஒரு மூலையில் அயர்ந்து கிடந்தார்கள்.

மணவாளன், "மரணம் நெருங்கிவிட்டது - எல்லோரும் அருகே வாருங்கள் - கவுசல்யே! சுமித்திரே! விளக்கில் எண்ணெய் வற்றிவிட்டது!" என்று கதறியிருக்கிறான். பேச்சும் வர வர அடங்கி விட்டது - என்று அவனது மரணப்படுக்கையின் இறுதிக் கட்டம் வர்ணிக்கப்படுகிறது. அந்த வேதனைப் படலத்தின்போது, கவுசல்யா தேவியும், சுமித்திராதேவியும் கண்விழித்த களைப்பால் அயர்ந்து போய்விட்டார்களாம்! தசரதன் உயிர் நீத்த விஷயம் பொழுது விடியும்வரையில் அவர்கட்குத் தெரியாதாம்! பொழுது விடிந்த பிறகும் எப்படித் தெரிகிறது? ஆச்சாரியாரே அதையும் எழுதியிருக்கிறார்; பாருங்கள்!

"பொழுது விடியும் காலத்தில் சூதகமாகாதவர்கள் அந்தப்புர வாயிலில் வழக்கம்போல் கூடி அவரவர்களுடைய கிரமப்படி அரசனை எழுப்ப - சுப்பிரபாதம் பாடவும், வாத்தியம் வாசிக்கவும் செய்தார்கள். அரசன் எழுந்ததாகக் காணவில்லை, பணியாட்கள் வெகு நேரம் காத்திருந்துவிட்டு, 'இன்று அரசர் ஏன் இன்னும் எழவில்லை' என்ற சந்தேகத்துடன் உள்ளே பிரவேசித்தார்கள். அரசன் உயிரற்றுக் கிடப்பதைக் கண்டார்கள். பிறகு அரண்மனை முழுதும் விஷயம் தெரிந்து ஒரே துயரக்கடலாயிற்று."

அயோத்தி வேந்தன் - பட்டத்தரசி மூவரும், ஆசை சரசிகள் அறுபதினாயிரவரும் கொண்ட தசரத மகா ராஜன் - இரவு வெகுநேரம் வரையிலே, யாரும் கவனிக்காத அளவுக்கு பிணமாகக் கிடந்தான் என்பது பரிதாபத்திற்குரிய விஷயம்தான். இப்படி பல மனைவிகளை கட்டிக்கொள்வதிலே வருகிற ஆபத்தே இதுதான்!

மூத்தவள் கவனிப்பாள் என்று இளையவள் தூங்க - இளையவள் கவனிப்பாள் என்று அடுத்தவள் தூங்க - இப்படி அன்பு மனைவிகள்

அனைவரும் அரசனின் மரணப் படுக்கையருகே போட்டி போட்டுக் கொண்டு தூங்கியதால்தானே அவன் தூங்க ஆரம்பித்த நீண்ட தூக்கத்தை யாரும் கவனிக்க முடியாமற் போயிற்று!

உயிர் பிரிந்த உடனே - திறந்திருக்கும் கண்களை மூடி வைக்கவும், அந்த தேசாதிபதியின் பக்கத்தே ஆளில்லாமல் போய்விட்டது, பாவம்! - கடைசி மூச்சு பிரிவதற்குள் பால் வார்க்கும் சடங்கு நடத்தி வைக்கக்கூட அந்தப் பார் ஆண்ட பார்த்திபனுக்கு நாதியில்லாமல் ஆகிவிட்டது! ஆயிரக்கணக்கிலே மனைவியர் - இறுதி மூச்சுவிடும்போது அவர்களில் ஒருவர் மடியிலாவது மன்னவனுக்கு இடம் கிடைக்காது போய்விட்டது - அப்படி அயர்ந்து தூங்கிவிட்டனர். அக்கால ஆரியப் பண்பு போலும் அது! தூக்கத்திலே மிகவும் திறமைசாலிகள் போலும் அயோத்தி ஆரணங்குகள்! அயோத்தியென்ன, மிதிலையின் மின்னல் கொடியாள் சீதாதேவி கூட, இந்திரன் மகன் சயந்தன் காக்கை உருவில் தன் யாக்கையைக் கொத்தியபோதும், குருதி வழிந்தபோதும் எழாமல் தூங்கிக் கொண்டிருந்த திறமைசாலியாயிற்றே! கற்பின் திருவுருவமாயிற்றே! எப்படியோ ஒருவிதமாக தசரத மகாராஜன் மாண்டுவிட்டான். புலன்களை அடக்கியாளும் திறமைபெற்றவன் என்று வால்மீகியால் புகழப்பட்டவனாம் தசரதன். ராமாயண ஆரம்பத்திலேயே முனிவர், தசரனைப் பற்றிய அப்படிக் குறிப்பு எழுதியிருக்கிறாராம். ஆச்சாரியார் கூறுகிறார், புலன்களை அடக்கியாளும் திறமை பெற்றவனுக்குத்தான் ‘அறுபதாயிரம்’ தேவைப்பட்டிருக்கிறது!

இன்ப கேளிக்கை ஒன்றுக்காக மட்டுமே, இளைய மனைவி கைகேயி இருந்தாள். ராமனுக்கு ‘முடிசூட்ட நாள்’ குறிப்பிட்டிருந்த முதல்நாள் இரவு, கைகேயியிடம் காம போதையில் தசரதன் உளறினான் என்று ஆச்சாரியாரே எழுதியிருக்கிறாரே; அந்தக் காம போதைகூட - புலன்களை அடக்கும் திறமையால் வந்ததுதான் போலும்! புத்திர சோகத்தை தாங்கமுடியாமல் இறந்து விட்டானே; அந்த நிகழ்ச்சியும் புலன்களை அடக்கும் திறமையால் ஏற்பட்டதாகத்தான் ஆச்சாரியார் கூறுவாரோ என்னவோ? “கண்ணில் பட்ட காரிகையாம், இளமை பொங்கும் கைகேயி எனும் அழகிபால் மனதைப் பறிகொடுத்து, வாயை அடக்கிப் பேசமுடியாமல் அவளுக்குப் பிறக்கும் மகனுக்கே

நாடு தருவேன் எனக் கூறி, அவளுடன் தினங்தோறும் உடல் சுகம் அனுபவித்து, 'ராமன் காடேகினான்' என்ற சொல் செவி புகுந்ததும் சிந்தைகெட்டு செத்து மடிந்த தசரதன்" புலன்களை அடக்கியவன் என்று கூறுவது பொருந்துமா என்று பூணூல் வேந்தர் ஆச்சாரியாரைக் கேட்கிறேன்.

ஐ✶ஐ

# 9 தந்தை மகனும் தருமம் தவறியவர்கள்!

சித்ரகூட மலைச் சாரலிலே, ‘சீதா! அதோ, பறவைகள் விளையாடுவதைப் பார்! மலைப் பாறைகளைப் பார்! அவற்றில் தாதுக்கள் நீலமும், மஞ்சளும் சிகப்புமாக எப்படி மின்னுகின்றன! வனத்தில் செடிகளையும் கொடிகளையும் பார்! புஷ்பங்களைப் பார். நாம் என்னவோ எண்ணினோம்; இந்த வனவாசம் எவ்வளவு மகிழ்ச்சியாயிருக்கிறது. பட்டண வாசத்தைவிட இந்த வனவாசம் எவ்வளவு இன்பமாயிருக்கிறது” என்றெல்லாம் ஆச்சாரியார் எழுதியிருக்கிறபடி, சக்கரவர்த்தி திருமகனும் ஜானகியும் உரையாடிக் கொண்டு,இன்பமாகப் பொழுது போக்கி “கஷ்டப்பட்டுக்” கொண்டிருந்த சமயத்திலே பரதனும், மூன்று அரசியரும், மற்றவர்களும் வந்து சேர்ந்தார்கள். போருக்கு வருகிறானா என்று கூடத் தெரிந்துகொள்ள முடியாமல் அவசரப்பட்டுக் குதிக்கிறது லட்சுமண அவதாரம். வந்த பரதனும் மற்றவரும் ராமனைக் கண்டு வருந்தினார்கள். தசரதன் இறந்த செய்தி அவர்கள் சொன்ன பிறகுதான் மகாவிஷ்ணுவின் அவதாரமான ராமருக்குத் தெரிகிறது! தெரிந்த பிறகு, தந்தைக்கு செய்து முடிக்கவேண்டிய கடமைகளைச் செய்து முடித்தார்கள்.

அங்கு மந்தாகினி என்னும் நதியிலேதான் அவர்களுக்கு வேண்டிய தண்ணீரை வழக்கமாக லட்சுமணன் எடுத்துச் செல்வான் என்று கேள்விப்பட்டதும் கவுசல்யா தேவியும் - சுமித்திரையும் அழுதார்களாம். கவுசல்யை ஏன் அழுதிருப்பாள்? அரண்மனையிலே கேட்ட நேரத்திலே தண்ணீரும் பன்னீரும் கிடைக்குமே இங்கே

என் மகன் ஆற்றுத் தண்ணீர் குடித்துக் கஷ்டப்படுகிறானே யென்று அழுதாள் போலும்!

சுமித்திரை அழும்போது, கவுசல்யை என்ன சொல்லி தேற்றுகிறாள் தெரியுமா? ஆச்சாரியார் நடையிலேயே படியுங்கள்.

“சுமித்திரையே! என் மகனுக்காக, இந்தத் துறையில் உன் மகன் தினமும் ஆற்றில் இறங்கிச் சுத்தமான ஜலம் ஆசிரமத்துக்கு எடுத்துப்போய் வைக்கிறான், பார்த்தாயா? அண்ணனுக்காக எந்த வேலையும் சந்தோஷமாக செய்வான் உன் மகன்!”

என்று கவுசல்யை கூறி அவளை சமாதானப்படுத்துகிறாள். இலக்குமணனின் பெருமையைக் கூறுவதுபோல், அவன் கஷ்டங்களை அவனது தாயிடம் மறைக்க எண்ணுகிறாள் மூத்தவள்.

தண்ணீர் எடுத்தல் முதலிய வேலைகளைக்கூட இலக்குமணனே செய்திருக்கிறான் என்று எண்ணும் போது, சீதையைப் பற்றி நாம் என்ன கருதுவது என்றே புரியவில்லை. ராமனின் அணைப்பிலேயே ஈடுபட்டு ஆரண்ய சுகத்தை அனுபவித்த சீதாதேவி, தன் ‘கொழுந்தனார்’ ‘லட்சுமணன்’ குடமெடுத்துத் தண்ணீர் கொண்டுவரச் செல்லும் நிலைமையை எப்படித்தான் அனுமதித்தாளோ தெரியவில்லை. உடல் நலமில்லாது வருந்தும் பெண்கள் கூட, தங்கள் வீட்டு ஆண்மக்கள், அடுக்களை வேலைகள் செய்வது, தண்ணீர் கொண்டு வருவது போன்ற பணிகளைச் செய்ய அனுமதிக்க மாட்டார்கள், சீதாதேவியோ கற்பின் அணிகலம்! பழம் பாரதத்தின் பெண்மைச் சிறப்புக்கோர் எடுத்துக்காட்டாம்! அவள் இம்மாதிரி வேலைகளை இலட்சுமணன் செய்யும்போது பார்த்துக் கொண்டிருந்தாளாம்.

அது நிற்க, பரதனும் ராமனும் கானகத்தில் சந்தித்த கட்டமே மிகப்பெருமை வாய்ந்த கட்டம் என்று புகழ்கிறாரே ஆச்சாரியார் -அந்தக் கட்டத்தை சிறிது கவனிப்போம்.

“பரதன் ராஜ்யத்தை ஆளவேண்டும்; ராமன் பதினான்கு வருடம் காடேக வேண்டும்” என்பதுதான் தந்தையின் கட்டளை, இந்த வரிகளை நன்றாக ஞாபகம் வைத்துக்கொண்டு இந்தக் கட்டத்தைப் பற்றி சிந்திக்க வேண்டும். பரதன், ராமனைத் திரும்ப அழைக்கும்

போது ராமன் என்ன பதில் சொல்லுகிறான் தெரியுமா? "தந்தை, உனக்கு ராஜ்யப் பொறுப்பைத் தந்தார் - எனக்கு வனவாசம் தந்தார். இப்படி நம்மிருவருக்கும் வாழ்க்கையை வகுத்துக் கொடுத்து மரணமடைந்தார். ராமனுடைய உள்ளத்திலே தசரதனைப் பற்றிய ஆத்திரம் எவ்வளவு இருந்திருக்கிறது என்பதைப் பாருங்கள். ஒருவனை நாடாளவும் இன்னொருவனைக் காடாளவும் செய்து, இருவருக்கும் தந்தை, வாழ்க்கையை வகுத்துக் கொடுத்துவிட்டார், என்று எரிச்சலை, கேலியோடு கலந்து வழங்குகிறான் ராமன்.

ஜாமாலி என்பவர், ராமனை எப்படியாவது அயோத்திக்கு வரவேண்டும் என்று கோரியபோது சொல்லுகிறான்;

"சத்தியத்தை நீர் ஒரு பொருட்டாக மதிக்காமல் நாஸ்திகம் பேசுகிறீர். சத்தியத்தைவிட மேலான ஒரு பொருள் உலகத்தில் இல்லை" இப்படிச் சொல்வது ராமன். தந்தை பரதனுக்கு முடிசூட்ட கட்டளையிட்ட பிறகு அதை மீறுவது சரியல்ல என்கிறான். சத்தியத்தை விட மேலானது எதுவுமில்லை; அதை மீறுவது நாஸ்திகம் என்கிறான். அப்படியானால், கேகய மன்னனுக்கு அளித்த வாக்குறுதியை - சத்தியத்தை - மீறுவது மட்டும் நாஸ்திகமில்லையா? அந்த தசரதனை தர்ம ராஜன் என்றும் நேர்மையான வேந்தன் என்றும் போற்றுவதிலே உண்மையிருக்கிறதா? ஆச்சாரியார் இதற்கு பதில் சொல்ல முன் வருவாரா? ராம காதையை தலையிலே தூக்கி வைத்துக்கொண்டு பரதனைப்போல் ஆடுகிறவர்கள் இருக்கிறார்களே அவர்களைக் கேட்கிறேன் - தசரதன் சத்தியம் தவறியவன்தான் என்பதை மறுக்க முடியுமா இவர்களால்? ஆட்டு மந்தைபோலக் கூடி, "கோவிந்தா" போட்டுப் பயனில்லை. நாம் கூறும் கருத்துக்களை நேர்மையாக எதிர்த்திடும் நாகரிகமுள்ளவர்கள் முன்வர வேண்டுகிறோம்; தசரதன் சத்தியம் தவறிய நாஸ்திகனா இல்லையா என்பதை விளக்கிட வேண்டும் - வருவார்களா? - துணிவு உண்டா? ஆதாரம் இருக்கிறதா ?

நிற்க, ராமனும் சத்தியத்தை எப்படிக் காப்பாற்றினான் என்ற அழகை சற்று கவனிப்போம்.

பரதன் அழைத்தான் - ராமன் வர மறுத்துவிட்டான். வசிஷ்டர் அழைத்தார் - வர மறுத்துவிட்டான், ஏன்? ராமனுக்கு அயோத்தி

திரும்பவும், ராஜ்ய பாரத்தை ஏற்கவும் ஆசையில்லை; தந்தை, தம்பிக்குத் தந்த ராஜ்யத்தை தான் அபகரிக்க விரும்பவில்லை - அதனால் அவன் வர மறுத்துவிட்டான் என்றா கருத முடிகிறது? இல்லை - இல்லவே இல்லை! - ராமன், தசரதன், வசிஷ்டன் முதலியோர் சதி நடத்தி ராமனுக்கு முடிசூட்ட ரகசிய ஏற்பாடு செய்தபோது, அதை முறியடித்து, அவனைக் காட்டுக்கு அனுப்பினாளே கைகேயி - அவளிடத்திலே அல்லவா இருக்கிறது சூட்சமம்! - அவள், பரதனைப்போல ராமனைக் கெஞ்சிக் கூப்பிட்டிருப்பாளேயானால் ராமன் கட்டாயம் வந்தேயிருப்பான். பரதன், தற்கொலை செய்து கொள்வேன் என்றான் - தீயில் இறங்குவேன் என்றான் - என்னவெல்லாமோ சொல்லி அழுதான்; ஆனால், கூப்பிடவேண்டிவர்கள் கூப்பிடவில்லை; ராமனும் அயோத்தி திரும்பவில்லை என்பதுதான் உண்மை!

உள்ளபடியே, ராமனுக்கு அயோத்தியில் அரசனாக வீற்றிருக்க ஆசையில்லை என்று யாரும் கூற முடியாது. அப்படி ஆசையில்லாவிட்டால், பதினான்கு ஆண்டுகள் கழித்து அவன் அரசனாக முடிசூட்டிக் கொண்டிருக்க மாட்டான். தந்தையின் ஆணையை - சத்தியத்தை மீறிய நாஸ்திகனாக ராமன் இங்கே மாறிவிட்டான் தந்தை, ராஜ்யத்தைப் பரதனுக்குத்தானே கொடுத்தார். பதினான்கு ஆண்டு கழித்து மீண்டும் ராமனே நாடாள வேண்டும் என்று கூறியது யார்? வரம் கேட்ட கைகேயியும் கூறவில்லையே! -பரதனுக்குரிய நாட்டை, சத்தியத்தை மீறி ராமன் அடைந்தது எவ்வாறு பொருந்தும்? நாட்டை மீண்டும் பெறுவதற்கு வசிஷ்டரும், ராமனும் எவ்வளவு சதி நினைப்போடு பேசியிருக்கிறார்கள் என்று ஆச்சாரியாரே எழுதுகிறார் காண்க.

ராமன் கூறுகிறான்; "தம்பி, நான் தந்த ராஜ்யமாகவே எண்ணி, நீ ஒப்புக்கொண்டு தந்தை சொற்படி நட!"

பார்த்தீர்களா; ராஜ்யத்துக்கு ராமன் மறைமுகமாகக் கொண்டாடும் உரிமையை! தசரதன் அளித்த வாக்குப்படி நாட்டுக்குரியவன் பரதன்! ஆனால், ராமனோ வெகு லாவகமாக - மிக நளினமாக - அது - "தான் தந்த நாடு" என்று கூறுகிறான் பரதனிடம்! தந்தையினால் பரதனது நாடு என்று சொல்லப்பட்டதை, தன்னுடைய நாடு என்று கூறிக்கொள்ள

எவ்வளவு தைரியமும், சத்தியம் மறந்த தன்மையும் இருந்திருக்க வேண்டும் அவதார புருஷன் அயோத்தி ராமனுக்கு! வசிஷ்டன் பேசுகிறான் பாருங்கள்!

"பரதா! ராமனுடைய அதிகாரத்தைக் கொண்டு சக்கரவர்த்தித் திருமகனுக்காக, நீ ராஜ்ய பரிபாலனம் செய்! அப்படிச் செய்தால், பழியுமில்லை - சத்தியமும் காப்பாற்றப்படும்."

முனிவர் சொல்லியிருக்கிறார் இப்படி! எந்த அளவுக்கு அருமையாக உபதேசம் செய்திருக்கிறார் என்று சிந்தியுங்கள்! எவ்வளவு பெரிய சதி இது! முதலில் ராமனுக்குப் பட்டம் கட்ட, சதி செய்தவர்களில் ஒருவர் வசிஷ்டர், அதே வசிஷ்டர் இப்போதும், ராமனுக்கு அயோத்தியின்மீது உரிமையை நிலைநாட்ட இதுபோல வழி சொல்லித் தருகிறார். ராமன் இல்லாவிட்டாலும் அவன் அதிகாரம் இருக்கட்டும் - அவனது ராஜ்யமே அயோத்தியில் நடைபெறுகிறது என்று தெளிவாகட்டும், என்பதுதான் முனிவரின் திட்டம்! - அதன்படி ராமனது பாதுகைகளை, சிம்மாசனத்திலே வைத்துவிட்டு பரதன், நந்திக் கிராமத்திலே யிருந்து ராஜ்யத்தை கவனித்து வந்தான். இதற்கு என்ன அர்த்தம் என்று கேட்கிறோம்? தந்தையின் சொல்லையும் -சத்தியத்தையும் மீறிவிட்டானா இல்லையா இராமன்?

ராமன் சிம்மாசனத்தில் உட்காரவில்லை; அவன் செருப்புகள் உட்கார்ந்தன.

"ஏ! தசரத ராஜனே! தந்தையாக வாய்த்த பாதகனே! என்னை சிம்மாசனத்தில் உட்காரக்கூடாது என்றாய் - இதோ அந்த சத்தியத்தை காப்பாற்றுவது போல் நடித்துக்கொண்டே, என்னுடைய செருப்புகளையே சிம்மாசனத்தில் வைத்துவிட்டேன். உன்னுடைய சத்தியம் - ஆணை - எல்லாம் இந்த செருப்புக்கு சமானம்."

என்று சவால் விடுவது போலத்தானே ராமன், தனக்கு பதிலாக தன் பாதரட்சை ஆளட்டும் என்றான் - இதற்கு ராமன் ஆட்சி என்ற பெயர் இல்லையா? - தந்தை வாக்கை மீறியதாக அர்த்தமில்லையா? - இப்போது, சென்னையிலே நேருவா உட்கார்ந்துகொண்டு ஆளுகிறார்? அவர் டில்லியிலே இருக்கிறார்: இங்கே அவரது அதிகாரம் கவர்னர் பிரகாசா மூலம் பிரயோகிக்கப்படுகிறது! இதுபோலத்தான் ராமன்

காட்டிலேயிருந்தான் - அயோத்தியிலே அவனது அதிகாரபூர்வமான பிரதிநிதியாக அவனது "புனிதமான" பாதரட்சைகள் இருந்து ஆட்சி புரிந்தன. ஆயிரம் முறை சொல்லுகிறோம்; ராமன் தந்தையின் வாக்கை மீறினான் - மீறினான் என்று! நெஞ்சிலே நேர்மை உள்ளவர்கள் - ராமனைக் காப்பாற்றத் துடிக்கும் பக்த கோடிகள் - ஆச்சாரியாரின் சீடர்கள் - ராமன், தந்தை வாக்கை மீறவில்லை என்பதை நிரூபிக்க முடியுமா? "என்னையா ஆளக்கூடாது என்று சொல்கிறீர்கள்? என் செருப்பை ஆளச் செய்கிறேன்?" என்ற விதத்திலே வெற்றி பெற்றான் சதிகார ராமன்! - "கவுசல்யையின் மகன்" என்றாலே தனிப் பிரியம் காட்டும் வசிஷ்ட முனிவரும், சதி நிறைந்த சாகசப் பேச்சால் ராமன் அதிகாரத்தை அயோத்தியில் நிலைநாட்டி ஜெயக்கொடி நாட்டினார். இதை ஆச்சாரியார் மறுப்பதற்கில்லை.

ஐ★ஐ

# 10 விஷ்ணு அவதாரம் எனப்படும் ராமனிடம்!

ஆச்சாரியார் தீட்டும் சக்கரவர்த்தித் திருமகன் இதுவரை, 69 அத்தியாயங்கள் வெளிவந்திருக்கின்றன. அவைகளில் 41 அத்தியாயங்களில் வந்த கதைக்கும், ஆச்சாரியாரின் அபிப்பிராயங்களுக்கும், அவ்வப்போது பதில் தரப்பட்டிருக்கிறது. ஆச்சாரியாரோ, அல்லது ராமாயணப் புலிகளோ - யாரும் மறுப்புரைக்க முன்வரவில்லை. வந்தாலும் வாதில் வெல்ல முடியாது என்பதும் அப்படி வருபவர்களிடம் உண்மை லவலேசமும் கிடையாது என்பதும் அவர்களுக்கே தெரியும்.

நாம், நாட்டு மக்கள் உண்மை நிலை உணரவேண்டு மென்பதற்காகவும் - ஆச்சாரியாரின் வாதங்களிலே எவ்வளவு கோணல் இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுவதற்காகவும் - மீண்டும் "சக்கரவர்த்தியின் திருமகனை"த் தொடருகிறோம். 42லிருந்து 69ஆம் அத்தியாயம் வரையிலுள்ள கட்டுரைகளை மொத்தமாக இரண்டொரு வாரங்களில் விமர்சனம் செய்துவிட்டு, பின்னர் அவ்வப்போது தொடர்ந்து எழுதுவோம்.

ராமனின் பாதரட்சைகளைத் தூக்கிக்கொண்டு, பரதன் சித்ரகூட மலையிலிருந்து புறப்பட்டான். ராமர் கோஷ்டியினர் தண்டகாரண்யத்திலே வேறு இடம் பார்ப்பதற்காக சித்ரகூட மலைச் சாரலை விட்டுப் புறப்பட்டனர். தண்டகாரண்யத்திலே பத்து வருடங்கள் அவர்கள் எந்த இடையூறுமின்றி சுகமாக வாழ்ந்தார்கள். அதற்கு முன்பு அகஸ்தியரை தரிசிப்பதற்காக ராமன் புறப்பட்டான். இந்த இடத்திலே, அகஸ்தியருடைய பெருமைகளைப் பற்றி, ஆச்சாரியார் வர்ணிக்கிறார் பாருங்கள்:

வாதாபி, இல்வலன், என்ற இரண்டு அரக்கர்கள் ரிஷிகளை மிகவும் தொந்தரவு செய்து வந்தார்கள். வாதாபியின் உடலை எவ்வளவுதான் வெட்டித் துண்டு செய்தாலும், மீண்டும் ஒட்டிக் கொண்டு உயிர்வந்துவிடும்; இப்படி ஒரு வரம் பெற்றிருந்தான் அவன். இல்வலன் என்பவன் ரிஷிகளை வீட்டுக்கு 'சிரார்த்த போஜனம்' என்று கூறி அழைப்பான் - அழைத்தால் போய்த் தீர வேண்டும். வாதாபி, ஆடாக மாறுவான். ஆட்டை வெட்டி இல்வலன் போஜனம் பரிமாறுவான். ரிஷிகள் வயிறு புடைக்க சாப்பிடுவார்கள். சாப்பிட்டானதும், இல்வலன், "வாதாபி!" என்று கூப்பிடுவான். பிராமணரின் வயிற்றுக்குள்ளே ஆட்டு மாமிசமாகப் போன வாதாபி, முழு உடல் பெற்று அவரது வயிற்றைக் கிழித்துக்கொண்டு வெளியே வருவான். பிராமண ரிஷி செத்து மடிவார். இப்படிப்பட்டவர்கள், அகஸ்தியரை அழைத்து விருந்து வைத்தார்கள். வாதாபி, அகஸ்தியர் வயிற்றுக்குள் மேஷ மாமிசமாகப் பிரவேசித்தான். சாப்பிட்டானதும், இல்வலன் வழக்கம்போல 'வாதாபி' என்று கூப்பிட்டான். ஆனால் அகஸ்தியர், வாதாபியை தன் வயிற்றுக்குள் ஜீரணித்துவிட்டதோடு, இல்வலனையும் எரித்துவிட்டார்.

ராமாயண நாடகத்திலே, முனிவர்கள் மாமிசம் சாப்பிட்டார்கள் என்று நடித்துக் காட்டினால், சீறி விழும் சிறியவர்கள் - இந்தப் பெரியவர் எழுதும் உண்மைகளை எப்படி மறுக்கப் போகிறார்கள் என்று தெரியவில்லை. ஆட்டு மாமிசமாக மாறி அவர்கள் வயிற்றுக்குள் புகுந்து அவர்களைக் கொலை செய்திருக்கிறான்!வாதாயி - ஆட்டு மாமிசத்திலே சூழ்ச்சி கலந்திருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள முடியாதவர்கள் திரிகாலமுணரும் ரிஷிகளாயிருந்தார்கள் என்பது எப்படிப் பொருத்தமாகும்? வலுக்கட்டாயமாக அழைத்துப்போய் சாப்பிட வைத்தார்கள் என்று கூறினாலும், வாதாபியை அழிக்கக்கூடிய சக்திவாய்ந்த அகஸ்தியர், தன்னை அவர்கள் அழைக்கும்போதே புரிந்துகொண்டு இருவரையும் எரித்திருக்கலாமே - என்றுதானே கேட்கத் தோன்றுகிறது! அப்படி அவர்களை அழிக்காமல் - மேஷ (ஆடு) மாமிசம் என்ற பெயரால் நரமாமிசம் (அவர் தம் பாஷைப்படி ராட்சச மாமிசம்) சாப்பிட்டு அதையும் ஜீரணித்துக்கொண்டார் என்பதிலிருந்து, அக்காலத்து ரிஷிகள் மனித மாமிசம் சாப்பிடவும் அஞ்சுபவர்கள் அல்ல என்று தானே தெளிவாகிறது !

போகட்டும் - அத்தகைய அகஸ்தியரை ராமன், தரிசித்தான். ராட்சசர்களை அழிப்பதற்காக தண்டகாரண்யம் போகிறேன் என்று கூறினான். உடனே அகஸ்தியர் அவனிடம், "மகாவிஷ்ணுவுக்காக விஸ்வகர்மா செய்த வில்லும், என்றும் குறையாத அம்புத் தூணியும், கத்தியும் தந்தார். ராமனே! ராட்சசர்களை ஒழிப்பாயாக! முன் மகாவிஷ்ணுவானவர் இந்த ஆயுதங்களைத் தந்தார். நீயும் இவற்றைத் தரித்து அவர்களை ஒழிப்பாயாக!" என்று ஆசீர்வாதம் செய்தார்.

முரண்பாட்டைக் கவனியுங்கள். மகாவிஷ்ணுவின் அவதாரம் ராமன் என்று சொல்லப்படுகிறது. ராமன், கடவுள் அவதாரம் அல்ல என்று கூறிய ஆச்சாரியாரே, மீண்டும் - ராமன் அவதார புருஷனே என்று வலியுறுத்தினார். இப்போது குழப்ப ஆரம்பித்திருக்கிறார்!

விஷ்ணு அவதாரம் எனப்படும் ராமனிடமே, "இந்தா; இது விஷ்ணு கொடுத்தது" என்று சொல்லி, வில்லையும் அம்பையும் அகஸ்தியர் கொடுக்கிறார். ராமன் யார் என்று திரிகாலமுணரும் தேவரிஷி அகஸ்தியருக்கே தெரியவில்லை யென்றால் இது பெரிய அதிசயம்தானே!

44ஆவது அத்தியாயத்தில் அகஸ்தியரைப் பற்றிக் கூறும்போது 'வரப்போகும் விஷயங்களையும் அறிந்தவர் அந்த முனிவர்' என்று கூறுகிறார். அப்பேர்பட்டவர் ராமனிடம், "இந்தா விஷ்ணு தந்த வில்!" என்று கூறுகிறார் என்றால், வேடிக்கையாகத்தானேயிருக்கிறது.

பஞ்சவடி ஆஸ்ரமத்திலே, சூர்ப்பனகை வருகிறாள். வால்மீகி, சூர்ப்பனகையை சுய உருவத்துடன் அறிமுகப்படுத்துகிறாராம். கம்பர், சூர்ப்பனகை அழகிய மங்கை போல வந்து ராம லட்சுமணரை ஏமாற்ற முயன்றதாக மாற்றி அமைத்திருக்கிறாராம். இந்த இடத்திலே ஆச்சாரியார் கம்பரை மிகவும் பாராட்டுகிறார். வால்மீகி எழுதியுள்ள கட்டம் அவருக்கே சங்கடமாக இருக்கிறது போலும்.

காம தாகத்தால் பேசும் சூர்ப்பனகையைப் பார்த்து ராமன், "அழகியே! என்னைக் குறித்து ஆசைப்படுவது உனக்குத் துன்பமாகும். இந்தப் பெண் - என் மனைவியானவள் கூட இருக்கிறாள். இரண்டு மனைவிகள் வியாபாரத் தொந்தரவுக்கு இடமாகும். இது உனக்குத் தெரியுமல்லவா? இதோ இருக்கிறான் என்னுடைய தம்பி, தனியாக இருக்கிறான். அதிலும்

பலத்திலும் எனக்குச் சமம். இவன் உனக்குத் தகுந்த புருஷன். இவனைக் கேட்டுப்பார். என்னை விட்டுவிடு" என்கிறான். லட்சுமணனிடம் அவள் போனதும், அவன், "நீ அண்ணனுக்கே இரண்டாந்தாரமாகப் போ - சீதைக்காகப் பயப்படாதே! ராமன் காதல் உன்பேரில்தான் வேகம் கொள்ளும் -சீதையை அலட்சியம் செய்துவிடுவான். நீ சுகமாக இருக்கலாம்" என்று ராமனிடம் திருப்பி அனுப்புகிறான்.

ராமனும் லட்சுமணனும் அவதார புருஷர்கள் - உத்தம புத்திரர்கள் - தீய பேச்சுக்களை பேசாதவர்கள் - சற்குண சீலர்கள் - என்றெல்லாம் ஆச்சாரியார் புகழ்கிறார். அப்படிப்பட்ட புருஷரத்தினங்கள் - அதுவும் அண்ணனும் தம்பியும் ஒரு பெண்ணிடம் இவ்வளவு தகாத முறையிலே நடந்து கொண்டிருக்கிறார்கள். இதனால்தான் ஆச்சாரியார் சூர்ப்பனகை வரும் கட்டத்தை கம்பர் அழகாக எழுதியிருக்கிறார் என்கிறார். இதற்கு என்ன பொருள்? ராமனும் அவன் தம்பியும் "ரசாபாச"மான முறையில் நடந்துகொண்டதை வால்மீகி மறைக்காமல் கூறுகிறான்; கம்பர் மறைத்திருக்கிறார் என்பது தானே!

வால்மீகிக்கும் ஆச்சாரியார் "சப்பைக் கட்டு" கட்டுகிறார் பாருங்கள்:

"ஒரு பெண்ணை அதிலும் காதல் கொண்ட பெண்ணை, இப்படியெல்லாம் வேதனை செய்யலாமா என்று சில மேதாவிகள் கேட்கலாம்; எதிரில் ஒரு விகார சொரூபத்தை வைத்துக் கற்பனா சக்தியை பயன்படுத்தினால் அவ்வாறு கேட்கமாட்டார்கள்" - இது ஆச்சாரியாரின் சமாதானம்.

விகார மிருக சொரூபமாக ஒரு பெண் வந்தால், "அவளை விட்டு விலகிப் போவார்களே தவிர, அவள் காதல் கொண்டதாகக் கூறினால் முடியாது என்று கூறி விட்டுப் போய்விடுவார்களே தவிர, "அண்ணனிடம் போ" என்று தம்பியும், "தம்பியிடம் போ!" என்று அண்ணனும் ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக் கொண்டு அதுவும் பக்கத்திலே மனைவியையும் வைத்துக் கொண்டு, கேவலமான பரிகாசத்தில் - நல்ல உணர்ச்சியுள்ள எந்த ஆண் மக்களும் இறங்க மாட்டார்கள். ஒரு வேளை, ஆரியக் கலாச்சாரத்தின்படி வேண்டுமானால் - ஆச்சாரியாரின் சமாதானம் பொருத்தமாக இருக்கலாம்.

❀★❀

# 11

# நடப்பதெல்லாம் நாராயணன் செயலா?

சூர்ப்பனகை மானபங்கம் செய்யப்பட்டது கண்ட கரன் முதலியோர் ராமனைப் பழிவாங்க முயன்று, இறுதியில் மரண மடைகிறார்கள் - ராமன் தனியொருவனாகவே நின்று அரக்கர்களின் சைன்யத்தையும் அதன் தலைவர்களையும் கொன்று குவிக்கிறான். ராமனின் சக்தியைப் பற்றி ஆச்சாரியார் எழுதுவதைக் கவனியுங்கள்:

"தெய்வமே மனித உருவத்தில் வந்து அனாதைகளுக்கு அபயம் தந்து அந்தச் சத்தியத்தைக் காக்க முனைப்பட்டால் அந்த மனிதன் எவ்வளவு செய்வான் என்பதைச் சிந்தனைச் சக்தியைக் கொண்டு காணலாம்."

**இதோடு விடவில்லை அவர் - இன்னும் படியுங்கள்:**

"ராமனை அவதாரப் புருஷனாகத்தான் கம்பரும் வால்மீகியும் எடுத்துக்கொண்டு வெவ்வேறு விதத்தில் நமக்கு நிகழ்ச்சிகளை சித்தரிக்கிறார்கள் - சில இடங்களில் தெய்வப் பிரசாதம் பெற்ற வீரனாகவும், சில இடங்களில் தெய்வமேயாகவும் எடுத்துக் காட்டுகிறார்கள்."

முன்னையக் கட்டுரைகளில் இதே ஆச்சாரியார் அவர்கள் என்ன எழுதியிருக்கிறார்? அதையும் படியுங்கள்:

"வால்மீகி ரிஷியின் காவியத்தில் ராமன் ஒரு மகா புருஷன் -ஈஸ்வர அவதாரமாக வைத்து எழுதவில்லை."

ஒரே தொடர் கட்டுரை - ஒரே பத்திரிகையில் வெளியாகிறது -1954ஆம் வருடம் மே மாதத்திலே, வால்மீகி, ராமனை அவதாரமாக

சிருஷ்டிக்கவில்லை என்கிறார். 1955ஆம் வருடம் மே மாதத்தில், கம்பரும் வால்மீகியும் ராமனை அவதார புருஷனாகவே எடுத்துக் கொண்டு எழுதியிருக்கிறார்கள் என்கிறார் - ஆச்சாரியாரின் பின்னணி வாத்யக் கோஷ்டியினர், இந்த முரண்பாட்டுக்கு என்ன பதில் சொல்வார்கள்? மூளைக் கோளாறா? - குழப்பமா? - கொஞ்சம் சிந்திக்கத் தெரிந்தவனும் இந்தக் கேள்வியைக் கேட்டுத்தானே தீருவான்? பாவம்; ஆச்சாரியார் ஏன் அநாவசியமாக இப்படி சகதியிலே காலை விட்டுக்கொண்டு சங்கடப்படுகிறாரோ தெரியவில்லை - தெரியாமலென்ன; தனது சமுதாயத்தின் நிரந்தர நல்வாழ்வுக்காக அந்த சாணக்கியர் ஆயிரமாயிரம் முரண்பாடுகளை அணைத்துக் கொள்ளவும் தயாராயிருக்கிறார். ஆனால், ஒன்று - இது, “ஏன்? எப்படி?” என்று கேள்விக்குறி எழுப்பாத பழைய காலமல்ல என்பதை மட்டும் பரிதாபத்திற்குரிய அந்தப் பார்ப்பனத் தலைவருக்கு நினைவு படுத்துகிறேன்.

**இன்னொரு வடிகட்டிய வரட்டுக் குழப்பத்தைப் பாருங்கள்:**

“நாராயணனோ தானே ராமன் என்று அறிவான். ஆனால் ராமன், தானே நாராயணன் என்றெண்ணவில்லை.”

9.1.1955 இதழில் அவரே தான் இதையும் எழுதியிருக்கிறார். இதை விவரிக்கவோ, விவாதிக்கவோ வேண்டிய அவசியமில்லை. ஆச்சாரியார் எழுதியுள்ள இந்த வரிகளுக்கு ஏதாவது தெளிவான பொருள் தெரிகிறதா என்பதைக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம் -அப்படிக் கண்டுபிடித்துச் சொல்பவர்களுக்கு - அல்லது அவர் எழுதியது சரியானதுதான் என்று விளக்கம் தருபவர்களுக்கு - சரியான பரிசு தருவதோடு, என்னுடைய தோல்வியையும் பகிரங்கமாக ஒத்துக்கொள்ளத் தயாராயிருக்கிறேன்.

நிற்க, சூர்ப்பனகை பங்கப் பட்டதையும், கரன் முதலியோர் அழிக்கப்பட்டதையும் கேள்வியுற்ற ராவணன், சீதையை அபகரிக்கத் திட்டமிட்டு, ஆஸ்ரம வாழ்க்கை நடத்தும் மாரீசன் என்னும் ராட்சச தபசியின் உதவியை நாடுகிறான் - அந்த மாரீசன், ராவணனுக்கு புத்திசொல்லி இலங்கைக்குத் திருப்பி அனுப்பிவிடுகிறான். மீண்டும் ராவணன் மாரீசனை அணுகி உதவி கேட்கிறான் மானாக உருவெடுத்து சீதையை மயக்குமாறு வேண்டுகிறான். மாரீசன் அதை மறுத்து நீண்ட உபதேசம் செய்கிறான். ராமன், தன்னையும் ராவணனையும்

அழித்து விடுவான் என்றும், பாதகச் செயல் புரிய தான் உடன்பட மாட்டேன் என்றும் மாரீசன் கூறுகிறான். மாரீசனின் 'தர்ம நியாய'ங் கலந்த மறுப்புரைகளை ஆச்சாரியாரே இரண்டு மூன்று பக்கங்கள் எழுதித் தள்ளியிருக்கிறார். மாரீசன் மறுப்பது கண்ட ராவணன், "என் இஷ்டப்படி செய்யாவிட்டால், உன்னை இங்கேயே வதம் செய்வேன்" என்கிறான்.

**மாரீசன் பேசுகிறான், கேளுங்கள் :**

"ராவணா! நான் உனக்கு இதத்தைச் சொல்லிப் பார்த்தேன் - நீ கேட்கவில்லை. நீ சொன்னதுபோல் நான் செய்தால் என் உயிர் போவது நிச்சயம். உன்னால் மாள்வதைவிட பகையாளிக்கு என் உயிரைக் கொடுத்து விடுவதுமேல்." **(23.1.1955 - 'கல்கி')**

தான் ராமனால் செத்துவிடுவோம் என்று மாரீசனுக்குத் தெரிகிறது - ராவணன் பேச்சைக் கேட்கா விட்டாலும் செத்து விடுவோம் என்றும் அவனுக்குத் தெரிகிறது - எப்படியும் சாவு இருக்கிறது - இந்த நிலையில், அவன் என்ன செய்திருக்கவேண்டும்?

ராவணனால் செத்தால், சீதைக்கும் ராமருக்கும் தொந்தரவு கொடுக்காமலே தீர்ந்துபோய்விடலாம் - ராமனால் சாவதற்குத் தயாரானால், சீதைக்கும் அவள் கணவனுக்கும் தொந்தரவுகள் கொடுத்தாக வேண்டும் என்பதோடு, ராவணனையும் தீய வழியில் புகச்செய்ய வழி வகுத்ததாகிவிடும். ஆகவே, மாரீசன் எனும் ஆஸ்ரமவாசி, ராவணன் கையாலேயே மாண்டிருக்கலாம் - ராமர் சீதை முதலியவர்களின் கொடிய வார்த்தைகளுக்கு இலக்காகி யிருக்க வேண்டியதில்லை - அவன் கருத்துப்படி 'பாபச் செய்கை'யிலிருந்தும் விடுதலை பெற்றிருக்கலாம். ஏனோ, அவன் அதைச் செய்யவில்லை. ஆச்சாரியாருக்குத்தான் வெளிச்சம்!

மாரீசன் மானாகச் சென்றான். தேனூறும் இதழ் திறந்து தேவி சீதை, "அந்த மானைப் பிடித்துத் தருக" என ராமனை வேண்டினாள். லட்சுமணனை சீதைக்குக் காவல் வைத்துவிட்டு, ராமன் மானைத் துரத்தி வெகு தூரம் போகிறான். மான் அகப்படாமல் ஓடியதால் அதன்மீது அம்பு எய்கிறான். அந்த மான் வடிவ மாரீசன், ராமன் குரல்போலத் தன் குரலை மாற்றிக் கொண்டு, "அய்யோ லட்சுமணா!" என்று உரக்கக் கத்துகிறான். அதுகண்ட ராமன்,

"ஓகோ ! இது பெரிய மோசம்; இந்த மோசத்தால் லட்சுமணன் ஏமாற்றமடைந்து சீதையைத் தனியாகக் காட்டில் விட்டுவிட்டு என்னைத் தேடிக்கொண்டு வந்து விட்டிருந்தால் பெரிய அபாயமாகுமே! சீதையை அபகரித்துக்கொண்டு போகவோ, கொன்று தின்றுவிடவோ அரக்கர்கள் இந்த மோசத்தைச் செய்திருக்கிறார்கள் என்றே தோன்றுகிறது. 'ஹா செத்தேன்' என்று என்னுடைய குரலைக் கேட்டதாக எண்ணி உடனே சீதை பயந்து லட்சுமணனை என்னிடம் அனுப்பிவிடுவாள். நரிகள் அவலட்சணமாக ஊளையிடுகின்றன. பறவைகளும் மிருகங்களும் துரதிருஷ்டக் குறிகளைக் காட்டுகின்றன. உள்ளத்தில் தைரியத்துக்கு பதில் நடுக்கமாக இருக்கிறது. நான் காண்பதெல்லாம் அபசகுனங்களாகவே இருக்கின்றன. பெரிய ஆபத்தை அடைவேன் என்றே நினைக்கிறேன்." **(13.2.1955 - 'கல்கி')**

ராமன் வருத்தமுறுவதைக் காணும்போது, சிரிப்புத்தான் வருகிறது - "அவன் மனைவியைப் பற்றி அவனுக்கல்லவா கவலை; உனக்குச் சிரிப்புத்தான் வரும்!" என்று வசை பாடாதீர்கள் ஆச்சாரியாரே! கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்! ராமனைப் போன்ற குரலில் மாரீசன் 'லட்சுமணா!'' என்று கத்திவிட்டு செத்துவிட்டான். இதைக் கேட்டு சீதை பயந்து, லட்சுமணன் நடுங்கி, அவளை தனியே விட்டு வந்துவிடுவானோ என ராமன் அஞ்சுகிறான். மாரீசன் கத்திய அதே சமயம், ஏன் ராமனும் கத்தியிருக்கக் கூடாது?

"தம்பி, லட்சுமணா! இது மானல்ல; மாரீசன் மாண்டுவிட்டான் மாபாவி! அய்யோ லட்சுமனா என்று கத்தியது நானல்ல - அவனேதான்! நீ சீதையை விட்டு விட்டு வராதே!" என்று ராமனும் கத்தியிருக்கலாமே - அப்படிக் கத்தினால் அவர்கள் காதில் விழாது என்கிறீர்களா? மாரீசன் கத்தியது காதில் விழுந்து அலறும் போது, மாரீசனைப் போன்ற ஆயிரமாயிரம் அரக்கர்களை அழிக்கும் ஆற்றல் பெற்ற ராமன் கத்துவது மட்டும் அவர்கள் காதில் விழாமல் போய்விடுமா? மகா சக்தி வாய்ந்த ராமன், மாரீசனின் ஒலியைக்கூட சீதையோ, லட்சுமணனோ கேட்கவொட்டாமல் தடுத்திருக்கலாமே - ஏன் செய்யவில்லை? ஏன் கத்தவில்லை? 'சக்கரவர்த்தித்திருமகன்' எழுதும் சக்கரவர்த்தியாரே, சரியான பதில் சொல்லுங்கள் பார்க்கலாம்.

"அய்யோ லட்சுமணா!" என்ற கூச்சலைக் கேட்ட சீதை, ராமனுக்கு ஆபத்து வந்ததாக எண்ணித் துடிக்கிறாள். லட்சுமணனை, உடனே ஓடச்

சொல்கிறாள். அவன், “இது அரக்கர் மாயை - ஆகவே நான் போகத் தேவையில்லை” என்று அநேக சமாதானங்கள் சொல்லுகிறான். இந்தக் கட்டத்தை ஆச்சாரியாரே வர்ணிக்கிறார் படியுங்கள்.

“ஜானகிக்கு உண்டானக் கோபமே கோபம்! வயிற்றில் இரண்டு கைகளாலும் அடித்துக்கொண்டு, “சுமித்திரையின் மகனே! சத்துருவாகி விட்டாயா? இவ்வளவு நாளும் வேஷம் போட்டாயா? ராமனுடைய மரணத்துக்கா இவ்வளவு நாள் காத்திருந்தாய்? அவன் இறந்தான் அவனுக்குப் பின் என்னை அடைந்துவிடலாம் என்று எண்ணி இத்தனை நாள் ஏமாற்றினாயா? துஷ்டனே, ராமன் கதறிக் கூவுவதைக் கேட்டும் போகாமல் இங்கே நிற்கிறாயே? அண்ணனிடம் நீ காட்டிக் கொண்ட பிரியமெல்லாம் பெருஞ் சூழ்ச்சியா? துன் மார்க்கனே!” என்றாள்.

“அண்ணன் ஆணை என்று சமாதானம் சொல்லி அண்ணன் கதறிக் கூவினாலும் போகாமல் அவனைச் சாகவிடுகிறாயா? ஆகா, உன்னை நம்பி என்ன மோசம் போனோம் ராமனும் நானும்! நீசனே! துஷ்டனே! ராமனுக்குப் பகையாய் வந்த வஞ்சகனே! ராமனுக்கு ஆபத்து வந்தது என்று மகிழ்ச்சி அடைகிறாயா? ஏமாற்றப் பார்க்கிறாயா? ராமனோடு நீ வனத்துக்கு வந்த நோக்கத்தை இப்போது நான் கண்டுகொண்டேன். அடே பாவி! பரதனுடைய தூண்டுதலா இது? எல்லாரும் என் நாயகனுடைய சத்துருக்கள் ஆகிவிட்டீர்களா? நீங்கள் எல்லாரும் சேர்ந்து என்ன செய்ய யோசிக்கிறீர்கள்? ராமனோடு வாழ்ந்த நான் உங்களைக் கண்ணெடுத்தும் பார்ப்பேனா? ராமன் இறந்த பிறகு ஒரு நிமிஷம் உயிருடன் இருக்கமாட்டேன், அறிவாய்!” என்றாள்.

**(30.1.1955 - ‘கல்கி’)**

கொழுந்தனிடம் ஒரு குலமகள் பேசும் பேச்சா இது? அதுவும் சாதாரணப் பெண்ணா? மகாலட்சுமியின் அவதாரம். மகா புருஷன் ராமனின் மனைவி - அவர்கள் பேசுகிறார்கள். ‘அண்ணன் போனால், அண்ணியை அடையலாம் என்று எண்ணுகிறாயா?’ எனக் கோபமாக!

சந்து முனையிலே சண்டைபோடுவதைத் தொழிலாகக் கொண்ட நாலாந்தரப் பெண்மணிகூட தன் கொழுந்தனிடம் பேசக் கூசும் வார்த்தைகளை, சங்கு சக்கராயுதபாணியின் சம்சாரம் பேசுகிறாள்

என்றால், அவர்களை எந்தப் பட்டியலிலே சேர்ப்பது? - அம்மையின் அருள் பாடும் ஆச்சாரியார்தான் பதில் சொல்ல வேண்டும். விதி, அவர்களை அப்படிப் பேசவைத்தது என்பார் அவர். விதியைக் காரணம் காட்டுவதானால், ராவணன்கூட குற்றமற்றவனாகத்தான் ஆகவேண்டும்! சீதையை அவன் சிறையெடுத்ததும் விதியின் விளையாட்டுத்தான் என்று கூறி, ராவணனை ஆச்சாரியார் போன்றவர்கள் இழித்துரைக்காமல் இருந்துவிடலாம்.

“விதியோ விதி!” என்று 49ஆம் அத்தியாயத்தில் புலம்பியவர் - “தெய்வம் எல்லா விதத்திலும் விபத்துக்கு ஏற்பாடு செய்துவிட்டது” என்று அதே அத்தியாயத்தில் கதறியவர் - 53ஆம் அத்தியாயத்தில்-

“மோகத்தாலும், மயக்கத்தாலும் தாம் செய்ய வேண்டியதை சமயத்தில் செய்யாமலும் - செய்யக் கூடாததைச் செய்தும் சீதையை இழந்தார்கள்.”

**(20.2.1955 - 'கல்கி')**

ராம, லட்சுமணர்களை ஆச்சாரியார், அவரையுமறியாமல் எவ்வளவு கேவலமாகப் பேசுகிறார் பார்த்தீர்களா? - நாராயணன் அவதாரம் என்று ராமனுக்குத் தெரியாவிட்டாலும் -ஆச்சாரியாருக்குமா தெரியாமல் போய்விட்டது? அந்த நாராயண அவதாரத்தை நாக்கில் நரம்பின்றித் திட்டுகிறாரே ஏன்?

மோகம்-
மயக்கம் -
செய்யக்கூடாததைச் செய்தல் -

கர்ணகடூரமான சொற்களால், கடவுள் அவதாரத்தை அர்ச்சிக்கிறார் ஆச்சாரியார். அதையே நாம் சொன்னால், தடை - படை எல்லாம் வருகின்றன. ‘கடைகட்டும் நேரம் - காக பட்டர் கணக்கை சரிக்கட்டும் நேரம் - கட்டுண்டோம் - பொறுத்திருப்போம்’ என்று நமக்கு நாமே ஆறுதல் கூறிக் கொள்ளும் வேளை - மிச்சமிருக்கும் சமயத்தில் ஆச்சாரியார்களுக்கு அகப்பட்ட வரையில் லாபந்தானே!

நடக்கட்டும் பிழைப்பு - எவ்வளவு நாளைக்கு என்று பார்ப்போம்;

# 12 மாரீசனைத் துரத்திச் சென்ற ராமனிடம்

மாரீசனைத் துரத்திச்சென்ற ராமனிடம் லட்சுமணனையும் அனுப்பிவிட்டு சீதை தனியாக இருக்கும்போது அங்கே சந்யாசி உருவில் ராவணன் வருகிறான். லட்சுமியின் அவதாரமான சீதை அவனைத் துறவியென நம்பி உபசரிக்கிறாள். அவன் இச்சையை வெளியிடுகிறான். சீதை நடுங்கி, கோபிக்கிறாள். பிறகு என்ன ஆகிறது? - ஆச்சாரியார் எழுதுகிறார், படியுங்கள்.

"மாறு வேஷம் நீக்கிவிட்டுத் தன் நிஜ ரூபத்தைத் தரித்துக் கொண்டான். அவள் தலைமயிரை ஒரு கையில் பற்றி மற்றொரு கையால் அவளைப் பிடித்துத் தூக்கிக்கொண்டு வனத்துக்குள் வேகமாகச் சென்று ஆயத்தமாக இருந்த தேரில் சீதையைத் தூக்கியவாறு ஏறி ஆகாயத்தில் கிளம்பிவிட்டான்." **(30.1.1955 - 'கல்கி')**

அப்படிப் போகும் வழியிலே ஜடாயு என்ற கழுகு எதிர்த்துப் போர் செய்யவே, ராவணனுடைய ரதம் உடைந்து விடுகிறது. பாவம் ; அந்த ஜடாயு போர் செய்யாமல் இருந்தாலாவது, ராவணன் சீதையை ரதத்திலேயே வைத்துத் தூக்கிக்கொண்டு போயிருப்பான். அது போர் செய்து ரதம் உடைந்துவிட்ட காரணத்தால், ராவணன் சீதையைத் தன் மெய் சேர அணைத்து, இறுக்கிப்பிடித்து, பலாத்காரமாகத் தூக்கிக் கொண்டு ஆகாயத்தில் பிரயாணம் நடத்த வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டுவிட்டது. ஒரு குலமகள் - ஆச்சாரியார் சொல்கிறபடி அவதாரத் திருமகள் - அவளை ஒருவன் சேர்த்தணைத்துத் தூக்கிக்கொண்டு போகிறான். அந்த நேரத்தில் தான் போகும் பாதையை அடையாளம் காட்டுவதற்காக சீதை ஒரு தந்திரம் செய்கிறாளாம், அந்தத் தந்திரம்

எவ்வளவு கேவலமானது என்பதை வாசகர்களே யூகித்துக்கொள்ள வேண்டும். ஆச்சாரியார் வாசகத்தை அப்படியே தருகிறேன்: படியுங்கள்.

“பல மலைகளையும் ஆறுகளையும் தாண்டிச் செல்லும் போது வழியில் ஒரு மலைமேல் யாரோ நிற்பதைக் கண்டாள் சீதை. அப்பொழுது மேலுத்திரியத்தை எடுத்துத் தன் ஆபரணங்களை அதில் முடித்துக் கீழே போட்டாள்.” **(6.2.1955 - 'கல்கி')**

மாற்றானின் பிடியிலே சிக்கியிருக்கிறாள்; தன் கற்பைக் காத்துக்கொள்ள வேண்டுமென்று துடிக்கிறாள் என்றும் ஆச்சாரியார் கூறுகிறார். இந்த நிலையில் எந்தப் பெண்ணாவது, தனது மேலாடையை எடுத்துக் கீழே போடுவாளா? - போடலாமா? - அப்படிப் போட்டால் அது எதற்கு அறி குறி? - குலப்பெண்ணுக்கு அடையாளமா அது?

சாதாரணமாக ஒரு ஆடவன், ஒரு பெண்ணைப் பார்த்தால், அந்தப் பெண்ணையுமறியாமல் அவளுடைய கை, அவளது மேலாடையை சரியாகப் போர்த்தித் திருத்தி விடுகிறது. அத்தகைய நாண உணர்ச்சி தலைகாட்டுகிறது. சொந்தக் கணவனைக் காணுகிற நேரத்திலே கூட பெண்கள், தங்கள் மேலாடையைத் திருத்திக் கொள்ளத் தவறமாட்டார்கள். சீதையோ அந்நிய புருஷனின் கையிலே அகப்பட்டு எடுத்துச் செல்லப்படுகிறாள். அந்த நேரத்திலே மேலாடையை சர்வசாதாரணமாக எடுத்து கீழே வீசுகிறாள் என்றால், அவளைப் பற்றி நாம் என்ன நினைப்பது? ராவணன்தான் என்ன நினைத்திருப்பான் ?

“அண்ணன் செத்தால் அண்ணி கிடைப்பாள் என்று பார்க்கிறாயா?” என்று லட்சுமணனைப் பார்த்துக் கேட்கிறாள். இப்போது வேறு மனிதனின் அணைப்பிலே இருந்துகொண்டு, அவளாகவே மேலாடையைக் கீழே போடுகிறாள். இந்த இரு செய்திகளும் சீதையின் நிறையை எந்த அளவுக்குக் குறைக்கின்றன என்பதை ஆஸ்திகப் பெருமக்களே சிந்தித்துப் பார்க்கட்டும். பெண்ணின் நாயகம் சீதை என்று கூறுகிற - தாய்மார்களும் இந்த இரு கட்டங்களையும் ஆராய்ந்து பார்க்கட்டும்.

ஆனால் ஆச்சாரியாரோ, சீதை செய்த தவறுகள் சீதையோடு போகட்டும் என்றிராமல், அவரே பெரும் தவறு செய்கிறார். இதோ:

நம் நாட்டில் துயரப்படும் பெண்கள் அனைவரும் சீதா தேவியின் அம்சம். **(6.2.1955 - 'கல்கி')**

என்று வர்ணிக்கிறார். துயரப்படும் பெண்கள் எல்லாம் சீதையின் அம்சமாம்! என்ன கொடுமையான வெட்கக்கேடு! என்னே கேவலமான வியாக்யானம்!!

நாட்டில் அழுது கொண்டிருக்கும் பெண்கள் எல்லாம் அயலவன் பிடியிலிருந்து மேலாடையைக் கீழே போட்டவர்களா? “அண்ணன் போனால் தம்பி பார்க்கலாம் என்று திட்டம் போடுகிறாயா?” என்று தங்கள் கொழுந்தர்களைப் பார்த்துக் கேட்டவர்களா? துயரப்படும் பெண்கள் எல்லோருமே சீதை அம்சமாமே; பிறரால் களவாடப்பட்டவர்களாமே; கணவன் ராமனின் சந்தேகத்திற்குரிய சீதையின் அம்சமாமே- பொருந்துமா? பூசுரர் தலைவரே! உமது புதிய ஆராய்ச்சி இந்த நாட்டுப் பெண்கள் குலத்திற்குப் பொருந்துமா? உமது தரப்பிலே நின்று வாதாடிப் பார்க்கிறேன். துயரப்படும் பெண்கள் எல்லாம் சீதையின் அம்சமென்றால், இளமையையும் அழகையும் இரவு ராஜாக்களுக்கு அடமானம் வைத்து, விபசார வாழ்வு நடத்தி வேதனை எரிமலைகளாக விழியிலே நீர் பெருக்கி வீதியிலே அலைகிறார்களே; அந்த வழுக்கி விழுந்த சகோதரிகள் கூட சீதையின் அம்சம்தானா? ஆச்சாரியாரே! உம்மையுமறியாமல் சீதையை அவமானப்படுத்துகிறீரே ஏன்? ‘கல்கி’, இதழிலே அவர்களுக்கு வாக்களித்தபடி நிரப்புவதற்காக எதையாவது எழுதி வைப்போம் என்ற அவசியத்தே எழுதுகிறீரா? அல்லது உமது எழுத்துக்களிலே முன்னுக்குப் பின் ஏற்படும் முரண்பாடுகள் - முதுமைக் கோளாறால் ஏற்பட்டவை என்று மக்கள் மன்னித்து விடுவார்கள் என்ற தைரியத்தில் எழுதுகிறீரா? பரிதாபம் மிகப் பரிதாபம்! காகுத்தனின் மனைவி சீதையும் - கடைத்தெரு முனையிலே நின்று கண் காட்டி வயிறு வளர்க்கும் பாவையும் ஒரே அம்சமென்று எழுதுவதற்கு உமக்கு அதிகம் துணிவுதான் இருக்கவேண்டும்!

மேலாடையைப்பற்றி கவலைப்படாத சீதையையும், மேன் மக்கள் குடிப்பிறந்த பூங்கொடிகளையும் ஒரே அம்சமென சித்தரிக்க உமக்கு மிகுந்த நெஞ்சழுத்தம் தான் இருக்கவேண்டும்!

எவ்வளவு முரண்பாடாக எழுதிக் கொட்டினாலும் - அந்தக் குப்பைகளை தலையில் வாரிப் போட்டுக்கொண்டு ஆடுவதற்கு ஆஷாடபூதிகள் திரிகிறார்கள் என்ற தைரியம் இருக்கும் வரையில் நீர் இந்நாட்டிலேயுள்ள பெண்கள் எல்லாம் சீதையின் அவதாரம் என்று மட்டுமா எழுதுவீர்; திரவுபதையின் அவதாரம் என்று கூட எழுதுவீர்!

# துரோகிகள் சந்திப்பு! 13

சீதை காணாமற் போனது கண்ட ராமன் புலம்பினான். மரஞ் செடி கொடிகளைப் பார்த்து "மனைவியைக் கண்டீரோ?" என மாரடித்து ஒப்பாரி வைத்தான்.

"சீதை அஞ்ஞானத்தால் உன்னைப் பார்த்து தகாத வார்த்தைகள் கூறினாள் என்றால்; நீ அதையும் பொறுத்துக் கொண்டு அங்கேயே காவல் புரிந்திருக்கக்கூடாதா?" என்று தம்பி லட்சுமணனைத் திட்டினான். இப்படியாக அழுது புலம்பி, கடைசியில் ஜடாயுவின் மூலம், சீதை ராவணன் வசம் இருப்பதை அறிந்தார்கள்.

எப்படி அவளை மீட்பது என்று யோசனை செய்து கொண்டு காட்டில் திரியும்போது, கபந்தன் என்னும் அரக்கன் அவர்களைப் பிடித்துக்கொண்டான். கபந்தனுக்கு தலை கிடையாது - வாயும், கண்ணும் வயிற்றிலேயே இருந்தது. கால்களும் கிடையாது; வனத்திலே செல்லும் மிருகங்களையும் மனிதர்களையும் கைநீட்டி இழுத்து வயிற்றுக்குள் போட்டுக் கொள்வது அவன் வழக்கம். அவனை ராம லட்சுமணர் கொன்று விடுகிறார்கள். கொல்லப்பட்டதும் கபந்தன் அரக்க உருவம் மாறி, தேவ உருவில் சொர்க்கலோகவாசியாக மாறி விடுகிறான்.

இந்திரனின் சாபத்தால் இப்படி ஆகிவிட்டதாகத் தன் பூர்வீகக் கதையைக் கூறிவிட்டு, ராம லட்சுமணர்கள் சீதையை மீட்க வேண்டுமானால், ரிச்யமூக மலையில் - வாலியால் துரத்தப்பட்டு ஒளிந்திருக்கும் சுக்ரீவனின் உதவியைப் பெறவேண்டுமென்றும் தெரிவித்து, விமான மூலம் சொர்க்கம் புறப்பட்டான்.

இந்தக் கபந்தன் கதையிலேயிருந்து, தேவர்கள், ராம லட்சுமணர்களாக மட்டும் அவதாரம் செய்யவில்லை; கபந்தன் போன்ற பயங்கர அரக்கர்களாகவும் அவதரித்திருக்கிறார்கள் என்பது தெளிவாகிறது!

பிறகு, ராம லட்சுமணர் சுக்ரீவனைத் தேடிப் புறப்பட்டார்கள். சுக்ரீவன் யார் தெரியுமா ? அவன் நிலைமை என்ன தெரியுமா? ராமனைப் போலவே அவனும் நாட்டையும், மனைவியையும் இழந்து பம்பா நதி தீரத்திலே உலவிக் கொண்டிருப்பவன். பரதனுக்கு நாட்டுரிமையில்லாமற் செய்ய சதிபுரிந்த ராமனும் - வாலியை ஏமாற்றி நாட்டைக் கைப்பற்றத் திட்டமிட்டு விரட்டப்பட்ட சுக்ரீவனும் துணைவரானார்கள். "என் மனைவியை நீ வாலியிடமிருந்து மீட்டுத் தா! நான் உன் மனைவியை ராவணனிடமிருந்து மீட்டுத்தருகிறேன்" என்று சுக்ரீவன் ராமனுக்கு உறுதி அளித்தான். சுக்ரீவன் ஏன் விரட்டப்பட்டான்? வாலிக்கும் அவனுக்கும் ஏன் பகை வளர்ந்தது? அந்தக் கதையை ஆச்சாரியாரே, 6.3.1955ஆம் தேதிய 'கல்கி'யில் எழுதுகிறார்: படியுங்கள் - சுக்ரீவனே கதை சொல்வது போன்ற கட்டம்-

"என் அண்ணன் வாலி வானர ராஜ்ய பட்டாபிஷேகம் பெற்று, கிஷ்கிந்தையில் அரசு புரிந்து வந்தான், மகா பராக்கிரமசாலி. அவனிடம் அன்பும் பக்தியும் குறைவின்றிச் செலுத்திக்கொண்டு, நான் யுவ ராஜனாக இருந்து வந்தேன். வாலிக்கும் மாயாவி என்கிற அசுரனுக்கும் பழைய விரோதம். ஒரு நாள் ராத்திரி அந்த அசுரன் கிஷ்கிந்தைக்கு வந்து வாலியைப் போருக்கு அழைத்தான்.

"அவன் இரவில் போட்ட கர்ஜனையைக் கேட்டுக் கோபங் கொண்டு தூங்கிக்கொண்டிருந்த வாலி எழுந்து, அவனை உடனே எதிர்க்க வெளியேறினான். நானும் அவனுக்கு உதவியாகக் கூடவே சென்றேன். நிலா வெளிச்சத்தில் நாங்களிருவரும் வருவதைப் பார்த்து மாயாவியானவன் ஓடி ஒரு குகைக்குள் நுழைந்தான். வாலியும் அவனைத் துரத்திக்கொண்டு குகைக்குள் புகுந்தான். நானும் உள்ளே புகப்போனேன். வாலி என்னை வேண்டாம் என்று தடுத்துவிட்டான். தான் ஒருவனாகவே அந்தத் துஷ்டனைக் கொல்ல வேண்டும் என்று சொல்லி, என்னை அந்தக் குகையின் வாயிலில் வெளியே நிற்கச் சொன்னான், சொல்லிவிட்டு அவன் உள்ளே புகுந்து சென்றான்.

உள்ளே சென்றவன், பல நாட்களாகியும் திரும்பி வரவில்லை. அண்ணனுக்கு என்ன நேர்ந்ததோ என்று நான் கவலைப்பட்டுக் கொண்டிருந்த சமயத்தில் குகைக்குள் அசுரர்களுடைய பெருங் கூக்குரல் கேட்டது. அதன்கூடக் குகையிலிருந்து 'ரத்த வெள்ளம்

பெருகி வந்தது'. இதைக் கண்டதும் வாலியை, மாயாவியும் பல அசுரர்களும் சூழ்ந்து கொன்று விட்டார்கள் என்று தீர்மானித்துக் கொண்டேன். அசுரர்கள் வந்து என்னையும் தாக்குவார்கள் என்று எண்ணி ஒரு பெரும் பாறாங்கல்லைக் குகை வாயிலில் வைத்து மூடி விட்டேன்.

“கிஷ்கிந்தைக்கு வருத்தத்தோடு திரும்பினேன். வாலி இறந்தான் என்று யாருக்கும் சொல்லாமலே ராஜ காரியங்களைப் பார்த்து வந்தேன். பிறகு வானரப் பிரஜைகள் நிர்ப்பந்தித்தார்கள். 'அரசனில்லாமல் போனால் ராஜ்யம் பாழாகப் போகும்; வெகு நாளாகியும் வாலி திரும்பவில்லை; நீயே பட்டாபிஷேகம் செய்து கொண்டு அரசு புரிவாய்' என்று வற்புறுத்தினார்கள், நானும் அதற்கு இணங்கினேன்.

“சில காலம் கழித்து மாயாவியையும் அவனுடைய துணையாட்களாக இருந்த அசுரர்களையும் கொன்று ஒழித்து விட்டு வாலி திரும்பினான். குகை அடைபட்டிருப்பதைப் பார்த்து, “சுக்ரீவா! சுக்ரீவா!” என்று உள்ளேயிருந்து கத்திப் பார்த்தான். நான் அவ்விடமில்லையானபடியால் எனக்கு இது ஒன்றும் தெரியாது. அவன் என்மேல் மகா கோபங் கொண்டு கற்பாறையை உதைத்துத் தள்ளி விட்டுக் கிஷ்கிந்தைக்குள் பிரவேசித்தான்.

“நான் ராஜ்ய பட்டாபிஷேகம் செய்துகொண்டு அரசு புரிவதைப் பார்த்ததும் அடங்கா சினம் மேலிட்டு என்னைப் பலவாறாகத் திட்டினான். நான் நடந்ததை நடந்தது போலச் சொன்னேன். 'அரக்கன் உன்னைக் கொன்றுவிட்டான் என்று எண்ணி இவ்விதம் செய்தேன். பிரஜைகளுடைய நிர்ப்பந்தத்துக்காக அபிஷேகம் பெற்றேன். இந்த ராஜ்யம் உன்னுடையது; திரும்பப் பெற்றுக்கொள், உன் அடிமையாக நான் முன்போல் இருப்பேன்' என்று சொல்லி அவன் காலில் விழுந்தேன். அவனோ நான் சொன்னதை லட்சியமே செய்யவில்லை. நான் துராசைப் பட்டுக் குகை வாயிலை அடைத்து விட்டு அக்கிரமமாகப் பட்டாபிஷேகம் செய்து கொண்டேன் என்றே அவன் நினைத்து, என்னை நகரத்திலிருந்து வெளியே துரத்தி விட்டான். 'திரும்பி இந்தப் பக்கம் வந்தால் உன்னைக் கொல்வேன்' என்று சொல்லி என்னைத் துரத்திவிட்டான். அப்போது நான் உடுத்தியிருந்த வஸ்திரத்துடன் வெளியே ஓடினேன். அதுமுதல் காடும் மலையுமாக மறைந்து

திரிந்து உயிரைக் காப்பாற்றிக்கொண்டு வருகிறேன். எல்லாம் இழந்து இந்த நிலையிலிருக்கிறேன். இந்த நான்கு வானரர்களே எனக்குத் துணையாக இருந்து வருகிறார்கள். கோபத்தால் உண்மையையறிய மாட்டாமல் என் அண்ணன் இம் மாதிரி அக்கிரமம் செய்து வருகிறான். மகா பராக்கிரமசாலியான அந்த வாலியை ஹதம்செய்து என்னைக் காப்பாற்றுவாய்'' என்றான் சுக்ரீவன்.

**இது ஆச்சாரியார் தீட்டியுள்ள கதை!**

இதில் சுக்ரீவன் பேச்சில் ஒரு துளியாவது உண்மையிருக்கிறதா என்று கவனியுங்கள். மாயாவி என்ற அசுரனோடு, வாலி, தனியே சென்று சண்டை போடுகிறான். குகையிலேயிருந்து ரத்தவெள்ளம் பெருகி வந்திடுகிறது அது வாலியின் ரத்தந்தான் என்று கருதி, அவன் இறந்து விட்டதாகச் சுக்ரீவன் கருதுகிறான். குகையினுள்ளே இரு தரப்பாரும் சண்டை போடுகிறார்கள். அதிலும் வாலி, யாராலும் வெல்லப்பட முடியாத வீரன் என்பது சுக்ரீவனுக்கே தெரியும். ஹிமவானாலும் சமுத்திர ராஜனாலும் ஜெயிக்க முடியாத ஆயிரம் யானைகளின் பலம்பெற்ற துந்துபி என்ற எருமை வடிவ அசுரனை ஒரே அடியில் வீழ்த்தி ஒரு யோசனை தூரத்திற்கப்பால் வீசி எறிந்த வீரன் வாலி என்பதை சுக்ரீவனே ராமனிடம் கூறுவதாக ஆச்சாரியார் 13.3.1955 இதழில் குறிப்பிட்டிருக்கிறார். அத்தகைய பலம் பொருந்திய வாலியின் ரத்தம் வழிந்தோடி வருவதாக சுக்ரீவன் நினைத்திருக்க முடியுமா? - சரி! அப்படியே அண்ணன் இறந்து விட்டதாகத் தவறாகக் கருதினாலும், தம்பி என்ன செய்திருக்க வேண்டும்? 'அண்ணனே போன பிறகு எனக்கென்ன வாழ்வு?' என்று தன் சேனைகளைத் திரட்டி அமைச்சர் அனுமானுடன் குகைக்குள்ளே நுழைந்து, மாயாவியை எதிர்த்திருக்க வேண்டாமா? - அதைவிட்டு குகையின் வாயிலிலே பெரிய பாறையை வைத்து அடைத்து வந்தது என்ன நியாயம்? - ராஜ்யத்தை அபகரிக்க வாலி எப்போது ஒழிவான் என்று சுக்ரீவன் எதிர்பார்த்துக் கொண்டிருந்திருக்கிறான் என்பதுதானே உண்மை!

இப்பேற்பட்ட மோச குணமும், பாசமற்ற நெஞ்சங் கொண்ட சுக்ரீவனைத் தன் தோழனாக ராமன் பெறுகிறான் என்றால், ராமனின் உள்ளம் பற்றி நாம் என்ன நினைப்பது ? அழியாத பாசமுள்ள தம்பியாக லட்சுமணனைப் பெற்றிருக்கிற அண்ணன் என்று பாராட்டப்படுகிற

ராமன், அண்ணனுக்குத் துரோகம் செய்த துரோகி சுக்ரீவனின் துணையைக் கோருவது எவ்வகையில் பொருத்தமுடையது? -என்பதை ஆச்சாரியார்தான் விளக்க வேண்டும். அண்ணனுக்கும், அரக்கனுக்கும் போர் நடந்ததாம். ரத்த வெள்ளம் குகை வழியே புரண்டு வந்ததாம். அரக்கன் செத்ததாக நினைக்காமல், அண்ணன் செத்ததாக நினைத்தானாம், தன்னுயிரைக் காத்துக்கொள்ள குகையை மூடிவிட்டானாம். பிரஜைகள் விரும்பினார்களாம் முடி சூட வேண்டுமென்று! அவனும் சூடிக் கொண்டானாம்! அண்ணன் திரும்பி வந்ததும் உண்மையைச் சொன்னானாம்; அவன் கேட்கவில்லையாம்! அகப்பட்டுக்கொண்ட பிறகு - சதி வெளிப்பட்ட பிறகு - தப்பித்துக் கொள்ள போலி நாடகம் ஆடியிருக்கிறான் துரோகி! அவனுக்குத் துணைவனாகிறான் ராமன்! இங்கே ஆச்சாரியார் மழுப்புகிறார்.

"வாலியின் நடவடிக்கையிலும் பெருங்குற்றமில்லை! சுக்ரீவனின் காரியங்களிலும் பெருங் குற்றம் சொல்வதற்கில்லை." **(6.3.1955 - 'கல்கி')**

ஆச்சாரியாரின் தீர்ப்பு இது! - அப்படியானால், இரு சகோதரர்களுக்கும் சமாதானம் செய்து வைத்து, இருவரின் துணையையும் பெறுவதுதானே இராமன் செய்கையாக இருந்திருக்க வேண்டும்! அப்படியில்லையே; ராமனின் செயல்! ஏன்? ஏன் ஆச்சாரியாரே; ஏன்?

# 14 காரியமாகும் வரையில் காலைப் பிடி!

வாலியின் மார்பில் குத்தி நின்ற பாணத்தை நீலன் மெள்ள அகற்றினான். உடனே காயத்திலிருந்து மலையருவிபோல ரத்தம் பொங்கி, வாலியின் உயிர் உடலைவிட்டுப் பிரிந்தது. அவன் மனைவி தாரை, 'அய்யோ!' என அலறி அழுதாள். "அங்கதா! உன் தகப்பனைக் கடைசித் தடவையாக வணங்குவாய்!" என்றாள். "உங்களுடைய பிரிய மகன் வணங்கி நிற்கிறானே! அவனுக்கு ஒன்றும் சொல்லமாட்டீர்களா? நான் விதவையானேன். மகனும் திக்கற்றுப் போனான்!" என்று இதயம் உடைந்த தாரை பிரலாபித்தாள்.

வாலியின் உடல் மலையெனச் சாய்ந்து கிடந்தது. இந்த நேரத்தில் சுக்ரீவனும் கலங்குகிறான். அவன் கலக்கத்தை ஆச்சாரியார் வர்ணிக்கிறார்; பாருங்கள்.

"எனக்குள் மறைந்து நின்று உள்ளே வேலை செய்து வந்த ஆசை என் புத்தியைக் கெடுத்துவிட்டபடியால் அல்லவோ நன்றாக ஆலோசியாமல், வாலி புகுந்த குகையின் வாயிலை மூடிவிட்டு அண்ணனுடைய சம்பத்தை அபகரித்துக்கொண்டு ஆனந்தமாக அனுபவித்தேன்" என்று தனக்குள் சிந்திக்கலானான். (27.3.1955 - 'கல்கி')

இதிலிருந்து விளங்குவது என்ன? சுக்ரீவன் ஆசையின் காரணமாக புத்தி தடுமாறி வாலியை ஒழித்துவிட குகையை மூடினான் என்பதுதான் உண்மையாயிருக்க வேண்டுமென்று நாம் குறிப்பிட்டது சரியாகத் தோன்றுகிறது - இல்லையா? இத்தகைய இழிகுணம் படைத்த சுக்ரீவனுக்குத்தான் துணையாக நின்றான் இராமச்சந்திர மூர்த்தி

என்பதை எண்ணும்போது அவன்பால் எப்படித்தான் பக்தி பிறக்கிறதோ, பஜனைப்பித்தர்களுக்கு - நாமறியோம்.

வாலி சாவுக்குப் பிறகு மழைக்காலம் ஆரம்பமாகி விட்டது. அதனால் சீதையைத் தேடும் முயற்சியை ஒத்திவைத்துவிட்டு, ராம லட்சுமணர் பக்கத்திலிருந்த ஒரு மலைக் குகையில் காலங்கழித்தார்கள். சுக்ரீவன் முதலியோர் கிஷ்கிந்தா புரத்தில் சுகமாக காலங்கழித்தார்கள். அதுவும் எப்படி? ராஜகாரியங்களை யெல்லாம் மந்திரிகளிடம் ஒப்புவித்துவிட்டு, சுக்ரீவன் அந்தப்புர போகத்தில் மூழ்கிக் கிடந்தான் என்று ஆச்சாரியாரே எழுதுகிறார், 3.4.1955ஆம் நாள் இதழில்!

மழைக்காலமும் முடிந்து விட்டது. சுக்ரீவன் சொன்னபடி சீதையைத் தேடும் முயற்சி ஆரம்பமாகவில்லை. ராமனுக்கு அதனால் கோபம் பொங்குகிறது. அந்தக் கோபத்திலே உதிரும் வார்த்தைகளை ஆச்சாரியார் பொறுக்கித் தருகிறார்; படியுங்கள்!

"உலகமெல்லாம் சவுந்தர்யமும் மகிழ்ச்சியுமாக இருக்கிறது. சீதை எங்கேயோ தவித்துக்கொண்டிருக்கிறாள். நானோ இங்கே - நன்றி மறந்த வானர ராஜனுடைய தயவை எதிர்பார்த்துக்கொண்டு சும்மா கிடக்கிறேன். இந்த வானர ராஜனோ மதுபானத்தில் மூழ்கி, பெண்களோடு கூடி கிராமிய சுகத்தில் ஈடுபட்டு, எனக்குத் தந்த வாக்கை முற்றிலும் மறந்துவிட்டான். இந்த வானர ராஜன் ஒரு கயவனாகத் தோன்றுகிறான்."

**(3.4.1955 - 'கல்கி')**

ராமனுடைய நண்பன் சுக்ரீவன் எத்தகையவன் என்பதை ராமனே விளக்குகிறான் மேற்கண்டவாறு. ராமன் கோபிப்பான் எனக்கண்ட அனுமான், சுக்ரீவனை எச்சரித்து அவனை சீதையைத் தேட அழைக்கிறான். இதற்குள் ராமனுடைய உத்தரவுப்படி லட்சுமணன் கோபாவேசமாகப் பிரவேசிக்கிறான். "உன் அண்ணனை அனுப்பிய இடத்திற்கு உன்னையும் அனுப்புவேன் - என்று சொன்னதாகச் சொல்" என்றல்லவா ராமன் லட்சுமணனிடம் கூறி அனுப்பியிருக்கிறான்!

ஆகவே லட்சுமணன் ஆயுதபாணியாக ஆக்ரோஷத்துடன் புறப்பட்டு விட்டான். லட்சுமணன் வரும் செய்தியை சுக்ரீவனிடம் வானரர் கூறி நடுங்கினார்கள். "வானர ராஜனோ கள்ளும் ஸ்திரிகளுமாக அந்தப்புரத்தில் மயங்கிக் கிடந்தான். வானரர் சொன்னது அவன்

காதில் ஏறவில்லை" என்கிறார் ஆச்சாரியார். சுக்ரீவனின் அலட்சியம் லட்சுமணனைப் புயலாக மாற்றுகிறது வில்லின் நாணையிழுத்து ஒலி எழுப்புகிறான். ஒலி முழக்கம் கேட்டு சுக்ரீவன் நடுங்கி, தாரையை லட்சுமணனிடம் சமாதானம் பேச அனுப்புகிறான்.

தாரையின் பேச்சைக் கேட்டு லட்சுமணனும் சமாதானமடைகிறான். சமாதானம் பேசவரும் தாரையைப் பற்றி ஆச்சாரியார் கூறுவதைக் கேளுங்கள்:

"அழகிலும், உலக விஷயங்களைப் பற்றிய சாமர்த்தியத்திலும், பேச்சு நயத்திலும் அவளுக்குச் சமானம் யாருமில்லை. அவள் லட்சுமணனைச் சமாதானப்படுத்துகிறாள்." **(3.4.1955 - 'கல்கி')**

போருக்கு வருகிறவனை சமாதானப்படுத்த வேண்டிய ஒரு பெண்ணுக்கு மேற்கூறிய திறமைகளோடு, அழகும் தேவையென்று ஆச்சாரியார் கருதுகிறார் போலும்!

அதனால்தான் தாரையின் அழகுக்கு முக்கியத்துவம் தரவேண்டிய நிலைமைக்கு அவர் ஆளாகிறார். சமாதானமடைந்த லட்சுமணன் சுக்ரீவனோடு அளவளாவுகிறான். தங்கள் காரியம் நடக்கவேண்டுமென்பதற்காக ஆரியர்கள் எதையும் செய்வார்கள் -எதையும் பேசுவார்கள் என்பதற்கு இதோ ஓர் எடுத்துக்காட்டு!

சுக்ரீவன் சீதையைத் தேடாமல், சிருங்கார போகத்தில் ஆழ்ந்து கிடக்கிறான் எனக் கேள்விப்பட்ட ராமன், அவனை ஒரு நன்றிகெட்ட கயவன் என்று தூற்றுகிறான் – லட்சுமணனோ போருக்குப் புறப்படுகிறான் சுக்ரீவனோடு! சுக்ரீவன், சீதையைத் தேட புறப்பட்டதும், லட்சுமணன் என்ன பேசுகிறான் தெரியுமா, சுக்ரீவனைப் பற்றி?

"சுக்ரீவா! உன்னைப்போன்ற தீரன் ராமனைத் தவிர வேறு யாருமில்லை. ரிச்யமுகம் வந்து ராமனைக் கண்டு அவன் துயர்தணிக்கும் வார்த்தைகளைச் சொல்வாயாக!" என்றான். **(3.4.1955 - 'கல்கி')**

சுக்ரீவன் வந்ததும் ராமன் என்ன சொல்லுகிறான் தெரியுமா?


"உன்னைப் போன்ற நண்பன் உலகில் வேறொருவனில்லை. உன் நட்பை நான் சம்பாதித்தது என் பாக்கியம்." **(3.4.1955 - 'கல்கி')**

என்று வர்ணிக்கிறான் சுக்ரீவனைப் பற்றி! இதிலிருந்து, தங்கள் காரிய சாதனைக்காக கயவர்களின் காலைப் பிடிக்கவும் தயாராக இருந்தார்கள் சக்கரவர்த்தியின் திருமகன்கள் என்பது தெளிவாகிறது. அதனால்தான் சகோதரத் துரோகியும், கயவனும், நன்றி கெட்டவனுமான சுக்ரீவனிடத்திலே ராம லட்சுமணர் தோழமை பூண்டொழுகியிருக்கிறார்கள் என்பதும் புலனாகிறது.

40482

8 294.5922
கருணா

பகுத்தறிவு, சமூகநீதி, வாழ்வியல்
அறிய படியுங்கள், படியுங்கள்...



தோற்றம் : 1935

விடுதலை

உலகின் ஒரே பகுத்தறிவு நாளேடு

www.viduthalai.in



“பல மலைகளையும் ஆறுகளையும் தாண்டிச் செல்லும் போது வழியில் ஒரு மலைமேல் யாரோ நிற்பதைக் கண்டாள் சீதை. அப்பொழுது மேலுத்திரியத்தை எடுத்துத் தன் ஆபரணங்களை அதில் முடித்துக் கீழே போட்டாள்.” (6.2.1955 - ‘கல்கி’)

மாற்றானின் பிடியிலே சிக்கியிருக்கிறாள்; தன் கற்பைக் காத்துக்கொள்ள வேண்டுமென்று துடிக்கிறாள் என்றும் ஆச்சாரியார் கூறுகிறார். இந்த நிலையில் எந்தப் பெண்ணாவது, தனது மேலாடையை எடுத்துக் கீழே போடுவாளா? - போடலாமா? - அப்படிப் போட்டால் அது எதற்கு அறி குறி? - குலப்பெண்ணுக்கு அடையாளமா அது? சாதாரணமாக ஒரு ஆடவன், ஒரு பெண்ணைப் பார்த்தால், அந்தப் பெண்ணையுமறியாமல் அவளுடைய கை, அவளது மேலாடையை சரியாகப் போர்த்தித் திருத்தி விடுகிறது. அத்தகைய நாண உணர்ச்சி தலைகாட்டுகிறது. சொந்தக் கணவனைக் காணுகிற நேரத்திலே கூட பெண்கள், தங்கள் மேலாடையைத் திருத்திக் கொள்ளத் தவறமாட்டார்கள். சீதையோ அந்நிய புருஷனின் கையிலே அகப்பட்டு எடுத்துச் செல்லப்படுகிறாள். அந்த நேரத்திலே மேலாடையை சர்வசாதாரணமாக எடுத்து கீழே வீசுகிறாள் என்றால், அவளைப் பற்றி நாம் என்ன நினைப்பது? ராவணன்தான் என்ன நினைத்திருப்பான்?

**- இந்நூல் பக்கம் 70**

9 997720 145467

நன்கொடை: ரூ.50/-